
சுவடி : 44
ஏடு : 3
செப்டம்பர் 2019
*
ஆசிரியர்
**வே.ஆனைமுத்து**
*
ஆசிரியர் குழு
**க. முகிலன்**
**வாலாசா வல்லவன்**
**வையவன்**
**சி. பெரியசாமி**
**கோவிராமலிங்கம்**
**சி. நடராசன்**
**மங்கலம் அரசன்**
**தி.துரைசித்தார்த்தன்**
**ஆ. முத்தமிழ்ச்செல்வன்**
*
அனைத்துத் தொடர்புகளுக்கும்
**'சிந்தனையாளன்'**
**பெரியார்-நாகம்மை அறக்கட்டளை**
மனை எண்.277/2
சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை,
பெரியார்-நாகம்மை நூலகம்
அம்பத்தூர், சென்னை - 600 050.

தொடர்புக்கு :
**94448 04980**
**95975 26990**

மின்னஞ்சல் :
sinthanaiyalantamilmonthly
@gmail.com
*
இதழ் வடிவமைப்பு :
**சன் நகலகம்**, சென்னை-5.
9840015179
*
இணையத்தில் படிக்க
**www.keetru.com**
*

# புத்தர், புலே, பெரியார், அம்பேத்கர் பாடுபட்டும் பிறவி நால்வருண இழிவு ஒழியவில்லை!

# பெரியார், அம்பேத்கர், லோகியா பாடுபட்டும் பிற்படுத்தப்பட்டோருக்கும், பட்டியல் வகுப்பினருக்கும் அரசு நிருவாகங்களில் உரிய பங்கு கிடைக்கவில்லை!



புத்தர் காலந்தொட்டு, பிறவி நால்வருண வேறுபாட்டை எதிர்த்து இங்குப் போராட்டம் நடக்கிறது. மகாத்மா புலே 1870இல் நால் வருணத்தை எதிர்த்தார்; தந்தை பெரியார் 1922இல் நால் வருணத்தை எதிர்த்தார்; மேதை அம்பேத்கர் நால் வருணத்தைக் கண்டித்து, 1927இல் மனுஸ்மிருதியை எரித்தார்.

ஆனாலும் வெள்ளையன் வெளியேறிய பிறகு, சுதந்தர நாட்டுக்குச் செய்யப்பட்ட அரசமைப்புச் சட்டம் கெட்டியாக நால் வருணத்தைக் காப்பாற்றுகிறது.

இந்திய அரசமைப்புச் சட்டத்தில், பாகம் 3. அடிப்படை உரிமைகள் பற்றியது. அதில் விதி 13 (3) (a) உட்பிரிவில், ''சட்டம் என்பது எந்தவொரு அவசரச் சட்டம், ஆணை, துணை விதி, விதி, ஒழுங்குமுறை, ஆணை, அறிவிக்கை, வழக்கம் அல்லது பழக்கம் என்கிற பேரால் இந்திய எல்லைக்குள் நடப்பில் இருக்கிற சட்டமாகும்''

அதேபோல் அதன் (b) உட்பிரிவில் "Law in Force" என்பது ''இந்தச் சட்டம் நடப்புக்கு வருவதற்கு முன்னர், சட்டமன்றத்தாலோ அல்லது தகுதி வாய்ந்த அதிகாரத்தாலோ செய்யப் பட்ட சட்டத்தைக் குறிக்கும். அச்சட்டம் இதற்கு முன் நீக்கப்படாமலோ அல்லது இந்தியாவின் எந்தப் பகுதியிலும் நடப்பில் இல்லாமலோ இருந்த சட்டத்தைக் குறிக்கும்'' என்று குறிக்கப்பட்டுள்ளது.

**அதாவது பழைய பழக்கம் வழக்கம் என்பது இன்றும் இந்த அரசமைப்புச் சட்டம் நடப்புக்கு வந்த பிறகும் செல்லுபடியாகும் என்று பொருளாகும்.**

**அதேபோல் விதி 372 (3) (b) உட்பிரிவில் இதே கருத்து (Explanation)-1 ''விளக்கம்'' என்கிற தலைப்பில் குறிக்கப்பட்டுள்ளது.**

மேலே கண்ட அரசமைப்புச்சட்ட விதிகளின்படி தென்னாட்டில் பிராமணன், சூத்திரன் என்கிற இரண்டு வருணங்கள் மட்டுமே உண்டு. தென்னாட்டில் பார்ப்பனர் 3 விழுக்காடு மட்டுமே. வட இந்தியாவில் பிராமணன், சத்திரியன், வைசியன், சூத்திரன் என்கிற நால் வருணங்கள் உண்டு.

**பார்ப்பனன் பிறப்பினாலேயே பார்ப்பனன் (A Brahmin is born) என்று இன்றும் சட்டத்தில் உள்ளது. இந்த நீதி 2500 ஆண்டு காலமாக உள்ளது.**

இந்தியாவில் சூத்திரர், ஆதிசூத்திரர் என்கிற தீண்டப்படாதார், பழங்குடிகள் ஆகிய இவர்கள் எல்லோரும் உடல் உழைப்புச் சாதிகள்; சூத்திரர்கள்; கல்வி உரிமை மறுக்கப்பட்டவர்கள். ஆதி சூத்திரர் என்கிற தீண்டப்படாதார் எல்லா

உரிமைகளும் மறுக்கப்பட்டவர்கள். இம் மூன்று பிரிவு மக்களும் அரசு நிர்வாகங்களில் பங்கு பெறாதவர்கள்.

தென்னாட்டில் 1921 முதல் பார்ப்பனரல்லாதார், பார்ப்பனர், கிறித்தவர், முகமதியர், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் என சமுதாயத்தின் 5 பிரிவினருக்கும் 100 விழுக்காடு இடங்களும் பங்கிட்டுக் கொடுக்கப்பட்டன. இது 1928இல்தான் நடப்புக்கு வந்தது. இந்த ஏற்பாடு 1947 நவம்பர் 20ஆம் நாள் வரையில் நீடித்தது.

**தந்தை பெரியார் அவர்களின் கோரிக்கையை ஏற்று முதன் முதலில் 1947 நவம்பர் 21ஆம் நாள் பார்ப்பன ரல்லாத இந்துப் பிற்படுத்தப்பட்டோருக்கு 14 விழுக்காடு வழங்கப்பட்டது. பிறகு அது காமராசர் ஆட்சியில் 25 விழுக்காடாக உயர்த்தப்பட்டது.**

தந்தை பெரியார் அவர்கள் 1969இல் வைத்த கோரிக்கையை ஏற்று, தி.மு.க. ஆட்சியில் கலைஞர் மு.கருணாநிதி 7.6.1971இல் பிற்படுத்தப்பட்டோருக்கு 25 விழுக்காடாக இருந்த இடஒதுக்கீட்டை 31 விழுக் காடாக உயர்த்தினார்.

மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி 19.8.1979இல் வைத்த கோரிக்கையை ஏற்று, அ.தி.மு.க. ஆட்சியில், அப்போதைய முதலமைச்சர் எம்.ஜி.ஆர். 31 விழுக்காட்டை 1.2.1980இல் 50 விழுக்காடாக உயர்த்தினார்.

இவ்வளவு ஏற்பாடும் தந்தை பெரியாராலும் அவரு டைய தொண்டர்களாலும் மட்டுமே சாதிக்கப்பட்டது.

ஆனால், இந்தியத் துணைக்கண்டத்தில் இந்திய அரசமைப்புச்சட்டம் 26.1.1950 இல் நடைமுறைக்கு வந்த பிறகும்

1. எந்த வடமாநிலத்திலும் சமூகத்திலும் கல்வி யிலும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 1977 வரை இட ஒதுக்கீடு வழங்கப்படவில்லை.
2. மத்தியஅரசில், விதி 15(4) இன்படி, கல்வி யிலோ, விதி 16(4)இன்படி வேலையிலோ பிற்படுத்தப் பட்டவர்களுக்குக் கோரிக்கை வைத்துப் போராட எந்த இயக்கமும் 1978 வரை முன்வரவில்லை.

இந்த நிலையில்தான், 17.9.1978 முதல் 18.10.1978 வரையில் 32 நாள் பீகார் மாநிலத்தில், மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சித் தோழர்கள், பீகார் மாநிலப் பிற்படுத்தப்பட்டோர் பேரவையின் தலைவர் இராம் அவதோஷ்சிங் ஏற்பாட்டில், 32 நாள் தொடர் பரப்புரை செய்தனர். அதைத் தொடர்ந்து தலைநகர் பாட்னாவில் காந்தி மைதானத்தில் 10 நாள் தொடர் சிறை நிரப்பும் போராட்டமும் நடைபெற்றது; 10 ஆயிரம் பேர் சிறைப்பட்டனர்.

**இதன் விளைவாக அப்போதைய பீகார் முதலமைச்சர் கர்ப்பூரி தாகூர் அவர்கள், பீகார் மாநிலப் பிற்படுத்தப் பட்டோருக்கு மாநில அரசில் 11.11.1978இல் 20 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கினார். அதுவே, வட மாநிலத்தில், நம் பரப்புரையினாலும் பீகார் மக்களின் போராட்டத்தினாலும் முதன்முதலாக வழங்கப்பட்ட பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீடாகும்.**

அதைப் பின்பற்றி வடமாநில அரசுகள் வேலையில் பிற்படுத்தப்பட்டோருக்கு இடஒதுக்கீடு அளிக்கத் தொடங்கின. சனதாக் கட்சி ஆட்சிக்கு வந்ததால் உத்தரப்பிரதேசத்தில் 1977இல் பிற்படுத்தப்பட்டோருக்கு அம்மாநிலத்தில் இடஒதுக்கீடு வழங்கப்பட்டது.

ஆனால் விதி 15(4) இன் படியும், விதி 16(4) இன் படியும் மத்திய அரசின் கல்வியில் இட ஒதுக்கீடும் வேலையில் இட ஒதுக்கீடும் பிற்படுத்தப்பட்டோருக்கும் உண்டு என்கிற உண்மை பிற்படுத்தப்பட்ட நாடாளு மன்ற உறுப்பினர்களுக்கோ மற்ற உறுப்பினர்களுக்கோ தெரிந்திருக்கவில்லை.

அவர்களுக்கு இந்த உண்மையைத் தெரிய வைப்ப தற்காகவே தில்லியில் மார்க்சியப் பெரியாரியப் பொது வுடைமைக் கட்சித் தோழர்களும், இராம் அவதேஷ் சிங் அவர்களும் 23.3.1979இல் பேரணியும் மாநாடும் நடத்தி, அந்நிகழ்வில் பெரியாரின் கட்டுரைகளையும் பேச்சுக்களையும் இந்தியில் மொழியாக்கம் செய்து பிற்படுத்தப் பட்டோருக்கு ஏன் இட ஒதுக்கீடு? என்னும் நூலும் வெளியிடப்பட்ட பின்னர்தான், வடநாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உண்மை தெரிந்தது; உணர்வு வந்தது.

1989-இல் பிரதமர் மொரார்ஜி தேசாய் பீகார் மாநிலப் பயணத்தில் கற்ற பாடத்தின் விளைவாக, 20.12.1978-இல் இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தை அமைப்போம் என்று நாடாளுமன்றத் தில் அறிவித்தார். அதன்படி 1.1.1979-இல் மண்டல் தலைமையில் அந்த ஆணையம் அமைக்கப்பட்டது. பிரதமரை 25.3.1979இல் பிரதமரின் இல்லத்தில் அனைத்து இந்தியத் தலைவர்கள் சார்பில் வே.ஆனை முத்துவும், இராம் அவதேஷ்சிங்கும் சந்தித்து, மனு கொடுத்து விளக்கிச் சொன்ன பிறகுதான், ‘‘பிரதமர் மண்டல் பரிந்துரையை அறிக்கை கிடைத்த பின் அமல்படுத்துவேன்’’ எனக் கூறினார்.

பிரதமர் சரண்சிங் அவர்களை வே.ஆனைமுத்து, இராம்அவதேஷ் சிங் இருவரும் 25.9.1979இல்

சந்தித்துக் கோரிக்கை மனு அளித்தனர். "ஆய்வு செய்யவும்" என்று அந்த மனுவில் பிரதமர் சரண்சிங் குறிப்பு எழுதி, அதைச் சட்ட அமைச்சர் கக்கர் அவர் களுக்கு அனுப்பினார்.

மண்டல் குழுவின் அறிக்கை 31.12.1980இல் அரசுக்கு அளிக்கப்பட்டது. ஆனால் அந்த அறிக்கை நாடாளுமன் றத்தில் வெளியிடப்படவில்லை. இவ்வளவுக்கு இடையே உள்துறை அமைச்சர் கியானி ஜெயில் சிங், 25.1.1982 ஆம் நாள் வே.ஆனைமுத்துவை நேரில் தில்லிக்கு அழைத்துப்பேசி உண்மை நிலையை அறிந்து, பிற்படுத் தப்பட்டோருக்கு மய்ய அரசில் இடஒதுக்கீடு கிடைத்திட நான் எல்லா உதவிகளையும் செய்வேன் என்று உறுதி கூறி அதன்படியே மண்டல் குழு அறிக்கையை 30.4.1982இல் நாடாளுமன்றத்தில் வெளியிட்டார்.

இவ்வளவு செயல்களும் நடந்தாலும், பிரதமர் வி.பி.சிங் பிரதமராக வருகிற வரையில் மண்டல் பரிந்துரையை நடப்புக் கொண்டு வர வேறு எவரும் முன் வரவில்லை.

இந்த இடைவெளியில் பிற்படுத்தப்பட்டோர் பேரவையின் தலைவரான இராம் அவதேஷ்சிங் 1986 முதல் 1992 வரையில் மாநிலங்களவை உறுப்பினராக இருந்தார். அப்போது பிரதமர் வி.பி.சிங் அமைச்சரவையில் அமைச் சராக இருந்த இராம்விலாஸ் பஸ்வான் மண்டல் பரிந்து ரைகள் ஆய்வு பற்றிய பொறுப்பில் இருந்தார். அவரை 22.3.1990இல் வே.ஆனைமுத்து, இராம் அவதேஷ் சிங் இருவரும் தில்லியில் சந்தித்து மய்ய அரசின் கல்வியிலும் வேலையிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பி னருக்கு இடஒதுக்கீடு அளிக்கும்படி வற்புறுத்தினர்.

மேலும் ஒவ்வொரு நாளும் இராம் அவதேஷ் சிங், நாடாளுமன்றத்தில் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு சென்று பிரதமர் வி.பி.சிங் அவர்களின் கவனத்தை ஈர்த்தார். நாடாளுமன்றத்தில் குடிஅரசுத் தலைவர் இரா.வெங்கட்ராமன் தம் உரையை நிகழ்த்த முற்பட்ட போது, மாநிலங்களவை உறுப்பினரான இராம் அவதேஷ் சிங் மண்டல் பரிந்துரையின் நிறைவேற்றம் பற்றிய குறிப்பு எதுவும் குடிஅரசுத் தலைவரின் உரையில் குறிப்பிடப்படாததால் அவர் உரையாற்றுவதைத் தடுத்து விட்டார்.

அதைத் தொடர்ந்து, பிரதமர் வி.பி.சிங் 6.8.1990 இல் மண்டல் பரிந்துரையின்படி 27 விழுக்காடு மத்திய அரசின் வேலைகளில் பிற்படுத்தப் பட்டோருக்கு இடஒதுக்கீடு அளிக்கப்படும் என்று மக்களவையில் அறிவித்தார். அது நடப்புக்கு வரும் வகையில் 13.8.1990 இல் அரசாணை வெளியிட்டார்.

மேலே கண்ட நிலைமையை நாம் ஆய்வுக்கு எடுத்துக் கொள்வோம். நாம் 29.4.1981, 3.3.1982, 29.4.1986 ஆகிய நாள்களில் தில்லியில் நாடாளு மன்ற உறுப்பினர்களின் கூட்டத்தை நடத்தினோம்; நம் கோரிக்கையை விளக்கி வலியுறுத்தினோம்.

**தொடர்ந்து வே.ஆனைமுத்து "1990ஆம் ஆண்டு தமிழில் விகிதாசார இடஒதுக்கீடு செய்! நூறுசதவீத இடங்களையும் பங்கீடு செய்" என்றும் நூலை எழுதினார். அதில் தம் பட்டறிவைக் கொண்டு, அவர் அன்று எச்சரித்து எழுதியது இன்று பிரதமர் நரேந்திரமோடியின் ஆட்சியில் நடந்து விட்டதை என்னவென்று சொல்வது? நான் அன்று எச்சரித்து எழுதியதை அப்படியே தரு கிறேன் படியுங்கள்:**

"எனவே எத்தனை விகிதாச்சாரம் என்பதை எண் களாகக் குறிக்காமல் பிற்படுத்தப்பட்டோருக்கும் பட்டியல் குலத்தினருக்கும் பட்டியல் பழங்குடியினருக்கும் அவரவர் மக்கள் தொகை விழுக்காட்டுக்குச் சரிசமமான அளவில் மய்ய மாநில அரசுக் கல்வியிலும் மய்ய மாநில அரசு வேலையிலும் இடஒதுக்கீடு தரப்பட வேண்டும் என்று சட்டம் செய்யப்படுவது ஒன்றுதான் சரியான முடிவான தீர்வு ஆகும்.

"இப்படிச் சட்டத்திருத்தம் வர, 545 உறுப்பினர்கள் உள்ள மக்கள் அவையிலும் 245 பேர் உள்ள மாநிலங் களவையிலும் சேர்த்து 790 பேர் வாக்கெடுப்பு நாளில் அவைக்கு வரவேண்டும். அப்படி வருகிறவர்களில் பெரும்பான்மையினர் - அதாவது மூன்றில் இரண்டு பங்கு பேர் ஆதரித்து வாக்களிக்க வேண்டும். அத்துடன் அது மொத்தம் 790 பேர்களில் சரிபாதி எண்ணிக் கைக்கு மேல் 395க்கு மேல் இருக்க வேண்டும்.

"இது நினைத்துப் பார்க்க முடியாத கடினமான முயற்சி போல் தோன்றலாம். ஒடுக்கப்பட்ட வகுப்பினருக்குப் போதிய விழிப்புணர்வு ஊட்ட இதுவரை நாம் தவறி விட்டோம். இனியும் நாம் தவறினால், நாடாளுமன்ற உறுப்பினர்களின் அறியாமையையும் ஒடுக்கப்பட்ட வகுப்புத் தலைவர்களின் அடிமைப் புத்தியையும், பயன் படுத்திக் கொண்டு, மொத்த இடஒதுக்கீடு அளவைப் பற்றிக் குறிப்பிடாமலே, முற்பட்ட வகுப்புகளிலுள்ள ஏழைகளுக்கு இடஒதுக்கீடு செய்யலாம் என்று பாரதிய சனதா அரசோ, காங்கிரசு அரசோ அரசமைப்புச் சட்டத்தின் விதிகளைத் திருத்த முடியும். எச்சரிக்கை! எச்சரிக்கை!.

"இந்த மக்கள் நாயக உரிமைகளைக் கூட வென் றெடுக்கத் துப்பற்றவர்களாக, பெரியார் அம்பேத்கர் லோகியா தொண்டர்கள் இருந்தாலென்ன? மறைந்தா

லென்ன? மக்கள் நாயகம் மலர்ந்த இந்திய மண்ணில் தான் மார்க்சியம் லெனியம் மலர முடியும்; வெல்ல முடியும். இங்கு சமூக சமத்துவம் நிலைநாட்டப்பட்ட பிறகுதான் சமதர்மம் தழைக்க முடியும்.''

**எதிரிகள் ஒற்றுமையாகவும் தொலைநோக்குப் பார்வையோடும் என்றும் இருப்பதால்தான், பிரதமர் மோடியின் ஆட்சியில் இந்த நாடாளுமன்றப் பெரும் பான்மையை நம்பி, பயன்படுத்தி அரசமைப்புச் சட்டத் தின் 103 ஆவது திருத்தத்தை வெற்றிகரமாக நிறை வேற்றி விதி 15[6], 16 [6] இவற்றை நிறைவேற்றி 10 விழுக்காடு இடங்கள் உடனே உயர்சாதி ஏழைகளுக் குக் கிடைக்கிற மாதிரி உயர்சாதியினர் ஏற்பாடு செய்து கொண்டார்கள்.**

**அனைத்திந்தியஅளவில் பார்ப்பனர்கள் 5.5 விழுக் காடு, சத்திரியர்கள் 1.5 விழுக்காடு, வைசியர்கள் 1.5 விழுக்காடு, காயஸ்தர்கள் 1.0 விழுக்காடு ஆக 10 விழுக்காடு இடங்கள் தங்களுக்கு கிடைக்கிற ஏற்பாட்டை உயர்சாதியினர் அப்படியே அள்ளிக் கொண்டார்கள்.**

**இதற்குத் தீர்வுதான் என்ன?**

இந்தத் திருத்தங்களை எதிர்த்துப் போராடிக் கொண்டி ருப்பதா? பிற்படுத்தப்பட்ட மக்களை ஒன்று திரட்டி, ''பிற்படுத்தப்பட்டோருக்கு விகிதாசாரம் கொடு!'' என்று கோரிக்கை வைத்துப் போராடுவதா? எதிரி அறிவாளி, வலிமையானவன் நம்மில் பலரும் தொலைநோக்குப் பார்வையற்றவர்கள் என்பதை எண்ணி வருத்தப்பட்டு வாளாவிருப்பதா? நாம் இப்போது என்ன செய்யலாம்?

**தந்தை பெரியார் 141ஆம் பிறந்த நாளை முன்னிட்டு தமிழகப் பிற்படுத்தப்பட்டோரை ஒன்றுதிரட்டி நாம் 1978இல் முனைந்தது போல மீண்டும் பெரியாரை - அம்பேத்கரை-லோகியாவை முன்னிறுத்தி ''எல்லா மதங்களையும் சேர்ந்த பிற்படுத்தப்பட்டோரை ஒன்று திரட்டி பிற்படுத்தப்பட்டோருக்கு விகிதாசாரம் கொடு! பட்டியல் வகுப்பினருக்கு விகிதாசாரம் வரச்செய்! பழங் குடியினருக்கு விகிதாசாரம் வரச்செய்! என்று தனித் தனிக் கோரிக்கை வைத்துப் போராடுவதா?'' அப்படிப் போராடுவதே சரி.**

கீழே கண்ட மாண்புமிகு உச்ச நீதிமன்ற நீதிபதி பசல்அலி 1976இல் கேரள அரசு எதிர் என்.எம்.தாமஸ் வழக்கில் அளித்த தீர்ப்பை நாம் நமக்கு உந்து ஆற்ற லாகக் கொண்டு அதையே மக்களிடம் விளக்கிப் பேசி அதையே கோரிக்கையாக வைத்து நாடு முழுவதும் சென்று பரப்புரையாற்றி மக்கள் புரிந்து கொள்ளுமாறு செய்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அழுத்தம் கொடுத்தால் இந்த நம் கோரிக்கை வெற்றிபெறும் நாள் வெகு தொலைவில் இல்லை.

அந்தத் தீர்ப்பின் ஆங்கில வாசகம் வருமாறு :

"Suppose for instance, a state has a large number of Backward Classes of citizens which constitutes 80% of the population and the government, in order to give them proper representation, reserves 80% of the jobs for them, can it be said that it is bad and violates clause 4 of article 16? The answer must necessarily be in the negative."

State of Kerala Vs. N.M. Thomas, A.I.R. 1976, SC 490 : இதன் தமிழாக்கம் பின்வருமாறு :

''ஒரு வேளை, எடுத்துக்காட்டுக்காக ஒரு மாநிலத்தில் 80 விழுக்காடு அளவுக்கு மிகப்பெரிய அளவில் பிற் படுத்தப்பட்ட வகுப்புக் குடிமக்கள் இருப்பார்களானால் அவர்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் அளிக்கின்ற தன் மையில், அந்த மாநில அரசு அரசின் பதவிகளில் 80 விழுக்காட்டை அவர்களுக்காக ஒதுக்கீடு செய்தால் அது தவறானது என்றோ விதி 16(4)ஐ மீறியது என்றோ சொல்ல முடியுமா? இதற்கு விடை ''தவறானது என்று சொல்ல முடியாது'' என்பதுதான்.

மேலே கண்ட கருத்தினை முன்வைத்துத்தான் 19.8.1979இல் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களிடம் விண்ணப்பம் கொடுத்தோம். அதில் தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்டோர் 67.5 விழுக்காடு மக்கள் தொகை உள்ளனர். அதனால் அவர்களுக்கு இப்போது வழங்கப் பட்டு வருகின்ற 31 விழுக்காடு இடஒதுக்கீடு 60 விழுக்காடாக உயர்த்தி வழங்கப்பட வேண்டும் என்று கோரினோம். இதை அமைச்சர் பண்ருட்டி ச.இராமச் சந்திரன் அவர்களிடமும் விளக்கினோம். அவர்கள் இருவரும் நன்கு ஆலோசித்து 1980 சனவரி இறுதி யில் பிற்படுத்தப்பட்டோருக்கு 50 விழுக்காடு இடஒதுக் கீடு வழங்கப்படும் என கொள்கை முடிவு செய்து அறிவித்தனர். அதற்கான அரசாணை 1.2.1980இல் வெளியிடப்பட்டது.

தந்தை பெரியார் 141-ஆவது பிறந்த நாள் பணியாக, இந்த ஒரு கோரிக்கையை மட்டுமே முதன்மையான பணியாகக் கொணடு பரப்புரை செய்வது, போராடுவது ஆகிய இவற்றை நாம் மேற்கொள்ளலாம் என்று நான் மிகவும் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**01.9.2019** **- வே.ஆனைமுத்து**

# ஏன் பார்ப்பனர் கூடாது?

**- தந்தை பெரியார்**



பார்ப்பனரல்லாதார் ஸ்தாபனத்தில் பார்ப்பனர்களை ஏன் சேர்க்கக் கூடாது என்னும் விஷயம் தஞ்சாவூர் ஜில்லா பாபநாசம் தாலூகா போர்டு தேர்தலைப் பற்றிய இரகசியத்தைத் தெரிந்தால் அதன் உண்மை ஒருவாறு விளங்கும். பாபநாசம் தாலூகா போர்டுக்கு சுமார் 15 அங்கத்தினர்கள் உண்டு. இதில் பார்ப்பனர்கள் 3 பேர் பார்ப்பனரல்லாதார் 12 பேர்கள். இந்தப் பன்னிரண்டு பேர்களில் 6 பேர் திரு. பன்னீர்செல்வம் கட்சியைச் சேர்ந்தவர்கள். மற்ற ஆறு பேர் திரு. வீரய்யா வாண்டையாரைச் சேர்ந்தவர்கள். இதில் எந்தக்கட்சி ஜெயிக்க வேண்டுமானாலும் பார்ப்பனர் தயவில்லாமல் முடியாத நிலைமையாகிவிட்டது. ஆக திரு. பன்னீர் செல்வம் கட்சியார் எப்படியாவது திரு. வீரய்ய வாண் டையார் ஜில்லா போர்டுக்குள் நுழையாமல் இருந்தால் போதும் என்று கருதிப் பார்ப்பனர் இடம் ராஜிபேசப் புறப்பட்டு மூன்று பார்ப்பனரில் ஒருவருக்குத் தாலூகா போர்டு தலைமை ஸ்தானம் கொடுப்பதாகவும் அதற்கு பதிலாக தங்கள் கட்சியாருக்கே இரண்டு ஜில்லா போர்டு மெம்பர் பதவியையும் கொடுக்க வேண்டுமென்றும் பேசி முடிவு செய்து விட்டார்கள். இந்த சங்கதி திரு. வாண்டையார் கட்சியார் அறிந்து எப்படியாவது திரு. பன்னீர் செல்வத்தை ஜில்லா போர்டில் தோற்கடிக்க வேண்டுமென்று கருதி அதே பார்ப்பனர்களிடம் போய் தாங்கள் அந்தப் பார்ப்பனரில் ஒருவருக்கு தா. போ. தலைவர் பதவியும் மற்றொரு பார்ப்பனருக்கு ஒரு ஜில்லா போர்டு பதவியும் கொடுப்பதாகவும் தங்களுக்கு ஒரு ஜில்லா போர்டு மாத்திரம் கொடுத்தால் போதுமென்றும் ஒப்பந்தம் பேசி பழய ஒப்பந்தத்தை அதாவது பன்னீர் செல்வம் கட்சியாரிடம் செய்து கொண்டிருந்த ஒப்பந்தத்தை இரகசியமாய் முறித்துவிட்டார்கள். இந்த சங்கதி திரு. பன்னீர்செல்வம் கட்சியாருக்குத் தெரியாது. இந்த நிலையில் தாலூகா போர்டு முதல் மீட்டிங்கி கூடினதும் ஒரு பார்ப்பனனைத் தலைவராகப் பிரேரே பிக்க இரு கட்சியிலிருந்தும் பார்ப்பனரல்லாத இரு கனவான் எழுந்து பிரேரேபித்தார்கள்.

இதிலிருந்தே முதல் ஒப்பந்தக்காரரருக்கு சந்தேகம் ஏற்பட்டது. ஆனாலும் சற்று இருந்து பார்த்ததில் விஷயம் விளங்கிவிட்டது.

பிறகு அந்தப் பார்ப்பனரே தலைவராய் தெரிந்தெடுக்கப் பட்டுவிட்டார். இதோடு மறுபடியும் ஒரு பார்ப்பனரும் ஜில்லா போர்டு மெம்பராய் தெரிந்தெடுத்து விட்டார். பிறகு திரு. வாண்டையார் ஒரு ஜில்லா போர்டு மெம்பர் பதவியைப் பெற்றார்.

அன்றி இனியும் அந்தப் போர்டுக்கு இந்தக் காலாவதி வரையில் அந்த மூன்று பார்ப்பனர்களுக்கு இந்த 12 மெம்பர்களும் சதாகாலம் சலாம் போட்டுக் கொண்டு இருந்தால்தான் இவர்களது காரியம் பலிக்கும். இல்லா விட்டால் கஷ்டமான நிலையாகத்தான் போய் விடக்கூடும்.

பார்ப்பனரல்லாதார் இயக்கம் என்பதாக ஒன்று தோன்றி இருக்காமல் இருந்தால் இன்றையத் தினம் தஞ்சை ஜில்லாவில் திரு. பன்னீர்செல்வம் தலைவரா யிருக்கவும் முடியாது, திரு. வாண்டையார் போட்டி போட்டி ருக்கவும் முடியாது. இந்த நிலை அடைந்ததை அடியோடு மறந்து விட்டு தங்களுக்குள் போட்டி போட்டுப் பார்ப்பனர் அடியில் விழுந்து இருவரும் தவிக்கும் படியான காலம் இப்பொழுதே வந்துவிட்டது. இனி பார்ப்பனர்களை உள்ளே சேர்ப்பதென்றாகிவிட்டால் என்ன கதியாகும் என்பதைத் திருவாளர்கள் பன்னீர்செல்வமும் வாண்டை யாரும் கவனிக்க முடியாமல் போனாலும், தஞ்சாவூர் வாசிகளான மற்ற பார்ப்பனரல்லாதார்களாவது கவனிக்க வேண்டுமாய் விரும்புகின்றோம்.

12 பார்ப்பனரல்லாதார்கள் போர்டில் இருந்தும் 3 பார்ப்பனர்கள் மாத்திரம் இருந்து கொண்டு ஒருவர் தலைவராகவும் ஒருவர் ஜில்லா போர்டு மெம்பராகவும் வந்து விட்டார்கள் என்றால் நம்மவர்களின் சுயமரியா தைக்கு நாம் வெட்கப்பட வேண்டாமா? என்று கேட்கின் றோம். நிற்க, மேல்படி மூன்று பார்ப்பனரில் மீதி உள்ள ஒரு பார்ப்பனரும் வைஸ்பிரசிடெண்ட் வேலையை இது வரை வாங்கி இருப்பார் என்றோ அல்லது வாங்கிவிடக் கூடுமென்றோ நினைக்கின்றோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம்**
**20.07.1930**

# இடஒதுக்கீடு உரிமையை ஒழித்திட இராசுட்ரிய சுயம்சேவக் சங்கம் பாரதிய சனதா முனைப்பு

- இரா.பச்சமலை

பாசிச பாரதிய சனதாக் கட்சி ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும், அதனுடன் இராசுட்ரிய சுயம்சேவக் சங்கமும் இவர்களின் கூட்டாளிக் கும்பலான காவிக் கூட்டமும் ஒன்றிணைந்து நாட்டில் அடுக்கடுக்காகக் கீழே கொலைபாதகமான கொடுஞ் செயல்களைத் திட்டமிட்டு வகுத்தெடுத்து ஒடுக்கப்பட்ட வெகுமக்களை ஒவ்வொரு வழியிலும் வாட்டி வதைத்து பலரைப் பலிவாங்கி அவர்களின் வாழ்வை அழித்து ஒழித்துக் கொண்டேதான் வருகின்றன. இவற்றின் அடிநாடி, அமெரிக்கா எப்படி உலகை அமைதியற்ற சூழலில் வைத்து வருகின்றதோ அதே போல் இக்கூட்டம் இந்திய ஒன்றியத்தில் பதட்டமான சூழலை உருவாக்கி தம் கயமைச் செயல்களைக் கட்டவிழ்த்து விட்டு அவர்கள் மறைத்து வைத்துள்ள திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டு வருகின்றனர்.

* மசூதி இடிப்பு-பல ஆயிரம் மக்கள் பலிவாங்கப் பட்டனர்
* தோத்திரா தொடர்வண்டி எரிப்பு-மக்களைத் தீயிட்டுக் கொளுத்தினர்.
* மாட்டுக் கறிக்குத் தடை, பசுகாப்பு-ஒடுக்கப்பட்ட மக்களைப் பலியிடல், குறு சிறு தொழில்கள் அழிப்பு
* மதிப்பு மிகு பண மதிப்பிழப்பு-இரு நூற்றுக்கு மேலோனோர் சாகடிப்பு
* பொருள் சேவை வரி-பல இலக்கக் குறு, சிறு தொழில்கள் நலிவு கோடிக்கணக்கானோர் வேலை இழப்பு
* நீட் தேர்வு-ஒடுக்கப்பட்டோருக்கு மருத்துவக் கல்வி மறுப்பு
* மேல்சாதி ஏழைகளுக்கு 10 விழுக்காடு-தனி இட ஒதுக்கீடு மறுப்பு-சமூக நீதிக் கோட்பாடு ஒழிப்பு
* தேசியக் கல்விக் கொள்கை-கல்வி மறுப்பு-தேசிய இனங்கள் அழிப்பு
* அரசமைப்புச் சட்ட விதி 370, 35A நீக்கல் - சிறுபான்மையினருக்கு உறுதி செய்யப்பட்ட உரிமை கள் மறுப்பு, இந்திய ஒன்றியக் கூட்டாட்சி வடிவ அழிப்பு இவ்வாறு பட்டியல் நீண்டு கொண்டே போகும். இவையெல்லாம் மனுவின் சனாதனக் கோட்பாட்டை நிலைத்திட வைக்கும்.

இவற்றினூடே இராசுட்ரிய சுயம்சேவக் சங்கத் தலைவர் மோகன் பகவத் ஏதோ நடுநிலை நாயகன் போன்று இட ஒதுக்கீட்டுக் கொள்கையால் பயனடை யாதாரின் மனத்தாங்கலையும் பயன்பெறு வோர் இடையுறும் இன்னல்களையும் பொதுவில் வைத்து கலந்துபேசி இடஒதுக்கீடு குறித்து முடிவை எட்டுவோம் என நயவஞ்சகமாக தன் கடைந்தெடுத்த கயமைத் தனத்தைத் தன்கருத்தாகத் தெரிவித்துள்ளார். இவர்கள் இதற்கும் மேலும் சுடு சொற்களால் வசைபாடத் தக்கவரெனினும் இந்த அளவுடன் நிறுத்திக் கொள்ளலாம்.

இவர் இவ்வாறு சொல்வதின் பின்னணியில் உள்ளவை எவை. இவர்களால் வழிநடத்தப்படுபவர்கள் சொல்லும் கருத்துக்கள்.

உயர் அறமன்ற நடுவர் தம் ஆணையில் குறிப்பி டுகிறார்-கையூட்டும், இடஒதுக்கீடும்தான் நாட்டின் பெரும் கேடுகள்.

பார்ப்பனர்கள் சங்கம் நிகழ்த்திய கூட்டத்தில் சமூகத்தின் உயர் நிலையில் இருக்கத் தகுதியுடையோர் அவர்கள் மட்டும்தானாம் எனப் பேசுகின்றனர் அதில் கலந்துகொண்ட உயர் அறமன்ற நடுவர்கள்.

மோடி நாம் நாட்டின் காவலாளிகளாக இருந்து நாட்டைக் காப்போம் (உண்மையில் அழிப்போம் என்பதுதான் உட்பொருள்) என்ற புனையுரையைக் கூடச் சகிக்காத பா.ச.க.சுப்பிரமணியசாமி சொல்கிறார். இல்லை, இல்லை நான் பிராமணன். அந்தக் கீழ்ப்பணிகளை நாங்கள் செய்யோம். நாங்கள் சொல்பவற்றைச் செயல் படுத்துபவர்களாகத்தான் (மோடி இதில் அடக்கம்) பிறரை வைத்திருப்போம். இந்த உளவியல் பார்பனர்களுக்குள் ஊடுருவி நிற்கின்றது. பாரத ஸ்டேட் வங்கிப் பணிபெற தேர்வுக்கு மேல்சாதி ஏழைகளுக்கு 28 மதிப்பெண்களே போதுமானதாகும். ஒடுக்கப்பட்டவர்களுக்குத் தகுதி மதிப் பெண் 75.80 என்ற அளவில், ஒப்பீட்டளவில் இவர்கள் எவ்வளவு தாழ்நிலையில் இருந்தாலும் தகுதியுடைய வர்களே. இதுபோன்ற எண்ணிலடங்கா அறநெறிக்கு எதிராகத் தான்/தாம் என்ற திமிரான பேச்சுக்கள் அன்றாட நிகழ்வாகி வருகின்றன.

ஒரு பார்ப்பனர் சொல்கிறார், நாய்களில் உள்ள பல்வேறு வகைகளை எப்படி ஒரே இனமாக்க் கருத முடியாதோ அதே போன்றது தான் மனித இனம்.

உச்ச அறமன்றம் பலமுறை கூறுகின்றது. இட ஒதுக்கீடு எவ்வளவு காலம்தான் தொடரும். அதற்குக் கால வரையறை வேண்டாமா? மேலே முதலில் குறிப்பிட்டவர் இவர்களெல்லாம் அரசமைப்புச் சட்டத்தின் கீழ் அதன் மீது உறுதிமொழி எடுத்துக் கொண்டு நியமனம் பெற்று அதன் உள்ளடக்கமாக ஒடுக்கப்பட்ட மக்களுக்கு உரிமையாக வழங்கப்பட்டுள்ள இடஒதுக்கீட்டை அந்தப் பதவியில் இருந்து கொண்டே அரசமைப்புச சட்டத்திற்கு முற்றிலும் எதிராகக் குறிப்பிடுவது, நாங்கள் எதையும், எப்படியும், எந்தப் பொறுப்பிலிருந்தாலும் பேசுவோம் என்பதன் வெளிப்பாடுதான்.

இனி பார்ப்பனியக் காவிக் கூட்டம் இடஒதுக்கீட்டுக் கொள்கை அழிப்புக்கு எவ்வாறெல்லாம் வித்திட்டு இப்போது மோகன் பகவத் அதை அழிவின் விளிம்புக்குக் கொண்டுவந்துள்ளார் என்பதைக் காணலாம்.

அரசமைப்புச் சட்ட விதிகள் 15 (4) மற்றும் 16 (4) இல் (பட்டியல் வகுப்பு, பழங்குடி மக்களும் அடங்குவர்) 1950 லிருந்தே பிற்படுத்தப்பட்டோருக்கு இதில் உரிமையாக வழங்கியிருந்தபோதிலும் இதர பிற்படுத்தப்பட்டோருக் கென மண்டல் பரிந்துரையின் அடிப்படையில் 27 ஒதுக்கீடு அளித்திட ஒன்றிய அரசு நெருக்கடிக்கு உள்ளாக் கப்பட்டு ஆணையிட்ட அடுத்த அடியிலேயே அதனை ஒழித்திடவும் அடித்தளம் இட்டுவிட்டனர். ஒதுக்கீடு பெற வருமான அளவு வரையறைவகுத்து அந்த வரையறை அளவை மிகும் நிலையில் அவர்கள் பசையுடைய வளமான பிரிவினராக முத்திரையிடப்பட்டு ஒதுக்கீடு வரம்புக்கு அப்பாற்பட்டவர்கள் எனக்கூறி அதைப்பெற தகுதியற்றவர்களாக அறிவித்துவிட்டனர். அந்த அழிப்புத் திட்டத்திற்கு உரம் சேர்க்கும் வகையில் மேல்சாதி ஏழை களுக்கென்று தனியாக 10 விழுக்காடு அளிக்கப்பட்டு சட்டம் இயற்றி நடைமுறைக்கு வந்துவிட்டது. (அதன் செயல்பாட்டில் விளைந்த கேடுகளை பின்னர் விவரிப்போம்) அதன் நீட்சியாக, இடஒதுக்கீட்டை முற்றும் முதலுமாக ஒழித்துக் கட்டத்தான் இதன் மீதான விவாதத்தை மேற்கொண்டு முடிவுக்கு வருவோம் என்ற பசப்புச் சொற்களில் விளக்கி யுள்ளார் மோகன் பகவத்.

அரசின் முதன்மையான மூன்று அலகுகளாக உள்ள சட்டமன்றம், நிருவாகத்துறை, அறமன்றங்களின் உயர் அதிகாரங்களில் மேல்சாதிக்காரர்கள்தான் (பார்ப்பனர்கள் மட்டும் மிகுந்து) 100 விழுக்காடு அளவுக்கும் முற்றிலும் ஆக்கிரமித்துக் கொண்டுள்ளனர் என்று நாடாளுமன்றத் தில் அரசு தெளிவான விவரங்கள் தந்துள்ளது. குறிப்பாகக் குடியரசுத் தலைவர் அலுவலகம், ஒன்றிய தில்லி தலைமைச் செயலக முக்கிய துறைகளில் 90 விழுக்காட்டுக்கு மேல் இவர்கள்தான் இடம் பெற்று மெய்யான ஆட்சி அதிகாரத்தை கையில் வைத்து நாட்டை ஆட்டிப் படைத்துக் கொண்டு வருகிறார்கள்.

இதே நிலைதான் நாடு விடுதலையடைவதற்கு முன் மௌரியர், மொகலாயர், ஆங்கிலேயர் என எவர் ஆட்சி யில் இருந்தார்களெனினும் அதிகாரம் செலுத்தியவர்கள் முழுவதும் இவர்கள்தானே. நாட்டின் விடுதலைக்குப் பின் 72 ஆண்டுகளிலும் இவர்கள் கோலாச்சிக் கொண்டிருக்கின் றார்கள். இவர்கள் எவ்வளவு நயவஞ்சக கயமை எண்ணங் கொண்டவர்களாக இருந்திருப்பின் இப்போது 193 உலக நாடுகளிலேயே மக்கள் மேம்பாட்டுக் குறி யீடுகளான கல்வி, மருத்துவம், வேலைவாய்ப்பு, ஊதிய அளவுகள், பொதுவாக வாழ்க்கைத் தரம் எனப் பல்வேறு தன்மைகளால் மனுதர்மத்தின்படி வெகுமக்களான ஒடுக்கப்பட்டவர்களை அடி மட்டத்தில் வைத்திருப்பதையே கொள்கையாகக் கொண்டவர்கள்தான் என்பது உறுதி யாகிறது. இதுதான் இந்தக் கூட்டத்தின் தகுதி திறமைக் கோட்பாட்டின் வெளிப்பாடு. இந்நிலையில் வெறும் 10% அளவில்கூட உயர்கல்வியில்உயர்பணிபதவிகளில்இடஒதுக்கீடு வழி இடம்பெற்ற ஒடுக்கப்பட்ட மக்களை முற்றிலும் இவற்றிலிருந்து அகற்றி விடவேண்டுமென்ற உள்நோக்கம் கொண்ட கெடுமதிதான் பாகவத்தின் கூற்றாகும்.

இதில் நாம் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். இந்து மதவாதம் பேசும் இவர்கள் கண்ணுக்கும் கருத் துக்கும் மேற்சொன்ன ஒடுக்கப்பட்ட மக்கள் இந்துக்களாக வே தெரியவில்லை என்பதுடன் பார்பனர்கள் மட்டுமே இந்துக்கள் என்ற வரையறைக்குள் வருபவர்களாகவும் மனுவின் கூற்றுப்படி இவர்கள்தான் வாழ்வும் வளம் பெறுவதற்கும் தகுதியானவர்கள் என்பதுதான் இந்தக் காவிக் கூட்டத்தின் முடிவான முடிவாகத் தெரிகிறது. எனவே இவர்கள், இந்துக்கள் மீதான பற்று என்பது வெறும் பசப்பு, வெற்றுக் கூச்சல் என்பதையெல்லாம் மேற்சொன்னவைகளி லிருந்து தெளிவானபோதும் இந்த இந்துச் சமூகம் எனப்படுவது குறுக்கு நெடுக்காகப் பிளவு படுத்தப்பட்டு ஒருவருக்கொருவர் கீழோர், மேலோர் என்ற இழிவிலேயே உழல வைக்கப்பட்டுள்ளதைச் சற்றும் புரியாமல் பொது எதிரி யார் என்பதை அறியாமலேயே உள்ளனர்.

தற்போதைய 2018-19இல் இந்திய ஒன்றிய மக்களின் வாழ்நிலை எவ்வாறு இரங்கத்தக்க தன்மை யில் உள்ளது என்பதை அண்மையில் உலக வங்கியால் வெளியிடப்பட்டுள்ள விவரங்கள் படம் பிடித்துக் காட்டுகின்றது.

உலக நாடுகளில் (சில) நிலவும் மோசமான வறுமையில் வாடும் மக்கள் (விழுக்காட்டில்)

| | பின் 1980 களின் 1990களின் பின்காலம் | மிக அண்மை யில் |
|---|---|---|
| பிரேசில் | 21.6 | 4.8 |
| இந்தோனேசியா | 58.8 | 5.7 |
| சீனா | 66.2 | 0.7 |
| இலங்கை | 8.7 | 0.8 |
| பிலிப்பைன்சு | 26.6 | 7.8 |
| தென் ஆப்பிரிக்கா | 31.7 | 18.9 |
| தாய்லாந்து | 9.4 | 0.0 |
| பாக்கிசுத்தான் | 58.9 | 7.8 |
| இந்தியா | 45.9 | 21.2 |

இந்திய ஒன்றியத்தில் 21.2 விழுக்காடான 29.30 கோடி மக்கள் இப்போது வறுமையின் பிடியில் வைக் கப்பட்டுள்ளனர். ஆனால் நாட்டின் பொருளாதார வளர்ச்சி பெருமளவில் உயர்ந்துள்ளது எனப் பெருமை பேசிவந்த

காங்கிரசும் (பா.ச.க. போன்றவரே) பாரதிய சனதா கட்சியும் இந்த விவரங்களையும் பார்த்துவிட்டு வெட்கித் தலைகுனியாமல், வெகுமக்களைப் பசிப்பிணியிலிருந்து மீட்டெடுக்க எவ்வித திட்டங்களையும் வகுக்கமுனையாமல் உள்ளன. இவர்கள் ஏழை, எளிய மக்கள் குறித்து எவ்வித கரிசனமற்றவர்கள். சென்ற 30 ஆண்டுகளில் நம்மையொத்த சீனா வறுமை நிலையை ஒரு விழுக்காட்டுக்கும் குறைவான அளவுக்குக் குறைத்து விட்டது. அதேபோல் பாக்கிசுத்தான் 7.8 என்ற அளவுக்குக் குறைத்துள்ளது. ஆனால் இந்திய ஒன்றியம் 21.2 அளவைத் தக்க வைத்துள்ளது இங்கு ஆட்சி செய்வோர் மக்கள் நலப் பற்றற்றோர் என்பதைக் காட்டுகின்றது.

இந்த வறுமையின் பிடியில் உள்ள 30 கோடி மக்களும் பட்டியல் வகுப்பினர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட மக்களாகத்தான் இருப்பார்கள் என்பதில் சிறிதும் அய்யம் கொள்ள வேண்டியதில்லை. ஏனெனில் இந்த அளவு வறுமையில் உள்ளவர் பார்ப்பனர் உள்ளிட்ட மேல் சாதியினருள் இருக்க வாய்ப்பே இல்லை எனலாம். வேண்டுமென்றால் ரூ.8 இலட்சம் ஆண்டு வருமானம் உள்ள மேல் சாதி ஏழைகள் இருக்கலாம். இந்தச் சமூகப் பொருளாதாரப் பின்னணியைக் கொண்ட இந்திய ஒன்றியத்தில் சனாதனக் காவிக் கும்பலான இராசுட்ரிய சேவக் சங்கம், பாரதிய சனதாக்கட்சி அரசமைப்புச் சட்டத்தை அறநெறி எதையும் பின்பற்றாமல் அடாவடியாக மோசடியாகத் திருத்தி மேல்சாதி ஏழைகளுக்கென (பொதுப்பிரிவில் நலிந்த பிரிவினர்கள்) கல்வியிலும், வேலைகளிலும் தனியே, 10 விழுக்காடு இடஒதுக்கீடு அளித்திட வழிசெய்து விடுவதில் எவ்வளவு முனைப்பும் வேகம் காட்டியுள்ளனர் என்பதிலிருந்து (தண்ணீரைக் காட்டிலும் குருதி அடர்த்தியானது) தானாடா விட்டாலும் தன் சதையாடும் என்ற பழமொழியை மேல்சாதிக்காரர்கள் எண்பித்துக் காட்டிவிட்டனர். குறிப்பாக இந்தச் சனாதனக் கும்பலுக்கு மேல்தட்டு இந்து மக்கள் என்ற மேல்பூச்சை முகமூடியாகக் கொண்டு அதிலும் ரூ.8 இலட்சம் வருமான அளவு உடைய இந்துக்கள் மேல்தான் பெரும் அக்கறையுடன் செயல்பட்டு கீழ்த்தட்டு இந்து வளையத்திற்குள் வரும் 80-85 மக்களை இழிவான இந்துக்கள் என அவர்களின் நலனுக்கு எதிராகத்தான் அவர்களுக்கான இடஒதுக்கீட்டுக்கு வேட்டு வைத்துவிட்டனர். இதை ஒடுக்கப்பட்ட மக்களுள் சிலர் தன்னறிவு கொண்டு சிந்தியாமலும் பெரியார் அம்பேத்கார் தந்த அறிவைக் கொண்டும் சிந்திக்காமலும் 10% இடஒதுக்கீடு சமூகநீதியுடன் சமநீதியும் கிடைத்திட வழி செய்துவிட்டது எனக் கூறும் இந்த காவிக் கயவர்களின் நயவஞ்சகப் பசப்பு மொழிகளுக்குச் சோரம் போய் உண்மையில் இந்தச் சமூக அநீதியை வரவேற்கவும் செய்கின்றனர். இது கண்டு வேதனை கொள்வதைத் தவிர என்ன செய்வது? ஆனால் வெகுமக்கள் பற்றுள்ள, அறிவு நாணயம் உள்ள தன்னிலையில் இன்றி பொது நிலையிலிருந்து அணுகும் எவரும் இது இயற்கை அறனுக்கு முரணானது, எதிரானது என மனதார உணர்வர். இருப்பினும் அரசமைப்புச் சட்டப்படியும் இதன் தன்மையை ஆய்வோம்.

முதலில் அரசமைப்புச் சட்டப் பிரிவு 14 சொல்வதைப் பார்ப்போம்.

சட்டத்தின் முன் எந்த ஒருவருக்கும் அரசு சமன்மையை மறுக்கக் கூடாது அல்லது இந்திய ஒன்றியப் பகுதிக்குள் சமமான சட்டப் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும் இந்தப் பிரிவுக்குப் பல காலக்கட்டங்களில் தொடுக்கப்பட்ட வழக்குகளில் உச்ச/உயர் அறமன்றங்கள் இன்னும் விரிவான தெளிவான விளக்கங்கள் தந்துள்ளன. சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பதற்கு அனைவருக்கும் சமவாய்ப்பு அளிக்கப்பட வேண்டும் என்றும் சமனற்றவர்களுள் போட்டி என்பது நெறியற்றது என்றும் இன்னும் தெளிவாகப் போட்டி சமமானவர்களுக்கிடையில் இருப்பதுதான் நெறி என்றும் விளக்கங்கள் அளிக்கப்பட்டுள்ளன.

இந்த விதி 14 எவ்வாறு பின்பற்றப்பட வேண்டும் என்பதை விவரிக்கும் வகையில்தான் பிரிவுகள் 15ம், 16ம் அமைக்கப்பட்டுள்ளன என்பதைக் காண்போம். அதாவது பிரிவு 15(1) இன் படி சமயம், இனம், சாதி, பாலினம், பிறப்பிடம் அல்லது இவை எவற்றின் அடிப்படையிலோ எந்தக் குடிமகனையும் அரசு வேறுபடுத்தக்கூடாது (இது பிரிவு 14இன் படி அனைவரும் சமம்). இதை மேலும் தெளிவுபடுத்தும் வகையில் பொது இடங்களுக்குச் செல்வதற்கும், பொது வசதிகளையும் பயன்படுத்துவதற்கும் மேற்சொன்னவற்றின் அடிப்படையில் எந்தக் குடிமகனையும் இயலாமை, முடியாமை, தடைகள் அல்லது கட்டுப்பாடு இவற்றிற்கு உள்ளாக்கக்கூடாது என 15இன் துணைப் பிரிவுகள் விதிக்கின்றன. சமூகத்திலும் கல்வியிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் வகுப்பைச் சேர்ந்த குடிமக்கள் அல்லது பட்டியல், பழங்குடிகள் ஆகியோர் மேம்பாடு முன்னேற்றம் பெறுவதற்காக எந்தச் சிறப்பு ஏற்பாடுகளைச் செய்திட இப்பிரிவில் உள்ளவையோ அல்லது 19(2) பிரிவோ அரசு உதவி பெறும் கல்வி நிலையங்களில் சேர்க்கப்பட அரசைத் தடை செய்யாது.

பிரிவு 16(4) இன் படி எந்தப் பிற்படுத்தப்பட்ட பிரிவுக் குடிமக்களுக்கும் அரசின் வேலைகளில் அல்லது பணிகளில் போதுமான பிரநிதித்துவம் இல்லை என்று அரசு கருதுமெனில் எந்த வகை ஏற்பாடுகளையும் செய்து அவர்களுக்கு இடஒதுக்கீடு வழங்கிடுவதற்கு இந்த விதியில் உள்ளவை ஏதும் அரசுக்குத் தடையாக இராது.

மேலும் பிரிவு 46-ஐ அடிப்படையாகக் கொண்டு அரசமைப்புச் சட்டம் திருத்தம் செய்து 10 விழுக்காடு ஒதுக்கீட்டுச் சட்டம் இயற்றப்பட்டது அடிப்படையிலேயே தவறானது. இவ்விதி நாட்டில் உள்ள எல்லா வகுப்புக் குடிமக்களுள் உள்ள நலிந்தவரை குறிப்பிட்டுவிட்டு சிறப்பாக பட்டியல் வகுப்பு, பழங்குடி மக்களைத்தான்

குறிப்பிட்டு அவர்களைக் கல்வியில், பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடையச் செய்து சமூக அநீதியிலிருந்தும் எல்லா வகைச் சுரண்டலிலிருந்தும் காப்பாற்ற வேண்டும் என்றுதான் தெளிவாக உள்ளது. இது 15(4), 16(4) பிரிவுகளில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு வழங்கியுள்ள இடஒதுக்கீடு போதுமானதாக அமைத்திடாது என்ற கவலையின் அடிப்படையில்தான் அப்பிரிவுகளில் உள்ள நலிந்தவர்களும் அவர்களுடன் பிறவகுப்பு நலிந்த மக்களும் முன்னேற்றம் அடைய வேண்டுமெனத் தெளிவாக உள்ளது. இதை 10 விழுக்காடு இடஒதுக்கீட்டுக்கு நயவஞ்சமாகப் பயன்படுத்தியதே மிகப்பெரும் குற்றம். எனவே இச்சட்டம் செல்லுபடியாகாது என்ற முடிவுக்குத்தான் வரவேண்டும்.

இந்த இரண்டு பிரிவுகளிலும் வேற்றுமைக்கு உள்ளாக்கப்பட்டவர்கள் என்பதின் அடிப்படையில்தான் இவ்விதிகளில் உள்ளவை எதுவும் சமூகம், கல்வியில் பிற்படுத்தப்பட்ட வகுப்புகளுக்கு இடஒதுக்கீடு வழங்கிட அரசை தடைசெய்யாது எனத் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

மேலும் அஞ்சல் துறை, வங்கிகள் பணி நியமனங்களில் 10 விழுக்காடு சட்டத்தின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டவர்கள் பெற்ற மதிப்பெண் தெரிவு செய்யப்பட்ட பிற்படுத்தப்பட்டோர் பெற்ற மதிப்பெண்களைக் காட்டிலும் மிகக்குறைவு என்பது மட்டும் அல்ல 28 மதிப்பெண் பெற்ற மேல் சாதி ஏழையும் பணிநியமனம் பெற்றுள்ளார். இது பிரிவு 335க்கு முற்றிலும் முரணானது பட்டியல் வகுப்பு, பழங்குடி, இதர பிற்படுத்தப்பட்டோர் அறமன்றத் தீர்ப்பின்படி ஆகியோருக்கு இடஒதுக்கீடு அளிப்பது தகுதி திறமை பாதிப்படையும் வகையில் அமைத்திடக்கூடாது என்று முன்னெச்சரிக்கையை இந்தப் பிரிவு விதித்துள்ளது. இது ஒடுக்கப்பட்ட மக்களை இழிவு படுத்தும் என்றும் அடிப்படை நேர்மைக்கு எதிரானது என்றும் மா.பெ.பொ.க கருதுகின்றது. இப்பிரிவு நீக்கப்பட வேண்டும் என்பதுதான் நம்நிலைப்பாடு. ஆனால் தற்போது அரசமைப்புச் சட்டத்தில் உள்ள இந்தப் பிரிவின்படி 10 விழுக்காடு சட்ட நடவடிக்கைகள் முறையற்றவை. அரசமைப்புச் சட்டத்திற்கு எதிரானது. எனவே 10 விழுக்காடு சட்டத்தின் படி செய்யப்பட்ட நியமனங்கள் உடனடியாகத் தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

பிற்படுத்தப்பட்டவர்கள் (ஒடுக்கப்பட்ட மக்கள் உட்பட) அரசு கல்வி பணிகளில் போதிய பிரதிநிதித்துவம் பெறும் வரையில் இடஒதுக்கீடு தொடர்ந்து பெறவேண்டும் என்பதே 15(4), 16(4) விதிகளின் பொதிவான பொருள். பிற்படுத்தப்பட்டோர் வேற்றுமைக்கு உள்ளாக்கப்பட்டவர்கள் என அதில் சொல்லப்பட்டுள்ளதின் அடிப்படையில் அவர்களுக்கு இடஒதுக்கீடு அளிக்கப்பட்டது. அது தொடர வேண்டும். இது மேல்சாதி ஏழைக்களுக்குச் சற்றும் பொருந்தாதது. எனவே 10 விழுக்காடு சட்டம் செல்லத்தக்கதல்ல எனத் தள்ளுபடி செய்யத்தக்கது.

மொத்தத்தில் ஒடுக்கப்பட்ட மக்களின் இடஒதுக்கீடு நலன்கள் பாதுகாக்கப்பட மோடி அரசின் இந்த மோடிச் சட்டம் நீக்கப்பட வேண்டும். இதற்கு வெகுமக்கள் பெருமளவில் வெகுண்டெழுந்து ஒன்று திரண்டு மிகப்பெரும் போராட்டம் காணவேண்டும். இதில் ஒத்த கருத்துடைய அமைப்புகள், இயக்கங்கள், கட்சிகள் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்து வெற்றி பெறச் செய்ய வேண்டும்.

❖

## இந்திய அரசு முன்னாள் அமைச்சர் இந்தியா மக்களவை உறுப்பினர் மாண்புமிகு ஆ. இராசா அவர்கள் வே. ஆனைமுத்துவுக்கு ஆறுதல் கூறினார்



வே. ஆனைமுத்துவின் துணைவியார் ஆ. சுசீலா அம்மையார், 30.4.2019 அன்று மறைந்தார்.

பொதுத் தேர்தலிலும், சூலூர் இடைத் தேர்தலிலும் ஆ. இராசா பொறுப்பேற்றிருந்தார்.

பின்னர் தில்லியில் மக்களவைக் கூட்டத்தில் பங்கேற்றார்.

காலந் தாழ்ந்தாலும், பொறுப்புடன், 28.8.2019 புதன்கிழமை காலை 10.30 மணிக்குத் தாம்பரத்தில் ஆனை. பன்னீர்செல்வம் வீட்டிற்கு ஆ. இராசா அவர்கள் வருகை தந்து, வே. ஆனைமுத்துவிடம் துக்கம் விசாரித்தார்.

அவருடன் வாலிகண்டபுரம் பெரம்பலூர் மாவட்ட தி.மு.க. பொருளாளர் செ. இரவிச்சந்திரன், தம் சென்னை அலுவலக மேலாளர் நித்தியானந்தம் வருகை தந்தனர். ஆனை. பன்னீர்செல்வம் வரவேற்றார்.

ஆ.இராசா அவர்கள், விடை பெறுமுன், "சிந்தனையாளன்" வளர்ச்சி நிதியாக ரூ.25,000 அளித்தார்.

எப்போதும் வே. ஆனைமுத்துவிடம் நட்பு பாராட்டி வருகிறார். அவருக்கு நன்றி.

**- வே.ஆனைமுத்து**

# 17.9.2019–இல் 100ஆம் பிறந்த நாள் காணும் பெரியார் பெருந்தொண்டர் – நாடக ஆசிரியர் அவலூர்ப்பேட்டை

# வீ.மு. வேலு அவர்கள் நூறாண்டு கடந்து வாழ்க!

பெரியார் பெருந்தொண்டரும், நல்ல - திறமையான நாடக ஆசிரியருமான வீ.மு. வேலு அவர்கள், திருவண்ணாமலையை அடுத்த அவலூர்ப்பேட்டையில் 17.09.1920-இல் பிறந்தார். அவர் 8-ஆம் வகுப்பு வரையில் அவலூர்ப்பேட்டையில் கல்வி கற்றார்.

1938-இல் தந்தை பெரியார் அவர்கள் சுயமரியாதைக் கொள்கைகளைப் பரப்புரை செய்ய அவலூர்ப்பேட்டைக்குப் போனார். அதுபற்றிய கூட்ட அறிக்கையை, அப்போது 18 வயது இளைஞரான வேலு ஊர் மக்களிடையே வழங்கப் போனார். அவர் பேரில் சீற்றம் கொண்டு, ஊர்ப் பெரியவர்கள் ஏவலின்படி அவ்வூர் இளைஞர்கள் வீ.மு. வேலுவை செமையாக அடித்துப் போட்டுவிட்டனர்.

வேலு, ஊராருக்கு அஞ்சி பெங்களூருக்குப் பிழைப்புத் தேடிப் போனார். பெங்களூரில் முதலில் சிறு கைத்தொழில் செய்தார். அங்கிருந்த பெரியார் தொண்டர்களுடன் நெருங்கிய உறவு கொண்டார். நாடகங்கள் எழுதுவதில் ஆர்வம் கொண்டார். இதுவரையில் 79 நாடகங்கள் எழுதியுள்ளார். அத்தனைக்கும் அவருடைய 8ஆம் வகுப்புக் கல்வி கைகொடுத்தது. 79 நாடகங்களையும் பெங்களூரில் நடத்திக் காட்டினார்.

பெங்களூர் கல்வியாளர் அ.ம. தர்மலிங்கம், பெரியார் பெருந்தொண்டர்கள் பொ.அ. கொடையரசன், வீ.சி. வேலாயுதம், கீ.சு. இளங்கோவன், க. வேலு ஆகியோருடன் இணைந்து, பெரியார் சுயமரியாதைக் கொள்கைகளைப் பரப்புவது, திருக்குறள் பரப்புவது ஆகிய பணிகளில் ஈடுபட்டார்.

மேலே கண்ட தகுதிகளைக் கொண்ட வீ. முருகேசன் மகன் வேலு என்கிற வீ.மு. வேலு அவர்கள், வருகிற 17.9.2019 அன்று 99 அகவையை முடித்து, 100 ஆவது அகவையில் அடியெடுத்து வைக்கிறார்.

2017 மார்ச்சில் அவலூர்ப்பேட்டையில் நடைபெற்ற தி.மு.க. தோழர் இரவி அவர்களுடைய மகன் திருமணத்தில் வீ.மு. வேலு அவர்கள், மா.பெ.பொ.க. தோழர்கள் வே. ஆனைமுத்து, பொ. சுப்பிரமணியன், கோ. கோதண்டராமன் ஆகியோருடன் பங்கேற்றார்.

வீ.மு. வேலு அவர்கள் பெங்களூரில் நகராட்சியில் ஓட்டுநராக இருந்து ஓய்வு பெற்றவராவார். அவருடைய



துணைவியார் வீரம்மாள் அவர்கள் தம் 80ஆம் அகவையில், நான்கு ஆண்டுகளுக்கு முன் மறைந்தார்.

வீ.மு. வேலு - வீரம்மாள் இணையருக்கு இரண்டு மகன்கள், இரண்டு மகள்கள் உள்ளனர். எல்லோரும் நலமாக இருக்கிறார்கள்.

17.9.2019 அன்று நூறாம் அகவையில் அடியெடுத்து வைக்கும் வேலு அவர்கள், நூறாம் ஆண்டைக் கடந்து மேலும் பல ஆண்டுகள் நலமாக வாழ மனமார விழைகிறேன்.

மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் சார்பில் எங்கள் தோழர்களின் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**- வே. ஆனைமுத்து**

# சரிந்து வரும் இந்தியப் பொருளாதாரத்தைச் சரி செய்ய முடியுமா?

- குட்டுவன்

2019ஆம் ஆண்டு உலகளவில் சமுதாய, பொருளாதாரக் குறியீடுகள் வெளியிடப்பட்டுள்ளன. தலாவாரி வருமானம் (per Capital) குழந்தைகளிடம் காணப்படும் ஊட்டச்சத்துக் குறைபாடு குழந்தைகள் இறப்பு வகிதம் காசநோய் பாதிப்பு மலேரியா பாதிப்பு ஆகியன முதன்மைக் கூறுகளாக எடுத்துக்கொள்ளப் பட்டுள்ளன. மேலும் அரசியல் கூறுகளை ஆய்வு செய்து குறிப்பாக மனித உரிமை மீறல், சட்டப்படியான ஆட்சியைப் பின்பற்றாமல் இருத்தல், தனிநபர் சுதந்திரம் பறிப்பு, தேர்தல் முறையில் உள்ள குறைபாடுகள் ஆகிய கூறுகளும் அலசப்பட்டுள்ளன. இந்தியா விடுதலை பெற்று 72 ஆண்டுகள் முடிந்துவிட்டன. 1950இல் இந்திய அரசமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்தது. கடந்த 69 ஆண்டுகளில் இந்திய அரசமைப்புச் சட்டம் திருத்தப்பட்ட முறைகள், பறிக்கப்பட்ட மாநில உரிமை கள், மனித உரிமைகள் ஆகிய கூறுகளையும் இந்தியப் புள்ளிவிவரங்களின்படி ஆய்வு செய்தால் இந்தியாவில் ஆட்சியியல் கூறுகள் சிதைந்து வருகின்றன என்ப தையே நமக்குச் சுட்டுகின்றன.

மக்கள் தொகையில் இந்தியா உலகளவில் இரண்டாம் இடத்தில் உள்ளது. இந்த மக்கள் தொகை வளர்ச்சியால் உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவைப் பெற முடியவில்லை. சான்றாக 2018ஆம் ஆண்டு 4000 டன்கள் உணவுப் பொருள்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. வேளாண் பிரச்சி னைக்கு முன்னுரிமை அளிக்காத காரணத்தினால் உலகில் அதிக விளைச்சல் நிலம் உள்ள நாடுகளில் ஒன்றான இந்தியாவில் உணவுப் பிரச்சினை தொடர்வது ஆட்சியாளர்களுக்குப் பெருத்த அவமானம் என்று பல வல்லுநர்கள் குறிப்பிடுகின்றனர். மேலும் உற்பத்தி யான வேளாண் பொருள்களைச் சேமித்து வைக்கும் வசதியும் இந்தியாவில் குறைந்து காணப்படுகிறது.

2011ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப் பின்படி இந்திய மக்கள் தொகை வளர்ச்சி மிகக் குறைந்த விழுக்காட்டில் குறைந்துள்ளது. கடந்த 45 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு வேலையின்மை பெருகி வருகிறது. குறிப்பாக மக்கள் தொகையில் 15 முதல் 60 வயது வரை உள்ளவர்கள் வேலை செய்யும் நிலையில் இருந்தாலும் இந்த வயதிற்கு உட்பட்ட மக்களிடம்தான் வேலையின்மை பெருகியுள்ளது. உலகளவிலான பன்முக வறுமைக் குறியீடு (Multi-Dimensional Poverty Index 2019) 2019இல் 36 கோடி மக்கள் மூன்று வேளை உணவை உண்ண வழியின்றி உள்ளனர். இந்த மக்களில்தான் ஏழைகளில் மிகவும் ஏழைகள் என்று கருதப்படுகிற மக்களுக்கு வருமானம் பெருக வில்லை என்றும் குறிப்பிடப்படுகிறது. மேலும் வருமான ஏற்றத்தாழ்வும் பெருமளவில் உயர்ந்து வருகிறது.

ஆண்டு தோறும் வெளிவரும் தேசிய அளவில் குற்றங்களின் புள்ளிவிவரங்களில்தான் தற்கொலைகள் செய்துகொள்வோரின் எண்ணிக்கை வெளியிடப்படும். மேலும் எக்காரணங்களுக்காக இவர்கள் தற்கொலை செய்து கொண்டனர் என்ற விவரமும் கிடைக்கும். கடந்த மூன்றாண்டுகளாக இந்தப் புள்ளிவிவரங்களை ஒன்றிய அரசு வெளியிடவில்லை. ஏனென்றால் வேளாண் தொழிலாளர்களின் தற்கொலை எண்ணிக்கை வெளியில் தெரிந்துவிடும் என்ற காரணத்திற்காகத்தான்.

தட்டம்மை வட மாநிலங்களில் பெரிய அளவில் இன்றும் உள்ளது. அதற்குக் காரணம் குழந்தை பிறந்த 9வது மாதத்திலும் பின்பு 1 வயதிற்குப் பிறகு தடுப்புசிப் போடும் முறை இல்லாததே காரணம் என்று புள்ளி விவரங்கள் சுட்டுகின்றன. 5 வயதிற்குட்பட்ட குழந்தை கள் 37.9 விழுக்காடு ஊட்டச்சத்து குறைபாடுகளால் அவதியுறுகின்றன என்றும் புள்ளிவிவரங்கள் சுட்டுகின்றன. குழந்தை இறப்பு வீதம் 1000 குழந்தைகளுக்கு 34.6 என்ற அளவில் தேசிய அளவில் உள்ளது. மலேரியா நோயால் தாக்கப்படுவோர் 1000க்கு 18.8 வீதமாக உள்ளது. காசநோயால் தாக்கப்படுவோர் எண்ணிக்கை 1 இலட்சத்திற்கு 211 வீதமாக உள்ளது. இதில் பெருங் கொடுமை என்னவென்றால் கடந்த இரண்டு ஆண்டு களில் இந்தியாவில் பயிற்சி பெற்ற ஒரு இலட்சம் மருத்து வர்கள் வெளிநாடுகளில் வேலைக்குச் சென்றுள்ளனர். குறிப்பாக. இங்கிலாந்தில் 50 ஆயிரம் இந்திய மருத்து வர்கள் பணிபுரிகின்றனர். அடுத்ததாக அமெரிக்க கனடா ஆஸ்திரேலியாவில் பணிபுரிகின்றனர். ஆஸ்திரேலி யாவில் 5 மருத்துவர்களில் ஒருவர் இந்தியராகவும் கனடாவில் 10 மருத்துவர்களில் ஒருவர் இந்தியராகவும் உள்ளனர். இந்தச் சூழ்நிலை தொடருமானால் தற்போது மக்கள் தொகைக்கு ஏற்ப மருத்துவர்கள் உருவாவதற்கு மேலும் 40 ஆண்டுகள் ஆகும் என்று மருத்துவ அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

ஒன்றிய அரசின் நேரடிக் கட்டுப்பாட்டில் உள்ள AIIMS மருத்துவமனையில் 1989 முதல் 2000 வரை யில் பயின்றவர்களில் 428 பேர் மருத்துவராகத் தகுதிப் பெற்றுள்ளனர். இதில் 241 மருத்துவர்கள் வெளிநாடு களில் தங்கிவிட்டனர். குறிப்பாக பஞ்சாப், அரியானா, இமாச்சலப் பிரதேசம், மகாராஷ்டிரா, ஆந்திரம் ஆகிய

மாநிலங்களைச் சேர்ந்த மருத்துவர்கள்தான் அதிக அளவில் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர். வட மாநிலங்களில்கூட பிற்படுத்தப்பட்டவர்கள், தாழ்த்தப் பட்டவர்கள், பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மருத்துவர்கள்தான் இந்திய மாநிலங்களிலேயே பணி யாற்றுகின்றனர் என்ற புள்ளிவிவரமும் உள்ளது. AIIMS மருத்துவக் கல்லூரியில் பயின்ற ஒடுக்கப்பட்ட சமுகத்தினர் 70 விழுக்காடு இந்தியாவிலேயே பணியாற்று கின்றனர் என்று புள்ளிவிவரங்கள் சுட்டுகின்றன.

தமிழ்நாட்டில்தான் அரசு மருத்துவக் கல்லூரிகளில் பயிலுகின்ற மருத்துவர்கள் ஊர்ப்புற மருத்துவமனை களில் மருத்துவராகப் பணியாற்றுகின்றனர். அரசு மருத்துவமனைகளில் பணியாற்றுபவர்களுக்கு முது நிலை மருத்துவப் பட்டப்படிப்பில் இடஒதுக்கீடு 2016ஆம் ஆண்டு வரை அளிக்கப்பட்டது. குறிப்பாக அரசுப் பணியில் உள்ள மருத்துவர்கள் முதுநிலை மருத்துவப் படிப்பில் சேருவதற்கான தகுதியாக ஒரு ஆண்டு ஊர்புறப் பணிக்கு ஒரு மதிப்பெண் என்ற அடிப்படையில் அதிக அளவாக 10 மதிப்பெண் வரை அளிக்கப்பட்டது. மேலும் முதுநிலை பட்டப்படிப்பு முடித்த பின்பு அரசு மருத்துவக் கல்லூரிகளில் குறைந்தது 5 ஆண்டுகள் பணியாற்ற வேண்டும் என்ற கட்டாயம் இருந்தது. இதன் காரணமாக இந்திய மாநிலங்களிலேயே தமிழ்நாடு சுகாதாரக் குறியீடுகளில் முதல் மாநிலமாக விளங்கியது. மேலும் சாதாரண ஏழை எளிய குடும் பங்களில் இருந்து மருத்துவர்கள் உருவாகி தமிழ் நாட்டிலேயே பணியாற்ற வேண்டும் என்ற தொண்டு மனப்பான்மையும் வளர்ந்து. இதன் காரணமாகத்தான் தமிழ்நாட்டிலிருந்து மற்ற மாநிலங்களுக்கோ வெளி நாடுகளுக்கோ செல்வோர் எண்ணிக்கை ஒரு விழுக் காட்டிற்கும் குறைவாகவே இருந்தது. தமிழ்நாட்டில் உயர் மருத்துவம் பயின்றவர்கள் அதிக எண்ணிக் கையில் அரசுப் பொது மருத்துவ மனைகளிலேயே வேலை செய்கிறை மனப்பான்மையும் வளர்ந்தது. இதைத் தமிழ்நாட்டு முன்மாதிரி (Tamil Nadu Health Model) என்று குறிப்பிட்டனர்.

நீட் தேர்வின் வழியாகவும் முதுநிலை உயர் மருத்துவப் பட்டப்படிப்புகளில் இருந்த அரசுப் பணி யாற்றுபவர்களுக்கு இருந்த இடஒதுக்கீடு முற்றிலும் 2016க்குப் பிறகு நீக்கப்பட்டுவிட்டது. மற்ற மாநிலங் களில் உள்ளவர்கள் தமிழ்நாட்டு அரசு மருத்துவக் கல்லூரிகளில் இடம் பிடித்து பட்டம் பெற்று வெளிமாநி லங்களுக்கும் வெளி நாடுகளுக்கும் செல்ல ஊக்கு விக்கும் முறையை ஒன்றிய அரசு புகுத்திவிட்டது. இதை ஆதிக்கச் சாதியினர் தமிழ்நாட்டிற்கு எதிராக செய்த பெரும் சதி என்றே எடுத்துக் கொள்ள வேண்டும். வளர்ச்சி பெற்று எல்லாத் துறைகளிலும் முன்னணியில் உள்ள தமிழ்நாட்டைச் சீர்குலைக்கும் முயற்சியாகவே மருத்துவத் துறையை நாம் காணமுடிகிறது.

2018ஆம் ஆண்டு மானுட மேம்பாட்டு அறிக்கை யின் குறியீடுகளின் அடிப்படையில் பொதுகல்விக்காக இந்திய அரசு செலவிடும் தொகை பற்றி புள்ளிவிவரங் கள் வெளியிடப்பட்டுள்ளன. ஒவ்வொரு 100 ரூபாய் பொதுச் செலவில் கல்விக்காக ரூ.4 மட்டுமே இந்தியா கல்விக்காகச் செலவிடுகிறது. 19 கோடி தொடக்கப் பள்ளிகளில் பயிலுகின்ற மாணவர்களில் 6 கோடி மாணவர்கள்தான் இடைநிலைப் பள்ளிக் கல்வியையும் உயர்நிலைப் பள்ளிக்கல்வியையும் தொடர்கின்றனர். 2.5 கோடி பட்டப்படிப்பை பயின்றவர்களில் 39 இலட்சம் பேர் மட்டும்தான் முதுகலை படிப்பிற்கு செல்கின்றனர். இவர்களில் 2 இலட்சம் பேர்தான் எம்.பில். பிஎச்.டி ஆய்வுப்பட்டங்களைத் தொடர்கின்றனர். இந்தப் புள்ளிவிவரங்களின் அடிப்படையில்தான் தமிழ்நாட்டின் வளர்ச்சியைப் பார்த்தால் இந்திய மாநிலங்களிலேயே அதிக எண்ணிக்கையில் உயர்கல்வி பயில்பவர்கள் உள்ளனர். இன்றைக்குத் தமிழ்நாடு இந்திய மாநிலங் களிலேயே முதல்நிலையில் உள்ளது.

2019இல் அமெரிக்காவின் நியுயார்க் நகரின் மனித உரிமைக் கண்காணிப்பு அமைப்பு (Human Rights Watch Newyork) வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்தியாவில் கடந்த ஆண்டில் பாலியல் வன்முறை, சிறுபான்மை மதத்தினர் மீது தாக்குதல், சமூகச் செயல் பாட்டாளர்கள் ஆகியோர் மீது கொடுமையான தாக்குதல் கள் நடத்தப்பட்டுள்ளன என்று குறிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பாக ஐக்கிய நாடுகள் மன்றத்தின் மனித உரிமை ஆணையரின் முதல் அறிக்கையில் காஷ்மீர் மாநிலத் தில் மனித உரிமை மீறல்கள் அதிகமாக நடந்துள்ளன என்றும் நீதிமன்றத்தில் அவர்களுக்கு நீதி கிடைப்ப தில்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தியாவில் 100 நகரங்களை எடுத்துக் கொண்டு ஆய்வு செய்த போது ஒரு நகரம் கூட சுகாதாரமாக இல்லை என்றும் குப்பைக் கழிவுகள் அதிகமாகப் போடப்படுகின்றன என்றும் குப்பைகளை அகற்றுவதிலும் சரியான அணுகுமுறைகள் பின்பற்றப்படுவதில்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒன்றிய அரசு குறிப்பாக திரு.மோடி தூய்மை இந்தியா திட்டத்தை அறிவித்த பிறகும் தலைநகர் புதுதில்லியிலும் பஞ்சாப் அரியானா போன்ற மாநிலங்களிலும் சுற்றுச்சூழல் பாதிப்புகளால் மக்கள் இன்னலுற்று வருகின்றனர் என்றும் குறிப் பிடப்பட்டுள்ளது.

கல்வித் தகுதி அடிப்படையில் வெளிநாட்டிற்குச் சென்று பணிபுரிபவர்களின் எண்ணிக்கையில் தென்னக மாநிலங்கள்தாம் முன்னிலையில் உள்ளன. இதற்கு மாறாக மகாராட்டிரா, உத்திரபிரதேசம், பீகார், ஒரிசா

போன்ற மாநிலங்களில் இருந்து தென் மாநிலங்களுக்கு வேலை தேடிப் பல இலட்சக்கணக்கானோர் தமிழ் நாட்டில் குவிந்து வருகின்றனர். இவ்வாறு உள்நாட்டு வெளிநாட்டு பொருளாதாரச் சமூகச் சூழல்களில் பின்னடைவுகள் ஏற்பட்டு வரும் நேரத்தில் இந்தியப் பொருளாதாரம் பின்னோக்கிச் செல்கிறது. இந்தப் பின்னடைவு தொடருமானால் இந்தியா ஒரு பெரிய பொருளாதார வீழ்ச்சியைச் சந்திக்கும் என்பதில் ஐயமில்லை.

குறிப்பாக வேளாண் தொழில் கடந்த 20 ஆண்டுகளாக 2.4 விழுக்காடு ஆண்டு வளர்ச்சியை எட்டுவதிலேயே பெரிய அறைகூவல்களைச் சந்தித்து வருகிறது. இந்தியாவில் சிறுகுறு விவசாயிகளுடைய எண்ணிக்கை 92 விழுக்காடு அளவில் இருக்கிறது. இவர்களுக்கு உரிய நேரத்தில் கடன் கிடைப்பதில்லை. 1969ஆம் ஆண்டு வங்கிகள் தேசியமயமாக்கப்பட்ட போது விவசாயம் சிறுகுறு தொழில்களுக்குக் கடனளிப்பதில் முன்னுரிமை வழங்கப்பட்டது. 1984வரை இந்தக் கொள்கை கடைப்பிடிக்கப்பட்டது. 1990க்குப் பிறகு சிறுகுறு விவசாயிகளுக்கு மற்றும் சிறு வணிகர்களுக்கு அளிக்கப்பட்ட கடன்களுக்குப் பதிலாக பெரும் தொழில் புரிவோர்க்கு கடன் அளிக்கப்படுகிறது. மேலும் தேசியமயமாக்கப்பட்ட போது வங்கிகளின் ஊரக வங்கி கிளைகள் 1933ஆக இருந்தது 1991இல் 35206ஆக உயர்ந்தது. மேலும் 40 விழுக்காடு மொத்த வங்கிகளின் கடனில் வேளாண்துறை, சிறுகுறு தொழில், வீட்டுக்கடன், பின்தங்கியோர், தாழ்த்தப்பட்டோர் ஆகிய பிரிவினருக்கு வழங்க வேண்டும் என்று தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளுக்கு வலியுறுத்தப்பட்டது.

தேசிய வேளாண் ஊரக வளர்ச்சி வங்கி 1982இல் உருவாக்கப்பட்டது. இந்த வங்கி கூட்டுறவு வங்கிகள் கடன் வழங்கும் திட்டத்தை மேலாண்மை செய்யும் என்றும் வலியுறுத்தப்பட்டது. இதன் காரணமாகப் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்கள், வேளாண் தொழிலில் ஈடுபடுவோர், நடுத்தரப் பிரிவினர் தேசியமயக்காப்பட்ட வங்கிகளில் தங்களுடைய சேமிப்பை வங்கிகளில் வைப்புத் தொகையாக வைத்தனர். இதன் காரணமாக வங்கிகளின் வைப்புத் தொகை அதிகரித்தது. 1969இல் நாட்டின் ஒட்டுமொத்த உற்பத்தியில் 13 விழுக்காடாக இருந்த வைப்புத் தொகை 1990இல் 38 விழுக்காடாக அதிகரித்தது. நாட்டினுடைய மொத்த சேமிப்பு 12.8 விழுக்காடாக 1969இல் இருந்தது. இது 21.7 விழுக்காடாக 1990இல் உயர்ந்தது. அதே போன்று நாட்டின் ஒட்டுமொத்த உற்பத்தியில் கடன் அளவு 1969இல் 10 விழுக்காடாக இருந்தது. 1990இல் 25 விழுக்காடாக உயர்ந்தது. நாட்டினுடைய ஒட்டுமொத்த முதலீடு 1969இல் 13.9 விழுக்காடாகவும் 1990இல் 24.1 விழுக்காடாக உயர்ந்தது. இந்தியப் பணவியல் பொருளாதாரம் தேசியமயமாக்கப்பட்ட பிறகு நலிந்தோரும் நடுத்தர வர்க்கத்தினரும் வேளாண் தொழிலில் ஈடுபடுவோரும் பலனடைந்துள்ளனர் என்பதை டாடா சமூகவியல் மையத்தில் பணியாற்றும் பேராசிரியர் ராம்குமார் ஆகத்து 9, 2019 அன்று குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு இருந்த நிலை மாறி 2010க்குப் பிறகு பல மோசடிகளும் பெருமுதலாளிகள் 7 இலட்சம் கோடி கடனைப் பெற்று திருப்பியளிக்காத சூழல் உள்ளது. கடந்த நான்காண்டுகளில் அதிக அளவில் அம்பானி அதானி போன்ற பனியாக்கள்தான் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் 2 இலட்சம் கோடி அளவிற்குக் கடன்களைப் பெற்றுள்ளனர். வங்கியியல் பொருளாதாரத்தில் ஒரு தேக்க நிலை உருவாவதைச் சீர்செய்ய முயற்சி செய்த முன்னாள் இந்திய மைய வங்கியின் தலைவர் ரகுராம்ராஜன் பதவியிலிருந்து துரத்தப் பட்டார்.

மேலும் 2014இல் பா.ச.க. அரசு அமைந்தவுடன் மோடி, ஏழைகள் வங்கிக் கணக்கைத் தொடங்க வேண்டும் என்ற ஒரு அறிவிப்பை வெளியிட்டார். இந்த அறிவிப்பு 2010லேயே மன்மோகன்சிங் ஆட்சிக்காலத்தில் தொடங்கப்பட்டது என்பதுதான் உண்மை. ஆனால் இந்தச் சாதாரண ஏழைகள் வங்கிக் கணக்குகள் தொடங்க முடிந்தது என்று சாதனை பேசும் மோடி அரசு இவ்வங்கிக் கணக்குகள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதைப் பற்றிக் கவலைக் கொள்ளவில்லை. பெரும்பான்மையான நலிந்த பிரிவினரால் தொடங்கப்பட்ட வங்கிக் கணக்குகள் செயல்பாடற்று உள்ளன என்பதையும் புள்ளிவிவரங்கள் சுட்டுகின்றன. வங்கித்துறையில் பண மோசடி பணவியல் பொருளதாரத்தில் தேக்க நிலை என்றால் அரசு நிதியியல் கொள்கைகளிலும் தடுமாற்றங்கள் 1991லேயே தொடங்கின. இதன் காரணமாக ஏறக்குறைய 200 இலட்சம் கோடிகளுக்கு மேல் தனியார் துறை வளர்வதற்காக வரிச்சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளன. இந்த வரிச்சலுகைகள் அளிக்கப் பட்ட பிறகும் நிதியியல் பொருளாதாரம் முன்னேற்றப் பாதையில் செல்லவில்லை. குறிப்பாக ரூ.500, ரூ.1000 பணத்தாள்கள் செல்லாது என்று அறிவிக்கப் பட்ட பிறகு தடுமாற்றத்திலிருந்து பொருளாதாரம் தேக்க நிலைக்குச் சென்றுவிட்டது. இதில் பாதிக்கப்பட்டவர்கள் பெரும்பாலானோர் ஏழை நடுத்தரப் பிரிவினர் என்பதும் நாம் கண்ட உண்மை.

சிறுகுறு தொழில்கள் தேக்க நிலையில் உள்ளது என்பதைத் தெரிந்து கொண்டும், சரக்குச் சேவை வரியை விதித்தது இத்துறையினருக்குப் பலத்த அடியாக இருந்தது. பெரும்பான்மையோர் வேலை

யிழக்க நேரிட்டது. வேளாண்மை சிறுகுறு தொழில்களில் இருந்த பொருளாதாரப் பின்னடைவு எனும் நோய் பெரிய தொழில்களையும் தொற்றிக் கொண்டது. மோட்டார் வாகன உற்பத்தித் தொழில்களில் பெரும் தேக்க நிலை ஏற்பட்டு பல முன்னணி நிறுவனங்கள் தங்களின் உற்பத்தியைக் குறைத்துக் கொண்டுள்ளன. வரும் மாதங்களில் 36 இலட்சம் பேர் வேலையிழப் பார்கள் என்று குறிப்பிடப்படுகிறது. இவ்வாறு பொரு ளாதாரத்தின் அனைத்துத் தளங்களிலும் ஏற்பட்டுள்ள தேக்க நிலையைச் சரி செய்வதற்கு ஒன்றிய அரசு எந்தப் புதிய திட்டத்தையும் அறிவிக்கவில்லை. மாறாக இந்த நிலையைத் திசை திருப்பவே காசுமீருக்கு அரசமைப்புச் சட்ட 370 - 35-ஏ பிரிவுகளின் வழியாக அளித்து வந்த சிறப்பு உரிமைகளைப் பறித்திடும் வகையில் அந்தவிதிகள் இரண்டும் அரசமைப்புச் சட்டத்திலிருந்து நீக்கப்பட்டுவிட்டன.

இந்த நடவடிக்கையையும் காஞ்சிபுரத்து அத்திவரதர் வந்தார்; படுத்தார்; நின்றார்; குளத்திற்குள் சென்றார் போன்ற செய்திகளையே அளித்து ஊடகங்கள் பொரு ளாதாரப் பின்சரிவைப் பற்றி எவ்வித கருத்துகளையும் தெரிவிப்பதற்கு அஞ்சுகின்றன. பொருளாதாரச் சரிவும் சனநாயகத்தின் அனைத்துக் கூறுகளிலும் ஏற்பட்டு வருகின்ற சரிவுகளும் இந்தியப் பொருளாதாரத்தைத் தேக்க நிலையில் இருந்து மீட்குமா? ❖

## வாழ்க்கைத் துணைநல ஒப்பந்த விழா
## கீ. இலக்கியா - க.அ. கண்ணன்

தஞ்சை மாவட்டம், கீழமாஞ்சேரி நினைவில் வாழும் பெ. நடேசன் - தனபாக்கியம், காட்டு மன்னார் கோவில் வட்டம், வீரானந்தபுரம் நினைவில் வாழும் நல்லாசிரியர் ந. கணபதி - கோமளவள்ளி - நலமுடன் திருமதி. சீத்தா லட்சுமியின் பெயர்த்தியும் சென்னை மேமலர் தோட்டம் ந. சீனிவாசன் - அறிவுக்கடல் ஆகி யோரின் மகள் சீ. இலக்கியாவிற்கும்; திருவள்ளூர் மாவட்டம், திருப்பந்தியூர் கிராமம் நினைவில் வாழும் செ.வ. ஏழுமலை-ரெங்கநாயகி, மும்முடி குப்பம் கிராமம் நினைவில் வாழும் வெ. நடராசன் - காந்திமதி இணியரின் பெயரனும், அம்பத்தூர் வெங்கடாபுரம் ஏ. அன்பரசு - சாந்தி இணையரின் மகன் சா.அ. கண்ணனுக்கும் வாழ்க்கைத் துணைநல ஒப்பந்த விழா சென்னை-34, சிறீ ராமா கல்யாண மண்டபத்தில் 25.8.2019 ஞாயிறு காலை சிறப்புடன் நடைபெற்றது. மா.பெ.பொ.க. சார்பில் ப. வடிவேலு, தொல்காப்பியன், கலசம் ஆகியோர் கலந்துகொண்டு வாழ்த்தினர்.

# விடிகதிர்ப் பெரியார்

வழிவழியாய் ஆரியத்தின் அடிமைக் குப்பை
மடிமடியாய் முடிந்துவைத்த சடங்கு மூட்டை
குழிகுழியாய்ப் பார்ப்பனியச் சூழ்ச்சிப் பள்ளம்
குப்புறவே வீழ்ந்திருந்த தமிழா! உன்றன்
விழிவிழியாய்த் தன்மானச் சுடரை ஏற்ற
விடிகதிராய்ப் பெரியார் தோன்றாதிருந்தால்
மழிமழிக்கும் இழிமுடியாய்ப் பறந்திருப்பாய்
மதிப்புறவே வாழ்வதற்கு மறந்திருப்பாய்.

“பெண்டீரே! இருட்டறையில் இருந்தென் செய்வீர்?
பெண்கல்விச் சுடரேந்தி உயிர்ப்பில் வாழ்வீர்
கண்டீரோ கற்சிலையில் கடவுள் காட்சி?
கைத்தடியால் அடியுங்கள்; அழவே மாட்டார்.
உண்டீரோ? பட்டினியோ? கொழுத்தான் பார்ப்பான்
உருண்டீரே சுற்றுவழி; உருப்பட்டீரா?
கொண்டீரோ சூத்திரச்சி எனச் சொன்னானைக்
கூந்தல்மேல்? தமிழச்சி! எழுக தீயாய்.”

பெரியார்தாம் நெஞ்சுரத்தில் மலையின் ஈடு
பெண்ணுரிமை கற்பித்த புதிய ஏடு
நரியாரின் பார்ப்பனர்க்குச் செருப்புப் பூசை
நாற்சாதி மனுநீதி புதைத்த காடு.
சரியாத சாத்திரங்கள் சாய்த்த போர்வாள்
தமிழ் வரலாற்றைப் புரட்டிப் போட்ட வேங்கை.
புரிந்த முதல் “இந்தி எதிர்ப்”போரின் வெற்றி
முடைநாற்றப் புராணங்கள் அறுத்த வீரம்.

புத்துலகின் பொன்வாயில் திறந்து வைத்தார்.
புத்தனையே பின்பற்றி வாழச் சொன்னார்.
வைக்கத்தின் வீதிகளில் தீண்டாமையை
வேரறுக்க, நடையிட்டு வென்று நின்றார்.
தொற்றிவந்த தலைமுறைகள் மடமை தன்னைத்
துலக்கிட்ட கூர்மதிச் சிந்தனையின் வேந்தர்
எத்திசையும் எந்நெஞ்சும் எழுதி வைத்து
எத்தனையோ நூற்றாண்டு போற்ற வாழ்வார்!

- பேராசிரியர் **இரா. சோதிவாணன்**

# திருக்குறளும் சுயமரியாதை இயக்கமும்

- வாலாசா வல்லவன்

திருக்குறள் ஆரியப் பார்ப்பனிய நான்மறை களுக்கு எதிராக எழுதப்பட்ட நூல் ஆகும். சுயமரியாதை இயக்கமும் ஆரியப் பார்ப்பனப் பண்பாட்டுக்கும் அவர் களின் அரசியல் மேலாதிக்கத்திற்கும் எதிராகத் தோன்றிய இயக்கமாகும். அந்த வகையில் திருக்குறளைச் சுய மரியாதை இயக்கம் தொடக்கக் காலம் முதலே போற்றியே வந்திருக்கிறது.

14.03.1926 "குடிஅரசு" இதழில் திருக்குறள் கருத்துகளை எளிமைப்படுத்தி தூத்துக்குடி ஜெகவீர பாண்டியன் அவர்கள் இயற்றிய "திருக்குறள் குமரேச வெண்பா" என்ற நூலுக்குச் சிறந்த முறையில் மதிப் புரை எழுதப்பட்டுள்ளது.

06.03.1927 "குடிஅரசு" இதழில் திருக்குறள் பரிமேலழகருரை பாக்கெட் அளவு நூலுக்கு மதிப்புரை எழுதப்பட்டுள்ளது. அருணாசலக் கவிராயர் அவர்கள் திருப்பரங்குன்றத்திலிருந்து இந்நூலை பதிப்பித்து வெளியிட்டுள்ளார்.

17.04.1927 "குடிஅரசு" இதழில் 'திருவள்ளு வனார் பஞ்சரத்தினம் 500' என்ற நூலுக்குச் சிறந்த முறையில் மதிப்புரை எழுதப்பட்டுள்ளது. திருவள்ளுவர் திராவிட வேதத்தை அருளியவர் என்றும், சித்த வைத்தியம் தொடர்பாக இந்நூலை திருவள்ளுவரே எழுதியதாக இந்நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார். சித்தர் நூல் பதிப்புக் கழகம் வண்ணாரப்பேட்டை சென்னையிலிருந்து இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது.

02.10.1927 "குடிஅரசு" இதழில் 'திருக்குறளும் பகவத்கீதையும்' என்ற கட்டுரை இடம்பெற்றுள்ளது. கட்டுரையாளர் பெயர் வெளியிடப்படவில்லை. பகவத் கீதையின் தத்துவங்களுக்கு நேர் எதிரானது திருக்குறள். திருக்குறள் தமிழர் மறை. கட்டுரை வெளிவருவதற்கு சில நாள்களுக்கு முன்பு தமிழகம் வந்த காந்தியார் திருக் குறளைப் புகழ்ந்து பேசாமல் பகவத் கீதையைப் புகழ்ந்து பேசியதை இக்கட்டுரையாளர் கண்டித்துள்ளார்.

சுயமரியாதை இயக்கத்தின் தொடக்கக் காலத்தில் தீவிரமாகப் பணியாற்றிய புலவர் சாமி. சிதம்பரனார் திருவள்ளுவரின் கருத்துகள் சுயமரியாதை இயக்கத்தின் கருத்துகளோடு எப்படி ஒத்துப்போகின்றன என்பதை விளக்கி குடிஅரசு ஏட்டில் 20.11.1927 முதல் 07.10.1928 வரை பதினெட்டு தலைப்புகளில் தொடர் கட்டுரைகளை எழுதியுள்ளார். 'திருவள்ளுவரும் தமிழரும்' என்ற முதல் கட்டுரையிலேயே சுயமரியாதை இயக்கம் திரு வள்ளுவரை எப்படி அணுகுகின்றது என்பதைத் தெள்ளத் தெளிவாக விளக்குகின்றார்.

பரிமேலழகர் உரை வடமொழி சார்பானது. திரு வள்ளுவரின் மூலக் கருத்துக்கு எதிரானது என்பதை 1927இலேயே எழுதி உள்ளதை எண்ணிப் பார்க்கும் போது வியப்பாக உள்ளது.

நமது செந்தமிழ்நாட்டுப் பழம் பெரியாராகிய திரு வள்ளுவரின் பெயரைக் கேட்டறியாத கற்றறிந்த தமிழர் கள் இல்லையென்றே கூறலாம். அவர் பெயர் பலருக்குத் தெரிந்திருப்பினும், அவர் கொள்கைகளையும், உப தேசங்களையும் அறிந்திருப்பவர் மிகச் சிலரே. அவர் களிலும் திருவள்ளுவர் கொள்கைகளை உண்மை யாக அறிந்திருப்பவர் மிக மிகச் சிலர். திருவள்ளுவர் வரலாறு இன்னதென்பதை நாம் திட்டமாகத் தெரிந்து கொள்ள முடியவில்லை. அவரைப்பற்றி வழங்கும் கதைகள் உண்மையென்று கொள்ளமுடியாத வகையில் அமைந் திருக்கின்றன.

எந்தக் கதை எப்படியிருந்தாலும், திருவள்ளுவர் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழ்நாட்டில் தமிழ்க் குடியிற் பிறந்த ஒரு பெரியாரென்பதையும், அவருக்கு இணையான அறிஞர்கள் இவ்வுலகில் வேறு ஒருவரும் இல்லையென்பதையும், அவருடைய உப தேசங்கள் உலக மக்கள் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளத் தகுந்ததாகுமென்பதையும் ஒருவரும் மறுக்க முடியாததாகும். தமிழ்நாட்டிற் பிறந்த ஒரு பெரியாரின் சிறந்த நூலைப் பயில்வதால் தமிழரின் பண்டைக்கால ஒழுக்கத்தையும், நாகரிகத்தையும், கொள்கைகளையும் (மதங்களையும்) அறிந்து கொள்ள லாம். திருவள்ளுவர் கூறியிருப்பது முழுவதும் தமிழர் களின் கொள்கைகளே என்று கூறுவாரும் நம்புவாரும் பலருண்டு. ஆனால் பார்ப்பனத் தமிழறிஞர்கள் பலரும் திருவள்ளுவரின் சீரிய நூலைக் கண்டு, வடமொழி யில் அத்தகைய நூல் இல்லாதிருப்பதை எண்ணி, அது வடமொழியிலிருந்து வந்ததாகக் கூறுவர். ஆனால் இக்கூற்று முழுவதும் பொய்க் கூற்றாகும். திருவள்ளுவர் கூறின அனைத்தும் தமிழர் கொள்கையே என்று கூறுவதும் முழுதும் உண்மையன்று. திருவள்ளுவர் நூலிலும் ஆரியக் கொள்கைகள் கலந்துவிட்டன என் பதைத் தமிழர்கள் ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும். பழந்தமிழ் நூலாகிய தொல்காப்பியத்திலேயே பாமும் பார்ப்பனீயம் சிறிது புகுந்திருக்கின்றது உண்மையென் றால், அதற்கும் பிற்பட்ட திருக்குறளில் பார்ப்பனீயம் சிறிது நுழைந்திருக்கின்றதென்று கூறுவதற்காக யாரும் ஆச்சரியப்பட வேண்டியதில்லையன்றோ?

நமது அருமைத் திருக்குறளிலேயே பார்ப்பனீயம் நுழைந்திருக்குமாயின், பார்ப்பனீயத்திலேயே மூழ்கிக் கிடந்தவர்களாலும், பார்ப்பனீயமே சிறந்ததென்று எண்ணி யிருந்தவர்களாலும், எழுதப்பட்ட அதன் உரைகளால் திருவள்ளுவரின் உண்மைக் கொள்கைகள், அதாவது

தமிழரின் உண்மைக் கொள்கைகள், மேகத்தால் சூழப் பட்ட சந்திரனைப் போல் மறைபட்டுக் கிடக்கின்றன வென்பது உண்மையன்றோ? இப்பொழுது எல்லோ ராலும் சிறந்ததாகக் கொண்டாடப்படும் பரிமேலழகரின் உரையில் தமிழரின் உண்மைக் கொள்கைகள் எவ்வளவோ மறைபட்டுக் கிடக்கின்றன. பரிமேலழகரின் சிறந்த அறிவையும், பெருமையையும் நாம் குறைகூற வில்லை. உரை செய்யுந் திறமையிலும் பரிமேலழகர் மற்றெவருக்கும் இளைத்ததாகக் காணமுடியாது. ஆயினும், அவர் திருக்குறளில் உள்ள பொருள்கள் வடமொழியிலிருந்து வந்தனவென்ற கொள்கையைப் பலவிடங்களில் நிலைநாட்ட முயலுகின்றார். வருணாச் சிரம தருமத்தின் தோற்றமே திருக்குறளில் காணப்படா திருக்க, அதனைத் திருவள்ளுவரும் ஒப்புக் கொண் டார் என்று தமிழர் நினைக்கும்படி செய்வதற்குப் பெரிதும் முயல்கின்றார். தமிழர்கள் கொடுத்திருந்த பெண்களுரிமையை அழிப்பதற்கும் முயலுகின்றார். சமஸ்கிருத நூல்களுக்கும், பார்ப்பனக் கொள்கை களுக்கும், உயர்வு கொடுக்க வேண்டும் என்ற எண்ணத் துடனே திருக்குறளுக்கு உரையெழுதிச் செல்லுகின்றனர். பரிமேலழகர் உரை திருக்குறளுக்குச் சிறந்ததாயிருப் பினும், தமிழர் கொள்கைகளை மறைப்பதன் மூல மாகப் பெருந்தீங்கு விளைத்திருக்கின்றதைத் தமிழரின் உண்மை நாகரிகத்தை அறிந்தவர்கள் ஒப்புக் கொண்டுதான் ஆகவேண்டும். ஆகவே திருக்குற ளைப் பயிலுகின்றவர்கள் அதற்கு இப்பொழுதுள்ள பார்ப்பனீய உரைகளைத் துணையாக வைத்துக் கொண்டு, தங்கள் சொந்த அறிவினாலேயே பொரு ளைத் தெரிந்துகொள்ள வேண்டும். அதற்குப் பழந் தமிழ் நூல்களின் பயிற்சியும், பழந்தமிழரின் கொள் கைகளும் தெளிவாகத் தெரிந்திருக்க வேண்டும் என்று சுயமரியாதை இயக்கம் திருக்குறளை எப்படி அனுகிறது என்பதைத் தெளிவுப்படுத்தி உள்ளார்.

12.11.1927-இல் கூடிய அம்பாசமுத்திரம் பார்ப் பனரல்லாத வாலிபர் கழகக் கூட்டத்தில் திருவள்ளுவர் வாழ்த்துப் படிக்கப்பட்டது.

## திருவள்ளுவர் வாழ்த்து
## எழுசீரடி யாசிரிய விருத்தம்

ஆரி யந்தனின் மிக்க மேன்மை யழியு
மென்னவஃ தோங்கவே
சீரி யல்'தமிழ்'த் தேமொ ழிக்கொரு
தெய்வமா'மறை' யீந்தனன்
பேரி சைக் குறு மாமு னிக்குல வழியின்
'வள்ளுவன்' பெருமையை
ஓரி னாடகத் தியாரு முன்னினர் வண்மை
யோனென வாழ்த்துமால். (1)

எம்ம தத்தின ராயி னுநமக் கற்ற முற்றதொர்
பொருளெனச்
சம்ம தத்தினி தேத்தி வாழ்ந்திடத் தக்க
விப்'பொது மறை'யினால்
கொம்மை முத்தமிழ்க் கொற்ற நாட்டினர்
மயிலை யூரினிற் குவலயம்
மம்மர் நீத்துணர் வாற்ற வந்தருள்
'நாயனா'ரென வாழ்த்துமால். (2)

இயையு நாற்பொரு ளினித ளிக்குமொர்
நூலதேயரு நூலென
உயரு நான்கொழித் தொன்றி ரண்டையு முற்ற
ளிக்கு 'முப்பா'லினை
முயல யாவரு முத்தி யெய்துதல் முன்னி
ஈந்தருள் முனைவனை
இயலின் மிக்கதொர் 'தேவ தேவ'னென் றென்று
மேத்தினர் வாழ்த்துமால். (3)

நைந்த ழிந்திடு முயரி னுக்கரு நன்ம
ருந்தெனும் வாய்மையால்
உழ்ய்து யர்ந்திட உலகம் வாழ்ந்திடற் குற்ற
'வாயுறை வாழ்த்தினை'
ஐந்தி லக்கணத் துற்ற யற்கொரு முதலெ
னப்படு பாவினால்
மைந்து றழ்ப்புது நூல ருள் 'முதற் பாவ லன்!'
புகழ் வாழ்த்துமால். (4)

நிறையி ரண்டடி கொண்டு மூன்றுல கன்ற
ளந்திடு நெடியனை
குறையி னின்றிடு மடியி னால்வெலுங்
"குற"ளெ னும்உல வாக்கிழி
பிறைது தற்றிரு மானெ னுங்கலை மடந்தை
வாழருட் பீடமாம்
கறைப டுஞ்"செந் நாமலர்"ப்பெருந் தகையின்
தாளிணை வாழ்த்துமால். (5)

உண்மை யன்பறி வான வோரிறை வாய்ம
லர்ந்திருக் கிளவியின்
பின்வி ளங்குயர் வேத மாகையின் பேர்கொள்
"உத்தர வேத"மென்
றின்ப மார்தரு கணையை வீறுகொண் டெழுந்த
மிழ்க்கடை மாணவை
துன்ப மாழ்ந்தொடுத்திடத்தி டும்"பெரு
நாவலன்" பெயர் வாழ்த்துமால். (6)

அருத்து மாந்தர்தங் கருத்தெ னும்பல பார்ப்பி
னுக்கமு துட்டியே
திருந்து புள்ளெனக் கருத்தன் பேர்கொளுஞ்
செய்ய வான் "திரு வள்ளுவர்"
அருந்த நூலினை யருளப் பார்மிசை அலரி
ருக்கையு மன்புள
முருத்து வாணகை நீத்து முன்வரு "நான்மு
கன்" அருள் வாழ்த்துமால். (7)

பொய்ம்மை நீங்கிய பொருள னைத்தையும்
பொருளெ னத்திரட் டிப்பெரும்
மெய்ம்மை யோருரு வாகச் செய்தருள்
மேன்மை மிக்க 'பொய் யாமொழி'
செம்மை யாருயிர்க் கன்னை சீலமும்
செருக்கெ னுந்திமி ரந்தனை
மும்மை யோட்டு மா தாது பங்கி'யென
முதுமை யோனியல் வாழ்த்துமால். (8)

பூவெனத் தகும் பொங்கு தாமரை யென்று
சான்றவர் புகறல்போற்
பாவெ னத்தகும் குரனெ னுந்திருப் பாவி
னாவியல் 'தெய்வநூல்'
தேவ ரியாவரும் செயலி ழுந்துசென் றெய்த்து
நிற்பவத் தேவர்தாம்
ஆவல் கொள்விடை யருளுந் 'தெய்வதப் புலவன்'
வாக்கினை வாழ்த்துமால். (9)

வேட்ட வேட்டவர் வேண வாகுடித் தென்று
மன்றென விளங்கலால்
மேட்டி மிக்கஜந் தருவெ னுந்'திரு
வள்ளுவப்பயன்' விண்டவன்
வாட்ட டங்கண் மனைவி யாலுல கத்தினுக்
குயர் கற்பினைக்
காட்டு 'மந்தணன்' கடிம லர்ப்பதம் கடமை யே
யென வாழ்த்துமால். (10)

பள்ளஞ் சூழ்திருப் பூவை மாநகர் 'இராஜ
கோட்டியப் பன்' திரு
'வள்ளுவர்' புகழ்அ றிந்து வாழ்த்துமிவ்
'வான்பொருள்' பதிகந்தனை
உள்ளி வாழ்த்தியர் சுற்ற மோடவற் புவனி
போற்றுமந் நானெலாந்
தள்ள ருந்தமி ழன்பு தாங்கினர் வாழி! வாழியர்!!
வாழியே!!! (11)

**- குடி அரசு 20-11-1927**

'கற்பு' என்ற தலைப்பில் 08.01.1928 குடிஅரசு இதழில் 'சித்திர புத்திரன்' எழுதுவது என்று வெளியிடப் பட்டுள்ளது. அதில் திருவள்ளுவரின் இரண்டு அதி காரங்கள் வாழ்க்கைத் துணை நலம் (16), பெண்வழிச் சேரல் (91) ஆகிய இரண்டும் பெண்களை இழிவு செய்வதாகக் கண்டிக்கப்படுகிறது.

22.1.1928 குடிஅரசு இதழில் 'கற்பும் சித்திர புத்திரனும்' ஒர்மறுப்பு கோவிற்பட்டி ஸ்ரீமான் டி.ஆர். பரமசிவ முதலியார் என்பவர் எழுதியுள்ளார். அவ்வை யார் சொல்லி இருக்கிறார். பெண்கள் தாங்களாகவே ஏற்றுக் கொண்டது. திருவள்ளுவர் மீது குறை சொல லக்கூடாது என்று எழுதியுள்ளார்.

12.2.1928 குடிஅரசு இதழில் 'கற்பு' சித்திர புத்திரன் எழுதுவது என்றத் தலைப்பில் ஸ்ரீமான் டி.ஆர். பரமசிவ முதலியாருக்கு பதில் எழுதப்பட்டுள்ளது. திருக்குறளில் உள்ள பெண்ணடிமைக் கருத்துகளை ஏற்க முடியாது என்று அழுத்தம் திருத்தமாக கூறியதுடன், குறள் விஷ யத்திலும் குறளாசிரியர் விஷயத்திலும் நாம் கொண் டுள்ள பக்தி ஸ்ரீ முதலியார் கொண்டுள்ள பக்திக்கு மீறியதல்லவானாலும் குறைந்ததல்ல என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கின்றோம் என்று முடித்துள்ளார். பெரியார் தான் இந்தக் கட்டுரையை எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

25.3.1928 குடிஅரசு ஏட்டில் சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம் வெளியிட்ட திருக்குறள் நூலுக்கு விளம் பரம் செய்துள்ளனர். 200 பக்கங்கள் 2 அணா விலை. 6, பவழக்காரத் தெரு, சென்னை.

30.9.1928 குடிஅரசு ஏட்டில் 'திருக்குறளும் புராணக் கதைகளும்' என்ற தலைப்பில் முத்தறி என்பவர் எழுதியுள்ளார். அறிவுக்குப் புறம்பான பொய்க்கதை களை நாம் தள்ளிவிட வேண்டும் என்கிறார்.

9.12.1928 குடி அரசு இதழில் சுயமரியாதை இயக் கத்தைச் சார்ந்தவரும் தமிழ் நூற் பதிப்புக் கழக உரிமை யாளருமான காஞ்சிபுரம் க.குப்புசாமி அவர்கள் வாலாஜா பாத் இந்துமத பாடசாலை தலைமை ஆசிரியரும், சிறந்த சுயமரியாதை கொள்கை உடையவருமான மாசிலாமணி அவர்களின் திருக்குறள் உரையை (பரிமேலழகருக்கு மாற்றான உரையை) 4 அணா மலிவுப் பதிப்பில் முன்பதிவு செய்திருந்தார்.

நான்காயிரம் படிகளுக்குமேல் முன்பதிவுத் தொகை கிடைத்துவிட்டதை மகிழ்ச்சியோடு தெரிவித்துள்ளார். சிலர் 100, 200 படிகளுக்குப் பணம் அனுப்பி ஏழை மாணவர்களுக்கு வழங்க விருப்பம் தெரிவித்துள்ள தையும் குறித்துள்ளார். இனிமேல் பணம் அனுப்புப வர்கள் ரப்பர் கட்டடம் 8 அணா வீதமும், காலிக்கோ கட்டடம் 12 அணா வீதமும் அனுப்ப வேண்டும் என்று தெரிவித்துள்ளார். பொங்கல் புது நாள் அன்று பணம் அனுப்பிய எல்லோருக்கும் திருக்குறள் நூல் அனுப்பி வைக்கப்படும் என்றும் அறிவித்துள்ளார்.

24.3.1929 குடிஅரசு இதழில் திருக்குறள் மறுபதிப்பு 5,000 படிகள் அச்சிட்டுள்ளதாகவும், 'ஞானசூரியன்' நூல் பதிப்பு செய்துள்ளதாகவும் இரண்டிற்கும் சேர்த்து 2 ரூபாய் 8 அணா அனுப்ப வேண்டும் என்றும் காஞ்சி புரம் தமிழ் நூற்பதிப்புக் கழகத்தார் அறிவித்துள்ளார்.

29.9.1929 குடிஅரசு இதழில் காஞ்சிபுரம் தமிழ் நூல் நிலையத்தார் வெளியிட்டுள்ள திருக்குறள் உரை நூலுக்குச் சிறந்த மதிப்புரை எழுதப்பட்டுள்ளது. திரு வள்ளுவரின் உண்மைக் கருத்து இந்த உரையில் மிளிர்கிறது. சுயமரியாதை இயக்கத்திற்கு ஏற்ற உரை. இந்த நூலைத் தமிழன்பர்கள் வாங்கிப் பயன் அடைய வேண்டும் என்று எழுதியுள்ளனர்.

– (தொடரும்)



புலே பெரியார் டாக்டர். அம்பேத்கர் டாக்டர். லோகியா

## தோழர் வே. ஆனைமுத்து
### தலைமையில்

# பெரியார் 141ஆம் பிறந்தநாள் விழா

**வே. ஆனைமுத்து எழுதிய "ஜெயில்சிங் பிற்படுத்தப்பட்டோரின் உரிமைக் காவலர்" ஆங்கில நூலின்**

## இந்தி மொழிபெயர்ப்பு நூல் வெளியீட்டு விழா

**உயர்சாதி ஏழைகளுக்கான 10% இடஒதுக்கீடு நீக்கப்பட்டு உயர் சாதியினர், பிற்படுத்தப்பட்டோர், பட்டியல் வகுப்பினர், பழங்குடியினர் ஆகிய**

## எல்லா வகுப்புகளுக்கும் விகிதாசார வகுப்புவாரி இடப்பங்கீடு கருத்தரங்கம்

இடம் : **நிருபர்கள் சங்க அரங்கம்**
அரசினர் ஓமந்தூரார் தோட்டம், சேப்பாக்கம்,
சென்னை - 2.

நாள் : 22-09-2019 - ஞாயிறு
பிற்பகல் 3.30 மணி முதல் 8 மணிவரை

**குடும்பமாக - குழுவாக வாருங்கள்!**
**மனமுவந்து நன்கொடை தாருங்கள்!**

நிகழ்ச்சி ஏற்பாடு :

**அனைத்திந்தியப் பிற்படுத்தப்பட்டோர், பட்டியல் வகுப்பினர், பழங்குடியினர், மதச் சிறுபான்மையினர் பேரவை.**
அறை எண் 19, 7 நீலி வீராசாமி தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.

| | |
|---|---|
| **கலச. இராமலிங்கம்** | **வே. ஆனைமுத்து** |
| பொதுச் செயலாளர் | புரவலர் - தலைவர் |
| 9444607804 | 9444804980 |

## நிகழ்ச்சி நிரல்
**(பிற்பகல் 3.30 மணி முதல் 8 மணி வரை)**

| | |
|---|---|
| தலைமை : | தோழர். **வே.ஆனைமுத்து**<br>புரவலர் - தலைவர்<br>அனைத்திந்திய ஒடுக்கப்பட்டோர் பேரவை |
| வரவேற்புரை : | கலசு. **இராமலிங்கம்**<br>பொதுச் செயலாளர்,<br>அனைத்திந்திய ஒடுக்கப்பட்டோர் பேரவை |
| தொடக்கவுரை : | தோழர் இரூர் ச. **இராதாகிருட்டிணன்**<br>திருச்சி |
| நூல் வெளியீடு & சிறப்புரை : | டாக்டர் **தாவூஜிகுப்தா**<br>முன்னாள் மேயர், லக்னோ, உத்தரப்பிரதேசம் |
| படிகள் பெறுபவர் : | **உத்தரப்பிரதேசப் பிற்படுத்தப்பட்டோர் பேரவை**<br>வழக்குரைஞர் **லெனின் வினோபர்**<br>உறுப்பினர், பெரியார் அம்பேத்கர்<br>தொண்டு நிறுவனம், புதுதில்லி.<br>வழக்குரைஞர் சீ. **முத்துக்கிருட்டிணன்**<br>மற்றும் **நண்பர்கள்**<br>உச்சநீதிமன்றம், புதுதில்லி<br>தோழர். **வே. இராசேந்திரன்**<br>செயலாளர், சமூகநீதிப்பேரவை, BHEL<br>இராணிப்பேட்டை<br>தோழர் செ. **லெனின்ராசு**<br>சமூக நீதி ஆர்வலர், BHEL திருச்சி |
| மொழி பெயர்ப்பாளரின் சிறப்புரை : | டாக்டர் **பி.சி. பதஞ்சலி**<br>முன்னாள் துணைவேந்தர், (பீகார் & உ.பி.) |
| சிறப்புரை : | நீதியரசர் **து. அரிபரந்தாமன்**<br>முன்னாள் நீதிபதி, சென்னை உயர்நீதி மன்றம் |
| நன்றியுரை : | தோழர். **ப. வடிவேலு** |

## மிதிவண்டிப் பரப்புரைத் தோழர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ் அளித்தல்

மண்டல்குழுவின்பரிந்துரையைநடைமுறைப்படுத்தக் கோரி 25.2.1990 ஞாயிறு திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் ஒன்றியத்தில் மா.பெ.பொ.க. மாவட்டச் செயலாளர் தோழர் பொ.சுப்பிரமணியன் தலைமையில் முழு நாள் மிதிவண்டிப் பரப்புரைப்பயணத்தில் கலந்து கொண்ட தோழர்களுக்கு ஒடுக்கப்பட்டோர் பேரவையின் சார்பில் இலக்கியப் புரவலர் **மாம்பலம் ஆ.சந்திரசேகர்** பாராட்டுச் சான்றிதழ் வழங்கிச் சிறப்பிக்கிறார்.

## உரையாற்றுவோர்

தோழர்கள்:

**மு. கிருட்டிணசாமி**, தலைவர்,
திருக்குறிப்புத் தொண்டர் பேரவை

**கு.மா. சுப்பிரமணியன்**
முத்தரையர் வரலாற்று ஆய்வுப் பேரவை

**ப. நடராசன்**, மாநிலத்தலைவர்,
தமிழ்நாடு விசுவகரும நண்பர்கள் சங்கம்

**மங்கையர் செல்வன்**, தலைவர்,
மீனவர் விடுதலை வேங்கைகள்

டாக்டர் **விமுனா மூர்த்தி**, நிறுவுநர்,
முற்போக்கு சமூகநீதிப் பேரவை, காஞ்சிபுரம்

**மு. அரங்கநாதன்**, பொருளாளர்,
பெரியார் சமூகநீதிப் பேரவை, மறைமலை நகர்

**கு. தனசேகரன்**, பொதுச் செயலாளர்,
மத்திய அரசு பிற்படுத்தப்பட்ட
ஊழியர் நலச் சங்கங்களின் பேரமைப்பு

**சி. நடராசன்**, மாவட்டச் செயலாளர்,
மா.பெ.பொ.க., காஞ்சிபுரம் மாவட்டம்

**மோ.சி.சங்கர்**, மாவட்டச்செயலாளர்,
மா.பெ.பொ.க. வேலூர் மாவட்டம்


**பொ.சுப்பிரமணியன்**, மாவட்டச் செயலாளர்,
மா.பெ.பொ.க., திருவண்ணாமலை மாவட்டம்

**பா.வை.அருண்மொழி**, மா.பெ.பொ.க., சென்னை

## நிகழ்ச்சித் தொகுப்புரை


**மா.சமத்துவமணி**, ஒருங்கிணைப்பாளர்,
பெரியார் சமூகநீதிப் பேரவை, மறைமலை நகர்

## அறிவுடைமையா...?



"மானம், வீரம், அறிவு பெற்ற மனிதன் தன் வகுப்பை மற்றொரு வஞ்சக அறிவு பெற்ற வகுப்பு சூறையாட அனுமதித்துக் கொண்டிருந்து விட்டு மறைவது அறிவுடைமையா என்பதை யோசித்துப் பாருங்கள்".

**பெரியார் ஈ.வெ.ரா.**, குடிஅரசு 3.7.1938




## பட்டியல் வகுப்பினருக்கும் பிற்படுத்தப்பட்டோருக்கும்

# கியானி ஜெயில் சிங்

## என்ன செய்தார்?


**கியானி ஜெயில்சிங் பஞ்சாப் மாநில முதல்வராக (1972 - 77) இருந்தபோது :**

- பட்டியல் வகுப்பினருக்குப் பதவி உயர்வில் இடஒதுக்கீடு அளித்தார்;
- நகராட்சி மன்றங்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஒருவர்கூட உறுப்பினராக இல்லாத போது அவ்வகுப்பினரை அந்நகர மன்றம் ஒருமனதாக உறுப்பினராக நியமித்துக் கொள்ள வேண்டும் என்று ஆணை பிறப்பித்தார்;

**இந்திய உள்துறை அமைச்சராக இருந்த போது :**

- தோழர் வே.ஆனைமுத்துவை 25-1-1982இல் அழைத்துப் பேசி, அவர் கோரியபடி மண்டல் குழு அறிக்கையை நாடாளு மன்றத்தில் 30-4-1982இல் வெளியிட்டு அரசு பிற்படுத்தப் பட்ட வகுப்பினருக்கு இட ஒதுக்கீடு அளிக்கும் என்று அறிவித்தார்.
- ஆனைமுத்துவின் பணி அரும்பணி எனப் போற்றி ஒத்துழைப்பு நல்கினார்.

**மய்ய அரசின் பணிகளில் பிற்படுத்தப்பட்டோரின் அவல நிலை**




குறிப்பு : இந்த வரைபடம் 18.11.2008இல் நாடாளு மன்றத்தில் வெளியிடப்பட்ட மய்ய அரசில் பணியாற்றுகின்ற பணியாளர்களின் வகுப்பு வாரியான பணி நிலை வாரியான 2008 ஆம் ஆண்டின் புள்ளி விவரத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டதாகும்.


பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மக்கள் தொகையில் 57 விழுக்காடு உள்ளனர். இம் மக்கள் மய்ய அரசில் முறையே முதல் நிலைப் பணிகளில் 5.4 விழுக்காடும், இரண்டாம் நிலைப் பணிகளில் 4 விழுக்காடும், 3ஆம் 4ஆம் 5ஆம் நிலைப் பணி களில் 7.1 விழுக்காடும் மட்டுமே பெற்றுள்ளனர்.

## பிற்படுத்தப்பட்டோருக்கு உச்சநீதிமன்றம் செய்துள்ள மாபெரும் கேடுகள்

1. பட்டியல் வகுப்பினர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், ஆகிய மூன்று பிரிவினருக்குமான மொத்த இட ஒதுக்கீடு என்பது 50% வரம்பை மீறக் கூடாது.
2. பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்குப் பதவி உயர்வில் இட ஒதுக்கீடு கொடுக்கக் கூடாது.
3. பிற்படுத்தப்பட்ட வகுப்பினரில் பொருளாதாரத்தில் வளர்ந்த பிரிவினருக்கு (Creamy Layer) இட ஒதுக்கீடு கொடுக்கக் கூடாது.
4. சில குறிப்பிட்ட படிப்புகளுக்கும் பதவிகளுக்கும் இட ஒதுக்கீடு கொடுக்கக் கூடாது.

**இந்தக் கேடுகள் நீக்கப் படவேண்டும்.**

- கலசம்



## நம் கோரிக்கை

மக்கள் தொகையில் 17.5 விழுக்காடு உள்ள உயர் வகுப்பினர், மய்ய அரசின் முதல் நிலைப் பணிகளில் 77.2 விழுக்காடு இடங்களைக் கைப்பற்றிக் கொண்டு ஆதிக்கம் செய்து வருகின்றனர். பிரதமர் மோடி செய்துள்ள உயர்சாதி ஏழைகளுக்கான 10% இட ஒதுக்கீட்டின் மூலம் உயர்சாதியினரின் ஆதிக்கம் மேலும் கூடிவிடும். எனவே,

# இந்திய அரசே!

- உயர்சாதி ஏழைகளுக்கு 10% இடஒதுக்கீடு வழங்கும் அரசமைப்புத் திருத்தச் சட்டத்தை நீக்கு!
- சமுதாயத்தின் எல்லா வகுப்புகளுக்கும் கீழ்க்கண்ட வாறு இடப்பங்கீடு செய்து அதற்கேற்ப அரசமைப்புச் சட்டத்தைத் திருத்து!

| | |
|---|---|
| எல்லா மதங்களிலும் உள்ள உயர் வகுப்பினர் | 17.5% |
| எல்லா மதங்களிலும் உள்ள பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | 57.0% |
| பட்டியல் வகுப்பினர் | 17.0% |
| பட்டியல் பழங்குடியினர் | 8.5% |
| மொத்தம் | 100.0% |

வடிவமைப்பு : அன்றில், சென்னை - 5, 044 - 28411525, 9952928293

# தந்தை பெரியாரின் தொலைநோக்குச் சிந்தனைகள்

கவிஞர் **முத்தரசன்,** பெரம்பலூர்

ஆயிரத்துத் தொளாயிரத்து 1
ஆண்டுநாற் பத்திரண்டில்
ஆய்ந்தறிந்த எம்பெரியார்
அற்புதமாய் வரும்உலகில்
பாய்ந்துவரும் மாற்றங்கள்
பற்பலவும் நடக்குமென
வாய்த்தமொழி அத்தனையும்
வரலாற்றில் உண்மையன்றோ!

பொலிகாளை ஆண்மகனின் 2
புத்தம்புது வீரியத்தைப்
பொலிமிகுபெண் கருப்பையில்
பொறுப்புடனே ஊசிவழி
வலியின்றித் தான்செலுத்தி
வாரிசுகள் குழந்தையினை
எளிதாகப் பெற்றெடுப்பார்
என்றுரைத்தார் பெரியார்தான்!

கருப்பாதை சாத்திவிட 3
கதவொன்று வேண்டுமென
தெருமுழக்கம் பாவேந்தன்
தெரிவிக்கும் முன்னரேதான்
கருக்கலைப்பைத் தான்நிறுத்திக்
குடும்பக்கட் டுப்பாட்டை
வருமென்று தொலைநோக்கில்
வகுத்தவரும் பெரியார்தான்.

கணிப்பொறி வளர்ச்சிவரும் 4
கம்பியில்லாத் தந்திவரும்
இனிதாக எளிதாக
இளைஞர்தம் சட்டைக்குள்
தனியாகத் தான்வைத்து
தன்உருவம் தான்செலுத்தி
மணிக்கணக்கில் பேசுகின்ற
மாற்றங்கள் வந்துவிடும்.

துணிமணிகள் துவைத்திடவும் 5
துர்க்கழிவு அகற்றிடவும்
மனிதர்களை இழுக்கின்ற
மாக்கொடுமை நீங்கிடவும்
பணிமனையில் பலநாள்கள்
பணியினையே மணித்துளியில்
இனிதாகச் செய்துவிட
இயந்திரங்கள் வந்துவிடும்.

மன்னராட்சி நீங்கிவிடும் 6
மக்களாட்சி வந்துவிடும்
தன்னலங்கள் பெருகிவிடும்
தனிவறுமை பஞ்சமெல்லாம்
மண்ணில்தான் தலைவிரிக்கும்
மாக்கொலைகள்
கொள்ளையெனும்
கன்னக்கோல் பெருகிவிடும்
காலந்தான் வந்துவிடும்.

சித்திரத்தின் கைவண்ணம் 7
சிற்பிகளின் கைவண்ணம்
புத்தம்புது மாற்றத்தைப்
படைக்கின்ற காலம் வரும்
கத்துங்கடல் சூழ்உலகில்
காணுமாயுள் நூறாண்டு
பத்துப்பத் தறிவியலால்
பெரும்ஆயுள் நீண்டுவிடும்.

ஒருவார உணவுதனை 8
ஒருகுப்பித் தானடக்கித்
தருகின்ற காலம்வரும்
தக்கதோரு மாற்றம் வரும்
மெருகூட்டும் இன்பத்தை
மின்சாரம் தந்துவிட
உருவாகும் இயந்திரங்கள்
உருவாகி வந்துவிடும்.

ஒருஇடத்தில் தானிருந்து 9
உலகில்மறு இடமெல்லாம்
தருகின்ற கல்விதனைத்
தான்கேட்க கணிப்பொறியில்
பெருமாற்றம் வந்துவிடும்
பெரும்புரட்சி வெடித்துவிடும்
அருவறுக்கும் மடமையெலாம்
அடியோடு நீங்கிவிடும்.

மிதிவண்டி தான்குறைந்து 10
மின்சார வண்டிவரும்
அதிவேக விமானம் வரும்
அளப்பரிய மகிழ்வந்து
புதிதாக ஊர்திகளும்
புறப்பட்டு வந்துவிடும்
எதிலும்எடை குறைவான
இயந்திரங்கள் பெருகிவிடும்.

இனிவரும் உலகத்தில் 11
இப்படித்தான் மாற்றம்வரும்
இனிதாக நம் பெரியார்
எடுத்துரைத்த தொலைநோக்கின்
கனிந்தநல் சிந்தனைதான்
காலத்தின் வரலாறு
துணிந்தஎம் பெரியாரின்
தொலைநோக்கு வரலாறு.

இப்படித்தான் நடக்குமென 12
எழுபத்தேழ் ஆண்டின்முன்
எப்படித்தான் சொன்னாரோ
எம்தந்தை பெரியார்தான்
அப்படியே அவர் செயலை
அறிவார்ந்தோர் தான்புகழ
ஒப்பில்லா அவர்புகழை
உலகெங்கும் பரப்பிடுவோம்.

# தேசிய மருத்துவ ஆணையம்

- மரு.சா.மா. அன்புமணி

இவ்வளவு காலமாகச் செயல்பட்டு வந்த இந்திய மருத்துவக் குழுவுக்கு மாற்றாகத் தேசிய மருத்துவ ஆணையத்தைக் கொண்டுவந்துள்ளது நடுவண் பாசக மோடி அரசு. கடந்த 2010-ம் ஆண்டிலேயே இந்திய மருத்துவக் குழுவில் அதன் தலைவராக இருந்த மருத்துவர் கேதன் தேசாய் செய்த மாபெரும் ஊழல் காரணமாகக் கலைக்கப்பட்டுவிட்டது.

2017ம் ஆண்டு முதல் தேசிய மருத்துவ ஆணையத் தை கொண்டு வர முயற்சி செய்த பா.ச.க. அரசு தற்போது தனது நோக்கத்தை நிறைவேற்றிக் கொண்டது.

இந்திய மருத்துவக் குழு தன்னாட்சி பெற்ற அமைப் பாக இருந்தது. இந்திய மருத்துவக் குழு 160க்கும் மேலான உறுப்பினர்களைக் கொண்டது அதில் மூன்றில் 2 பங்கு உறுப்பினர்கள் மருத்துவர்களால் ஒவ்வொரு மாநிலத்தில் இருந்தும் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

ஆனால் தற்போது வந்துள்ள தேசிய மருத்துவ ஆணையத்தில் 25 உறுப்பினர்கள் மட்டுமே உள்ளனர். உறுப்பினர்கள் மருத்துவர்களாலும் மாநிலங்களாலும் தேர்ந்தெடுக்கப்படாமல் நடுவண் அரசால் நேரடியாக நியமிக்கப்படும் உறுப்பினர்கள் ஆவார்கள்.

இந்திய மருத்துவக் குழு ஊழல் நிறைந்ததாக மாறிவிட்டது. அது தனது நோக்கத்தை நிறைவேற்ற வில்லை. அது தனது பணியைச் செய்வதில் இருந்து தவறிவிட்டது. மருத்துவக் கல்வித் துறையில் பெருகிவிட்ட ஊழலைக் கட்டுப்படுத்த இந்திய மருத்துவக் குழுவால் முடியவில்லை. நாட்டில் போதுமான மருத்துவர்களை உருவாக்க குழு முயற்சி எடுக்கவில்லை என்று அதன் மீது குற்றச்சாட்டுகள் பல ஆண்டுகளாக வைக்கப்பட்டு வருகின்றன . இவை அனைத்தும் உண்மையும்கூட .

இந்தக் குளறுபடிகளைக் களைவதற்காகத்தான் தேசிய மருத்துவ ஆணையம் கொண்டுவரப்படுகிறது என்று சொல்கிறார்கள் .

அதற்கான திறன் புதிய ஆணையத்திற்கு இருக் கிறதா என்று பார்ப்போம்.

தேசிய மருத்துவ ஆணையம் சட்ட முன்வரைவு என்ன சொல்கிறது ?

இப்புதிய ஆணையத்தில் நான்கு தன்னாட்சி பெற்ற குழுக்கள் செயல்படும். 1. எம்.பி.பி.எஸ். உள்ளிட்ட இளநிலை மருத்துவ படிப்புகளை நிர்வகிக்கும். மருத்துவ கல்வியின் தரத்தை நிர்ணயிக்கும். நீட் தேர்வை நடத்தும்.

2. மருத்துவ பட்ட மேற்படிப்புகளை நிர்வகிக்கும்

3.மருத்துவக் கல்வி நிலையங்களை ஆய்வு செய்து அவற்றுக்குத் தர மதிப்பீடு வழங்கும்

4. மருத்துவ அறம் மற்றும் மருத்துவர் பதிவுப் பட்டியலை நிர்வகிக்கும் தேசிய அளவில் பதிவு பெற்ற மருத்துவர்கள் பட்டியலையும் சமூக சுகாதார வழங்குனர் பட்டியலையும் பராமரிக்கும்.

**சமூக சுகாதார வழங்குனர்**

தேசிய மருத்துவ ஆணையம் கிராமப்புறங்களில் உள்ள மருத்துவர் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்காகச் சமூக சுகாதார பணியாளர்களை உருவாக்கப் பரிந்து ரைக்கிறது. இவர்கள் பதிவுபெற்ற மருத்துவர்களில் மூன்றில் ஒரு பங்கு இருப்பார்கள்.

இவர்கள் நவீன மருத்துவமுறையைக் கையாள் வார்கள் என்று தெரிகிறது. ஏற்கனவே ஊர்ப்புற மருத்து வர்கள் என மூன்று ஆண்டுப் படிப்பு வந்தது. அதனு டைய மறுவடிவம்தான் சமூகச் சுகாதார வழங்குனர்கள்.

இதற்கு முன்பு பிரிட்ஜ் கோர்ஸ் என்று ஆறு மாத பயிற்சி அளித்து சித்தா , ஆயுர்வேத, யுனானி, ஓமியோ, யோகா இயற்கை மருத்துவம் படித்தவர்களை நவீன அலோபதி மருத்துவராக ஆக்கப்போவதாக நடுவண் அரசு சொல்லி வந்தது. இத்திட்டம் இந்தியா முழுவதும் மருத்துவர்களின் கடும் எதிர்ப்புக்கு உள்ளானது . அதனால் அத்திட்டத்தை கைவிட்டுவிட்டு தற்போது மருத்துவத்துறையில் பணிபுரியும் செவிலியர் மருந்தாளு னர் எக்ஸ்ரே எடுப்பவர் ஆய்வக நுட்பனர், கட்டு கட்டுவது போன்ற வேலைகளைச் செய்யும் செவிலியர் உதவியா ளர்கள் போன்றவர்களுக்கு ஆறுமாத பயிற்சி அளித்து அவர்களை ஊர்ப்புறங்களில் நவீன மருத்துவம் செய்ய அனுமதி தரப் போவதாக நடுவண் அரசின் தேசிய மருத்துவ ஆணையம் தீர்மானித்துள்ளது. முதற்கட்டமாக இத்தகைய துணை மருத்துவப் பணியாளர்கள் மூன்றரை இலட்சம் பேருக்கு பயிற்சி அளிக்க இருப்பதாகத் தெரிகிறது.

இம்முடிவு முற்றிலும் எதிர்க்கப்பட வேண்டிய கைவிடப்பட வேண்டிய முடிவாகும்.

ஏனென்றால் கிராமப்புறங்களில் உள்ள ஏழை எளிய மக்களின் உயிரோடு விளையாடும் முடிவாகும்.

போதுமான மருத்துவர்களை உருவாக்கவில்லை என்று இந்திய மருத்துவக்குழு மீது குற்றம்சாட்டப்பட்டது. அதே பாதையில்தான் தேசிய மருத்துவ ஆணையமும் செல்கிறது.

போதுமான தகுதியான எம்.பி.பி.எஸ். படித்த மருத்துவர்களை உருவாக்காமல் ஆறு மாத பயிற்சி கொடுத்து துணை மருத்துவப் பணியாளர்களை மருத்துவம் செய்ய உருவாக்குகிறது.

**நீட் மற்றும் நெக்ஸ்ட் தேர்வு**

தேசியத் தகுதிகாண் மற்றும் நுழைவு தேர்வு' நாடு முழுமைக்கும் பொதுவாக ஒரே சீரான தேர்வாக முன்மொழியப்பட்டுள்ளது தவறான தகவல் ஆகும். இதுபோன்ற கல்வி நிறுவனங்களுக்கு இந்த தேர்வில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. தேர்வானது கொண்டுவரப்பட்டதன் முதன்மை நோக்கமே, தனியார் மருத்துவ கல்லூரிகளில் திறமைக்கு மதிப்பின்றி பணம் முன்னுரிமை பெற்றதைக் கூறினார்கள். ஆனால், வந்த பிறகு, அந்த நோக்கத்திற்கு முரணாக, நிகர்நிலை பல்கலைக்கழகங்கள் 2017-18, 19 கல்வி ஆண்டின் மாணவர் சேர்க்கையில், ஆண்டுக் கல்வி கட்டணத்தை 2 முதல் 5 மடங்கு வரை உயர்த்தி, தேர்வின் அடிப்படை நோக்கத்தையே தோற்கடித்தன. மேலும் நாடாளுமன்ற நிலைக்குழு தன்னுடைய அறிக்கையில் மிகத்தெளிவாக, தேர்வில் பங்கு கொள்ள விருப்பம் இல்லாத மாநில அரசுகளுக்கு தேர்விலிருந்து விலக்கு அளிக்க வேண்டும் என்று குறிப்பிட்டு இருக்கிறது. எனினும், அந்த முக்கியப் பரிந்துரையை இந்தச் சட்ட முன்வரைவு புறந்தள்ளி யிருப்பது, அனைத்து மாநிலங்களையும் தன் கட்டுப் பாட்டில் நிற்கச் செய்யும் மத்திய அரசின் எதேச்சாதிகாரச் செயல் ஆகும். இது நடுவண் அரசின் அதிகாரக் குவிப்பின் வெளிப்பாடே. இப்படியான ஒரு செயல், தமிழ் நாடு, கேரளா போன்ற மாநிலங்களில் அந்தந்த மாநில சூழ்நிலைகளுக்கு ஏற்ப பின்பற்றபட்டு வந்த பலவகை யான, சமத்துவமான மருத்துவக் கல்லூரி சேர்க்கை முறையை அழித்தொழித்துவிட்டது. 50 சதவிகித கட்டண நிர்ணய விதிமுறை எதிர்காலங்களில் தனியார் கல்வி கட்டணம் மேலும் உயரவே வழிகோலும்.

தனியாரில் மருத்துவம் ஏற்கனவே பெருநிறுவன மயமாகி விட்டது. தற்போது மருத்துவக் கல்வியும் பெருநிறுவன மயமாகிக் கொண்டுள்ளது.

தேசியத் தகுதிச்சான்றுடைமைத் தேர்வு' (அல்லது) மருத்துவ மாணவர் மேல் சுமத்தப்படும் கூடுதல் சுமை. ஐந்தரை ஆண்டுகள் மருத்துவக் கழகமும், தேசிய ஆணையமும் வரையறுத்து, சான்றளித்த பல்வேறு வகையான தேர்வுகளை எழுதி தேர்ச்சி பெற்ற பின்னர், மேலும் ஒரு தேர்வை எழுதச் சொல்வது மருத்துவ மாணவர்கள் மீது ஏற்றப்படும் கூடுதல் சுமை. மேலும், இது நம் நாட்டில் ஏற்கனவே தட்டுபாடான நிலையில் உள்ள மருத்துவ மனித வளத்தை மேலும் நலிவடையச் செய்யும். இத் தகுதிச்சான்றுடைமை தேர்வை முதுநிலை நுழைவுத் தேர்வோடு இணைக்க உள்ளதாக கூறப் பட்டுள்ளது மேலும் குழப்பத்தையே தருகிறது. ஆனால், தகுதிச்சான்றுடைமைத் தேர்வு உள்ளபடியே நம் இந்திய நாட்டிற்கு தேவையற்ற ஒன்று. இவ்வாறு இளம் மாணாக்கர் மேல் தேர்வுகளைத் திணிப்பதற்கு மாறாக, தேசிய மருத்துவ ஆணையம், மருத்துவ கல்வி கற்கும் ஆண்டுகளில் மருத்துவ மாணவரின் திறன் மற்றும் அறிவு மேம்பாடு அடைய ஆக்கபூர்வமான நடவடிக்கை களில் ஈடு பட வேண்டும். நெக்ஸ்ட் போன்ற தேர்வுகளால் மாணவர்கள் நோயாளிகளிடம் மருத்துவமனைகளில் கற்றுக்கொள்வதை குறைத்துக்கொண்டு நெக்ஸ்ட் தேர்வு பயிற்சி மையங்களில் தமது காலத்தையும் பணத்தையும் செலவழிப்பார்கள். இதனால் இளம் மருத்துவர்களின் திறமையும் பயிற்சியும் வீணடிக்கப்படும்.

தற்போது இந்தியா முழுவதும் ஓராண்டில் 500 மருத்துவக் கல்லூரிகளில் இருந்து சுமார் 68,000 எம்பிபிஎஸ் மருத்துவர்கள் படித்து முடித்து வெளியே வருகிறார்கள் இவர்களில் சுமார் 23 ஆயிரம் பேர்தான் முதுநிலை பட்ட மேற்படிப்புகளில் சேர்கிறார்கள். மீத முள்ள 45 ஆயிரம் இளம் மருத்துவர்கள் ஒன்று வேலை தேடுகிறார்கள் அல்லது முதுநிலைப் பட்ட மேற்படிப்புக் கான நீட் பிஜி பயிற்சி மையங்களில் சேர்கிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் புதிதாக வருகின்ற பல்லாயிரக் கணக்கான எம்.பி.பி.எஸ். மருத்துவர்கள் வேலை வாய்ப்பு இன்றி உள்ளனர். அவர்களுக்கு அரசு வேலை தருவதைப் பற்றி புதிய ஆணையம் எதுவும் சொல்லவில்லை. ஆனால். சமுதாய சுகாதார வழங்குனர்களை உருவாக்கி அவர்களை நவீன மருத்துவம் செய்ய அனுப்புவது முட்டாள்தனமான பொதுமக்கள் உயிருக்கு கேடு விளை விக்கும் செயலாகும். இந்தியாவில் நகர்ப்புற பணக்கார வர்க்கத்தினருக்கு அனைத்துப் பயிற்சிகளும் பெற்ற சிறப்பு மருத்துவர்கள். கிராமப்புற ஏழை எளியோருக்கு அரைகுறை பயிற்சிபெற்ற மருத்துவர்கள் என்று அரசாங் கமே முடிவு செய்வது வேதனையான ஒன்றாகும்.

**மருத்துவக் கல்வியில் வணிகமயக் கல்விக் கொள்ளை தடுக்கப்படுமா?**

நீட் தேர்வைக் கொண்டு வரும்போது என்ன சொன்னார்கள். மருத்துவக் கல்வியில் வணிகமயம் பெருகிவிட்டது கல்விக் கொள்ளை அதிகமாக நடக்கிறது. அதனைத் தடுப்பதற்குத்தான் நீட் தேர்வு. நீட் தேர்வால் தகுதியான மருத்துவர்கள் உருவாகி வருவார்கள் என்று சொன்னார்கள். அவர்கள் சொன்ன நோக்கம் இரண்டு மூன்று ஆண்டுகளிலேயே தோல்வி அடைந்து விட்டது முன்பு மருத்துவக் கல்லூரியில் சேர்வதற்கு நன்கொடை யாக கொடுத்தவர்கள் இப்போது அதையே கட்டணமாகக் கொடுத்துக் கொண்டுள்ளனர்.

டாக்டர் ராய் சவுத்ரி கமிட்டி 2014 நாடாளுமன்ற நிலைக் குழு அறிக்கை 92-ஆவது குறிப்பில் கூறுகிறது ‘‘தனியார் மருத்துவக்கல்லூரிகளின் தவறான நடவடிக் கையைக் கட்டுப்படுத்தத்தான் இவற்றை நாங்கள் கொண்டு வருகிறோம் மாநில அரசுகள் இவற்றை விரும்பவில்லை என்றால் கட்டாயப்படுத்தக்கூடாது என்று சொன்னது. ஆனால் இந்தப் பரிந்துரைகளை எல்லாம் நடுவணரசு மீறிவிட்டது. இன்று நீட் நெக்ஸ்ட் போன்ற தேர்வுகளின் மூலம் மாநில அரசுகளின் உரிமையை நடுவண் அரசு பறித்துவிட்டது. தமிழ்நாடு போன்ற மாநிலங்களில் கிராமப்புற அரசு மருத்துவர்களுக்கு இருந்த சர்வீஸ் கோட்டா அழிக்கப்பட்டுவிட்டது.

டிஎம், எம் சி ஹெச் போன்ற உயர் சிறப்பு மருத்துவ பட்ட மேற்படிப்புகளில் மாநில அரசுப் பங்கினை இல்லா மலாக்கி அகில இந்தியத் தொகுப்பில் சேர்த்து விட்ட அரம்பத் தனமான போக்கு கண்டிக்கத்தக்கது. இதனால் தமிழ்நாடு போன்ற மாநிலங்களுக்கு எதிர்காலத்தில் சிறப்பு நிபு ணர்கள் பற்றாக்குறை ஏற்பட அனைத்து வாய்ப்புகளும் உண்டு.

முன்பு இருந்த இந்திய மருத்துவக் குழு கூட்டாட்சித் தத்துவத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்டது. ஓரளவு சனநாயகத் தன்மையுடன் செயல்பட்டது. மருத்துவர்கள் தங்களுக்குள் வாக்களித்து தேர்வு செய்கிற அமைப்பாக இருந்தது. ஆனால்,’ தேசிய மருத்துவ ஆணையம் அதற்கு நேரெதிராக மாநிலங்களின் பங்களிப்பு எதுவும் இன்றி நடுவண் அரசால் தனக்குத் தேவையான நிர்வாக அதிகாரிகளை நேரடியாக நியமிக்கும் வகையில் உள்ளது. தேசிய மருத்துவ ஆணையத்தில் ஒரு நேரத்தில் 6 மாநிலங்களின் பிரதிநிதிகள்தான் இடம்பெறுவார்கள் . மற்ற 23 மாநிலங்களின் பிரதிநிதிகள் குழுக்களில் எப் போதுமே பங்கேற்க முடியாது என்ற நிலைதான் உள்ளது.

ஒரு மாநிலம் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் இவ்வமைப்பில் இடம் பெற முடியும் என்றவாறு விதிகள் உள்ளன.

தேசிய மருத்துவ ஆணையம் என்பது அரசமைப்புச் சட்டத்திற்கு எதிரானது.

கூட்டாட்சித் தத்துவத்திற்கு, சமூக நீதிக்கு எதிரானது தேசிய மருத்துவ ஆணையம். மருத்துவம் என்பது மாநிலப் பட்டியலில் உள்ளது. பொது சுகாதாரம் மருத்து வம் அனைத்துமே மாநில அரசுகளால் நிறைவேற்றப்பட வேண்டிய செயல்களாகும். ஆனால் தேசிய மருத்துவ ஆணையம் மாநில உரிமைகளைப் பறிக்கின்ற வகை யில் விதிகளைக் கொண்டுள்ளது.

‘‘மாநில அரசுக்குக் கொடுக்கப்பட்டுள்ள உரிமை அரசியல் சட்டத்தால்தான் கொடுக்கப்பட்டுள்ளது தவிர நடுவண் அரசால் கொடுக்கப்படவில்லை எனவே அந்த எல்லைக்கோட்டை நடுவணரசு நினைத்தபோது எல்லாம் மாற்ற முடியாது’’ என்று மேதை அம்பேத்கர் 25.11.1949 இல் அரசமைப்பு அவையில் குறிப்பிட்டார். ஆனால் இன்றைய நடுவண் அரசு, மாநில அரசு உரிமைகளை முற்று முழுதாகவே அழித்துக் கொண்டிருக்கிறது. அதற்குச் சிறப்பான எடுத்துக்காட்டு தேசிய மருத்துவ ஆணையம்.

மேலும் மேலும் கடினமான விதிகள் மூலம் உள் நாட்டு மருத்துவர்களை ஒடுக்குவது, மாணவர்களை அதிலும் ஏழை எளிய மாணவர்களை நீட் போன்ற தேர்வு மூலம் மருத்துவக் கல்வியின் பக்கம் திரும்பாமல் பார்த்துக் கொள்வது. மருத்துவக் கல்வியை 100 விழுக்காடு தனியார் மயமாக்குவது, மருத்துவ சிகிச் சையை 100 விழுக்காடு பெருநிறுவன மயமாக்குவது, காப்பீடு மயமாக்குவது. தனியார் சிறு மருத்துவமனை களை விரைவில் மூட வைப்பது, அல்லது பெருநிறு வனங்களின் கிளைகளாக மாற்றுவது. இதுவே நோக்கம்.

**இந்திய அரசே!**

மக்களுக்கு எதிரான

மருத்துவர்களுக்கு எதிரான

மாணவர்களுக்கு எதிரான

மாநில உரிமைகளுக்கு எதிரான

தேசிய மருத்துவ ஆணைய சட்ட முன்வடிவை திரும்பப் பெறு!

மருத்துவம், மருத்துவக் கல்வி இவற்றை மாநில அரசிடமே வழங்கு!

மருத்துவக் கல்வியை மருத்துவ சேவையை இலவயமாக்கு!

மருத்துவம் மக்களுக்கானது. மத்திய அரசுக்கானதல்ல பெருநிறுவன கொள்ளையர் களுக்கானதல்ல..

## ‘விமல்’ தோற்றம்

காஞ்சிபுரம் மா.பெ.பொ.க. தோழர் தீ. கோபாலகிருட்டிணன் - செந்தாமரை இணையரின் மகன் கோ. விவேக் - சீ. மாலதி இணையருக்கு 27.8.2019 செவ்வாய் காலை வேலூர் சி.எம்.சி. மருத்துவமனையில் ஆண் குழந்தை பிறந்தது. பெயரன் பிறந்ததின் மகிழ்வாக தீ. கோபால கிருட்டிணன்-செந்தாமரை இணையர் சிந்தனை யாளன் வளர்ச்சி நிதியாக ரூ.500/- வழங்கினர்.



பெரியாரின் பெருந்தொண்டர்

# அந்தூர் கி. இராமசாமி அந்தோ! மறைந்தார்!!

அகவை 99 முடித்து, 10 மாதம் 17 நாள்கள் வாழ்ந்த அந்தூர் கி.இராமசாமி, 24.7.2019 புதன் மதியம் தனியே ஏரிக்குக் குளிக்கச் சென்றவர், சிறு கல் தடுக்கி விழுந்தவர், சிறிது நேரத்திலேயே பகல் 12.30 மணிக்கு இயற்கை எய்தினார்.

செய்தியறிந்த சுற்றத்தார், ஊர் மக்கள் அந்த வட்டாரத்து மக்கள், அனைத்துக் கட்சிக்காரர்கள் அலை அலையாக வந்து அஞ்சலி செலுத்தினர். பெரம்பலூர் தி.க. தோழர்கள், மா.பெ.பொ.க. தோழர்கள், அரியலூர் மாவட்டம், திருச்சி, செந்துறை, மாத்தூர் முதலான பகுதிகளில் இருந்து தோழர்கள் வந்திருந்தனர்.

காலையிலேயே தோழர் மா. நாராயணசாமி, அரியலூர் தமிழ்க்களம் இளவரசன், புலவர் இரா. கலியமூர்த்தி, அல்லிநகரம் சீனிவாசன், கவிஞர் அறிவு மழை ஆகியோர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

இரண்டு மணிக்கு வீட்டிலேயே இரங்கல் நிகழ்ச்சி நடந்தது. முனைவர் ஓவியர் முகுந்தன் தலைமையில் அக்ரி ஆறுமுகம் உள்ளூர் முன்னாள் ஊ.ம. தலைவர் கூத்தூர் தி.க. பெரியசாமி, பூலாம்பாடி புலவர் கு. வரத ராசன், செந்துறை தி.க. மணிவண்ணன், தி.மு.க. மாநிலக் கொள்கை விளக்க துணைச் செயலாளர் ச. பெருநற் கிள்ளி, மா. நாராயணசாமி ஆகியோரின் இரங்கல் உரைக்குப்பின் ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

எந்தவிதமான மதச் சடங்குகள் இன்றி வீர வணக்கம் முழக்கங்கள் விண்ணைப் பிளந்தன. அலங்கரிக்கப் பட்ட வண்டியில் உடல் ஏற்றப்பட்டு, இறுதி ஊர்வலம் தொடங்கியது. திரளான மக்கள் இடுகாடு வரை சென்று, இராமசாமியின் உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், அந்தூர் கிராமத்தில் கிருட்டிணசாமி-உண்ணாமுலை இணையருக்கு 7.9.1919-இல் இரண்டாவது மகனாகப் பிறந்தார் இராமசாமி. வசதியான வேளாண் குடும்பம். இவருக்கு மூத்தவர் கோவிந்தசாமி. இளையவர் இராசகோபால். பெற்றோருக்கு உற்ற துணையாக இருந்தனர். உள்ளூர்ப் பள்ளியில் துவக்கக் கல்வியோடு நின்றுவிட்டார். சைவ சமயத்தில் நாட்டங்கொண்டு காவி உடையும் கழுத்தில் உருத்திரக்கக் கொட்டையும் நெற்றியில் விபூதிப் பட்டையுமாக மாறிவிட்டார்.

மனைவி அலமேலு அம்மையார் மூலம் மூன்று ஆண் மக்கள் 1. வெற்றி வீரன், 2. சித்தார்த்தன், 3. மதியழகன். இரண்டு பெண் மக்கள் 1. அருமைக் கண்ணு, 2. அன்புமணி. எல்லோரையும் நன்கு படிக்க வைத்தார். திருமணமும் முடிந்து நலமாக வாழ் கிறார்கள்.

இவரது தம்பி இராசகோபால் சுயமரியாதைக் கொள்கையாளர். சைவப் பழமாக இருந்த இவருக்கும் அவருக்கும் அடிக்கடி தகராறு ஏற்படும். இந்த நிலையில் குன்னம் சென்று வருவார். அங்கே வீரானந்தபுரம் கணபதி ஆசிரியரது தொடர்பு ஏற்பட்டு, அவர் இவரைப் பகுத்தறிவுப் பாதைக்கு மாற்றிவிட்டார்.

உள்ளூர் தி.க. பொன்னுசாமி, முருக்கன்குடி வே. ஆனைமுத்து, கூடலூர் தி.க. சுப்பையா, இலந்தங்குழி அ. தங்கவேல், வாலாசா நகரம் பி.ஆர். சின்னசாமி, அரியலூர் அழகுப்பிள்ளை, பட்டாளத்தார் இராமசாமி, வரகூர் மா. நாராயணசாமி முதலானவர்களுடன் சேர்ந்து குன்னம் வட்டாரம், பெரம்பலூர் நகரம், பட்டிதொட்டி எல்லாம் இலாந்தர் வெளிச்சத்தில் கடவுள், மதம், சாதி மூடப்பழக்கவழக்கம், பெண்ணடிமை, தீண்டாமை ஒழிப்புப் பற்றி - ஒலிபெருக்கி இல்லாக் காலம், மின்சார வசதி இல்லாக் காலத்தில் உரத்தக் குரலில் தொண்டைத் தண்ணீர் காய பிரச்சாரம் செய்திருக்கிறார். நூற்றுக்கணக்கான சுயமரியாதைத் திருமணங்கள் நடத்தி வைத்திருக்கிறார்.

1947-1948-இல் தொடங்கிய பெரியார் கொள்கை ஈடுபாடு காரணமாக 1950-இல் குன்னத்தில் இரண்டு நாள் பெரம்பலூர் வட்ட திராவிடர் கழகக் கூட்டம் மாநாடு போல் நடந்திருக்கிறது. கணபதி ஆசிரியரை “வாங்க குன்னம்” என்றும், இராமசாமியை பெயரைச் சொல் லியே பெரியார் அழைக்கும் அளவுக்குப் பாடுபட்டவர். சாதி ஒழிப்பு, சட்ட எரிப்பில் கலந்து கொண்டு ஒன்றரை ஆண்டு சிறைத் தண்டனைப்பட்ட செம்மல்.

அறிஞர் வே. ஆனைமுத்து அவர்களிடத்தில் அளவு கடந்த பாசம், மரியாதை, நட்பு கொண்டவர்.

**அந்தூர் கி. இராமசாமி பெரியார் புகழ் ஓங்குக.**

செய்தி : புலவர் **இரா. கலியமூர்த்தி**

# மாசுக்கட்டுப்பாடு நிறுத்திவைப்பு

- இராமியா

நீடித்த நிலையான வளர்ச்சிக்கான உலக நிறுவனமும், ஆற்றல், சுற்றுச்சூழல், தண்ணீருக்கான குழுவும் இந்தியாவில் உள்ள அனல் மின் நிலையங்களினால் ஏற்படும் மாசுகள் பற்றி ஆய்வு செய்து ஓர் அறிக்கையை 6.8.2019 அன்று புதுதில்லியில் வெளியிட்டது.

அனல் மின் நிலையங்களின் செயல்பாட்டால் கந்தக டையாக்சைட், நைட்ரச ஆக்சைட் ஆகிய காற்று மாசுகள் வெளிவருகின்றன. இந்த மாசுகளை முறையாகக் கட்டுப்படுத்தாவிட்டால் மக்களுக்கு நுரையீரல் நோய் ஏற்பட்டு 3,00,000 முதல் 3,20,000 பேர்கள் வரை அகால மரணம் அடைவார்கள் என்றும், மேலும் இந்த நோய்களுக்குச் சிகிச்சை செய்யும் செலவு ரூ.5.1 கோடி ஆகும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது.

இதனால் "பதறிப்போன" இந்திய அரசு உடனே இம்மாசுகளைக் கட்டுப்படுத்தியே ஆகவேண்டும் என்று 2017ஆம் ஆண்டு ஒரு சட்டத்தை இயற்றியது. இச் சட்டப்படி அனல்மின் உற்பத்தி நிலையங்கள் அனைத்தும் 2017ஆம் ஆண்டு ஜுன் மாதத்திற்கு முன்பாகவே முறையான தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி மாசுகள் வெளியாவதைத் தடுக்க வேண்டும்.

எவ்வளவு வலித்தாலும், எப்படி எப்படித் துடித்தாலும் உழைக்கும் மக்கள்தானே சட்டவிதி முறைகளுக்குக் கட்டுப்பட வேண்டும்? முதலாளிகளை அப்படி எல்லாம் சட்டத்திற்குக் கட்டுப்படும்படி வற்புறுத்த முடியுமா? இச்சட்ட விதிகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றால் எவ்வளவு செலவாகும் என்று முதலாளிகள் கணக்கிட்டுப் பார்த்தனர். இயந்திரங்கள் புதியனவாக இருந்தால் ஆண்டுக்கு ரூ.73,176 கோடி செலவாகும் என்றும், இயந்திரங்கள் பழையனவாக இருந்தால் ரூ.86,135 கோடி செலவாகும் என்றும் நிதி நிபுணர்கள் தெரிவித்தனர். இதனால் முதலாளிகளுக்குக் கிடைக்கும் இலாபம் 10% குறையும் என்றும் அந்த நிதி நிபுணர்கள் தெரிவித்தனர். அதுமட்டும் அல்ல; மின்சாரத்தின் விலையை உயர்த்தி இலாபம் குறைவதைத் தடுக்கத் தற்போது உள்ள பொருளாதாரச் சூழ்நிலை இடம் தராது என்றும் அவர்கள் தெரிவித்தனர். முதலாளிகள் எதை வேண்டுமானாலும் விட்டுக் கொடுப்பார்கள். ஆனால் முதலீட்டுக்குக் கிடைக்க வேண்டிய இலாபம் குறைவதை மட்டும் விட்டுக் கொடுக்கவே மாட்டார்கள். ஆகவே நீங்களாவது, உங்கள் சட்டமாவது" என்று கூறி மாசுத்தடுப்புச் சட்டவிதி முறைகளைச் செயல்படுத்தவே இல்லை.

இந்தச் சூழலில்தான் நீடித்த நிலையான வளர்ச்சிக்கான உலக நிறுவனம் அந்த ஆய்வு அறிக்கையை வெளியிட்டு உள்ளது. 3,20,000 மக்கள் அகால மரணம் அடைவார்கள் என்பதையும், ரூ.5.1 கோடி வீண் மருத்துவச் செலவு ஏற்படும் என்பதையும் அறிந்தபோது இந்தியஅரசு "பதறிப்போனது". ஆனால் இந்தச் சட்டத்தைச் செயல்படுத்தினால் முதலாளிகளுக்கு இலாபம் குறையும் என்று அறிந்த போது மூர்ச்சையே அடைந்துவிட்டது. உடனடியாக 2022ஆம் ஆண்டு வரை இச்சட்டத்தைச் செயல் படுத்த வேண்டாம் என்று ஆணை பிறப்பித்துவிட்டது.

இச்செய்தியை அரசியல்வாதிகள் உட்பட அனைத்துத் தரப்பு மக்களும் படிக்கிறார்கள். அவர்களில் முதலாளிகளையும், முதலாளித்துவ அறிஞர்களையும், முதலாளித்துவ மனச்சாய்வு கொண்டவர்களையும் விட்டு விட்டு, பொதுவுடைமைக் கட்சியினரை மட்டும் எடுத்துக் கொள்வோம். அவர்கள் என்ன செய்து கொண்டு இருக்கிறார்கள்?

முதலாளித்துவ அமைப்பில் - அதாவது எந்த ஒரு உற்பத்தியையும் இலாபத்தை அடிப்படையாக வைத்தே செய்யமுடியும் என்ற அமைப்பில் - ஒரு அரசு இப்படித்தான் நடந்து கொள்ளமுடியும்; அந்த அரசுக்கு மக்கள் மாள்வதைவிட, மக்கள் நோயால் துன்புறுவதைவிட, முதலாளிகளின் முதலீட்டுக்குக் கிடைக்க வேண்டிய இலாபம் குறையாமல் இருப்பது தான் முதன்மையாகப்படும். இதுவே சோஷலிச அரசாக இருந்தால் - அதாவது இலாபத்தை அடிப்படையாகக் கொள்ளாமல், மக்களின் தேவைகளை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு பொருள் உற்பத்தி செய்யவேண்டும் என்ற அரசு இருந்தால் - அந்த அரசு இம்மி அளவும் தயக்கம் இன்றி மாசுக்கட்டுப்பாடு விதிமுறைகளைச் செயல்படுத்த முடியும். இந்த வேறுபாட்டை மக்களிடையே விளக்கி, மக்களைச் சோஷலிசப் புரட்சிக்கு அணிதிரட்டாமல் இருக்கும் பொதுவுடைமைக் கட்சிகளை என்ன வென்று சொல்வது?

# சாதி இருக்கின்றதென்பானும் இருக்கின்றானே

நா.மதனகவி

தொல்குடித் தமிழ்ச் சமூகம் சாதி மதமற்ற மானுட சமத்துவத்தோடு பொதுமை சமூகமாக வாழ்ந்தது. இரண்டாயிரமாண்டுகளுக்கு முன் மானுட சமத்துவத்தை மறுக்கும் நால்வருண மனுதர்மம் இந்து மதத்தின் பெயரில் தமிழர்களின் பண்பாட்டின் மீது திணிக்கப் பட்டது. வெளிப்பாடுதான் வள்ளுவம். சத்திரியர்களும் வைசியர்களும் தமிழ்நாட்டில் இல்லை. 97 சதவிகிதம் மக்கள் தமிழ்நாட்டில் சூத்திரர்களே! பார்ப்பனர்கள் 3 சதவிகிதம் மட்டுமே.

மனித சமத்துவமின்மையையும் சாதி கட்டமைப் பையும் பாதுகாக்கும் நால் வருண இந்துமதத்தைப் பட்டி-தொட்டியெங்கும் இராமாயணம் மகாபாரதம் போன்ற கதைகளின் வழியாக ஆண்டுக்கணக்கில் பார்ப்பனர்கள் பரப்பினார்கள். இதை உழைக்கும் சூத்திர மக்களின் மனதில் அட்டையாய்ப் பதியவைத்தார்கள்.

பட்டியலின மக்கள் இந்த நான்கு வருணப் பிரிவிலும் சேராதவர்களாக தொட்டால் பார்த்தால் தீட்டு என்கிற கீழான நிலையில் வைக்கப்பட்டனர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக உலகில் வேறெந்த மதமும் கற்பிக்காத ஒன்றை இந்து மதத்தின் பெயரால் தன் மதத்தைச் சார்ந்த மக்களையே சாதிகளால் பிரித்து ஒவ்வொரு சாதிக்கும் ஒரு நீதி என்று வகுத்து பெரும் பான்மை மக்களாக வாழும் சூத்திரர்களுக்குள்ளேயே மோதல் ஏற்படவும் செய்தனர். சூத்திரப் பிற்படுத்தப்பட்ட மக்களால் ஆதிதிராவிடர் மக்கள் ஒடுக்கப்படுவதும் மோதிக்கொள்வதும் இன்றும் நடக்கிறது. இதன் தொடர்ச்சி தான் வேலூர் மாவட்டம் வாணியம்பாடி அடுத்த நாரா யணபுரம் கிராமத்தில் நடந்த சம்பவமும் வேதாரண் யத்தில் அம்பேத்கர் சிலை உடைப்பு சம்பவங்களும் ஆகும். 23.08.2019 அன்று மா.பெ.பொக. வாணியம்பாடி நகரச் செயலர் சீன.பழனி நா.மதனகவி இந்தியப் பொதுவுடை மைக்கட்சி இரா.முல்லை விடுதலைச் சிறுத்தைகள் நா.வேலு சிவக்குமார் ஆகியோர் நாராயணபுரம் சென்று கேட்டறிந்தோம். நாராயணபுரம் கிராமத்தில் வசிக்கும் 30க்கும் மேற்பட்ட ஆதி திராவிடர் குடும்பங்களுக்கு இதுவரை அரசால் சுடுகாடு ஒதுக்கித்தரப்படவில்லை இதனால் இறந்தவர்களின் உடலைப் பாலாற்றின் கரை யோரம் அடக்கம் செய்து வருகின்றனர். இந்நிலையில் கடந்த 16.08.2019ஆம் தேதி நாராயணபுரத்தைச் சேர்ந்த குப்பன் என்பவர் சாலை விபத்தில் உயிரிழந் தார். அவரது உடலைப் பாலாற்றின் கரையோரம் புதைக்க உறவினர்கள் எடுத்துச் சென்றனர். அப்பொழுது அந்த பாலாற்றுக்கு செல்லும் வழியில் உள்ள நில உரிமையாளர்கள் வழிவிட மறுத்தனர் இதனால் மாற்று வழியில்லாததால் குப்பனின் உடலை பாடையில் கயிறு கட்டி 20 அடி உயரமுள்ள மேம்பாலத்திலிருந்து ஆற்றில் இறக்கி பாலாற்றின் கரையோரம் உடலை எரியூட்டினார் கள் இந்நிகழ்வை அப்பகுதியைச் சேர்ந்த சிலர் காட்சிப் படுத்தி சமூக ஊடகங்களில் வெளியிட்டனர். இந்நிகழ்வு தமிழக அளவில் பெரும் அதிர்வை ஏற்படுத்தியது. உடனடியாக வேலூர் மாவட்ட ஆட்சியரின் உத்தரவின் பேரில் வாணியம்பாடி வட்டாட்சியர் நாராயணபுரத்தி லிருந்து 3 கி.மீ. தொலைவில் உள்ள அரசுக்கு உரிமை யான 3.5 ஏக்கர் பனந்தோப்பு நிலத்தில் 50 சென்ட் இடத்தை ஆதி திராவிடர் மக்களுக்காக ஒதுக்கி கொடுத் துள்ளார். இதனிடையே சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் மணிக்குமார் சுப்பிரமணியம் பிரசாத் ஆகி யோரின் முன் நேர் நின்று நடுவன் அரசின் உதவி சொலிசிட்டர் ஜெனரல் கார்த்திகேயன் இறந்தவரின் உடல் சாதிப் பாகுபாட்டின் காரணமாகப் பாலத்தில் இருந்து கயிறு கட்டி கீழே இறக்கப்பட்டு பின்னர் சுடுகாட்டிற்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது ஆகவே உயர்நீதிமன்றம் தாமாக முன்வந்து வழக்கு பதிவு செய்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்தார். இதனால் நீதிமன்றம் தாமாக முன்வந்து வழக்கு பதிவு செய்தது.

தந்தை பெரியார் 1926ம் ஆண்டு சுயமரியாதை இயக்கத்தை தொடங்கியது முதலே சாதி ஒழிப்பிற்கான போராட்டங்களை முன்னெடுத்து வந்தார். நீதிக்கட்சி திராவிடர் கழகம் என பெயர் மாறினாலும் தந்தை பெரியார் சாதி ஒழிப்புக்கொள்கையில் உறுதியாக நின்று தொடர்ந்து போராடினார். இதன் உச்சமாகத்தான் சாதி யைப் பாதுகாக்கும் வருணாசிரமத்தை அரசமைப்புச் சட்டத்திலிருந்து நீக்க வேண்டும் என அரசமைப்பு சட்டப் பிரிவுகள் 13, 28, 26, 372 ஆகியவற்றை 1957ஆம் ஆண்டு நவம்பர் 26ஆம் நாள் ஆயிரக்கணக்கான தி.க.தொண்டர்கள் பெரியாரின் ஆணைக்கு இணங்க மேற்கூறிய சாதிகளைக் காக்கும் சட்டப்பிரிவுகளின் நகல்களை எரித்தார்கள். ஒரு நாட்டின் அரசமைப்புச் சட்டத் தை எரித்ததாக அன்றுவரையில் உலக வரலாற்றில் இல்லை. போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் 3 மாதம் முதல் 3 ஆண்டுகள் வரை சிறை தண்டனை பெற்றனர். சிறை சென்றவர்களில் பலர் இன்றும் உயிருடன் உள்ளனர். அவர்களில் ஒருவர் தோழர் வே.ஆனைமுத்து.

அம்பேத்கர் அவர்கள் இந்திய அரசமைப்புச் சட்டத்தை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யும்போது இந்த சட்டம் நடைமுறைக்கு வந்தபிறகு ஏற்கனவே நடைமுறையில் இருக்கும் பழக்க வழக்கச் சட்டம் செல்லபடியாகாது என்ற கோரிக்கை மசோதாவையும் தாக்கல் செய்தார் அப்போது பிரதமராக இருந்த நேரு உள்பட அனைத்துப் பார்பனர்களும் மசோதாவைக் கடுமையாக எதிர்த்தனர் ஏற்க மறுத்துவிட்டனர்.

1955ம் ஆண்டு தாழத்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்களுக்கு எதிரான வன்கொடுமைகளைத் தடுப்பதற் காகவும் அச்சமூகத்தினருக்கு எதிரான கொடுமைகள் வன்முறைகள் துன்புறுத்தல்களை மேற்கொள்பவர்கள் மீது நடவடிக்கை எடுத்து தண்டனை பெற்றுத்தருவதற் காகவும் கொண்டுவரப்பட்ட சட்டம்தான் வன்கொடுமை தடுப்புச்சட்டம். இச்சட்டத்தின் மூலம் வன்கொடுமை செய்யும் ஆதிக்க சாதியினர் மீது இந்த அரசு முறையான நடவடிக்கை எடுக்க வேண்டும். மாறாக ஆதிக்க சாதி யினருக்குச் சாதகமாகவே அனைத்து அரசுத் துறை களும் செயல்படுகின்றன என்பது வெட்கமானது.

நாராயணபுரத்தில் வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட ஆதிதிராடவிடர் மக்களிடம் பாதிப்பைக் கேட்டறியாமல் ஊரிலிருந்து 3 கி.மீ தள்ளித் தனியாக சுடுகாட்டை ஒதுக்கிக் கொடுப்பதன் முலம் அரசே தீண்டாமையைக் கடைபிடிக் கிறது. ஆதிக்கச் சாதி மக்களுக்கு ஆதரவாகச் செயல்படும் அரசின் இச்செயல் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. தனிச் சுடுகாட்டை ஒதுக்கிக் கொடுப்பதை அரசு கைவிட்டு பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவருக்கும் ஒரே சுடுகாடாக ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அப்போதுதான் சாதி ஒழிந்த பிறப்பால் ஏற்றத்தாழ்வு ஒழிந்த சமுகத்தை உருவாக்குவதற்கான முதற்படியாக அது அமையும், ஊர் சேரி என்கின்ற வேறுபாட்டை மாற்றும்.

பெரியார் அம்பேத்கர் ஆகியோர் மேற்கொண்ட சாதி ஒழப்பிற்கான போராட்டம் அவர்களின் காலத்திற்குப் பிறகு அவர்களின் வழியில் வந்த நாம் எந்த அளவிற்குச் சாதித் திருக்கின்றோம் என்று மனதார எண்ண வேண்டும்.

பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட உழைக்கும் மக்கள் ஒன்றிணைந்து போராடுவதின் மூலமாகத்தான் அனைத்து விதமான ஒடுக்குமுறைகளிலிருந்து விடுதலை பெற முடியும் என்பதை உணர்ந்து மார்க்சிய பெரியாரிய அம்பேத்கரியவாதிகள் ஒன்றிணைந்து சமூகநீதி சமத்துவ மான மானுட சமூகத்தைப் போராடி வென்றெடுப்போம்! வாரீர்!! வாரீர்!!!

## தந்தை பெரியார் திராவிடர் கழகம் நடத்திய பெரியாரியல் பயிலரங்கம்




தந்தை பெரியார் திராவிடர் கழகத்தின் தென் மண்டலப் பகுதியின் சார்பில் மதுரை உற்பத்தித் திறன் குழு அரங்கில் பெரியாரியல் பயிலரங்கு 25.8.2019 ஞாயிறு அன்று நடைபெற்றது. மா. மாயாண்டி தலைமை தாங்கினார். மு. தமிழ்ப்பித்தன், வெ.லெ. குமரேசன், ச. கிட்டுராசா, பி. விடுதலை சேகர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முற்பகல் காலை 10 மணிக்கு தந்தை பெரியார் திராவிடர் கழகத்தின் பொதுச் செயலாளர் கு. இராமகிருட்டிணன் தொடக்கவுரையாற்றினார். திராவிடர் இயக்க வரலாறு என்ற தலைப்பில் வாலாசா வல்லவன் வகுப்பு எடுத்தார். 12 மணிக்கு புதிய கல்விக் கொள்கை : பறிபோகும் நமது கல்வி உரிமை என்ற தலைப்பில் பேரா. பொ. இராஜமாணிக்கம் வகுப்பு எடுத்தார். பிற்பகல் 3 மணிக்குத் திராவிட இயக்கமும் நவீன சமூக உருவாக்கமும் என்ற தலைப்பில் பேரா. திருநீலகண்டன் வகுப்பு எடுத்தார். பின்பு வாலாசா வல்லவன் திராவிடர் இயக்கத்தின் சாதனைகள் என்ற தலைப்பில் வகுப்பு எடுத்தார். சி. கோபால் நன்றியு ரையுடன் நிகழ்வு இனிதே முடிவடைந்தது.

## தோழர்களுக்கு வேண்டுகோள்!

**தோழர்களே!**

**சிந்தனையாளன் இதழின் அட்டைப் பக்கம் 4இல் கட்சியின் பெயர் தாங்கியுள்ள மார்க்சு, பெரியாரின் செறிவான மேற்கோள் கருத்துகள் இடம் பெறவேண்டு மென்று பல காலக்கட்டங்களில் விரிவாக விவாதிக்கப்பட்டது. எனினும் இப்போதுதான் சென்ற 2019 ஆகசுத்து இதழில் அட்டைப் பக்கம் 4இல் பெரியாரின் மேற்கோள் கருத்து இடம் பெற்றது. தொடர்ச்சியாக மார்க்சு பெரியாரின் மேற்கோள் கருத்துகள் அவ்வாறு இடம்பெரும் வகையில் தோழர்கள் அவ்வாறானவற்றைத் தெரிவு செய்து அனுப்பிவைத்து அவை இடம் பெற்று இதழ் சிறக்கத் துணைபுரியுமாறு அன்புடன் வேண்டப்படுகிறார்கள்.**

**- ஆசிரியர் குழு**

# காசுமீரத்தின் உண்மைக் கதை

- தியாகு

“இணைப்புக்கு முன்” அழகிய ரோஜாப் பூக்களுக்கும் ஆப்பிள் பழங்களுக்கும் பனிப் பொழிவுகளுக்கும் பேர்போன காசுமீரம் இப்போது கடுமையான பூசலின் களமாகியுள்ளது. எது மெய்? எது பொய்? என்று பிரித்தறிய முடியாத அளவுக்கு காசுமீரம் பற்றிய செய்திகளில் பெருத்த முரண்பாடுகள் உள்ளன. காசுமீரத்துடன் வெளியுலகத் தொடர்பறுந்து கிடக்கும் நிகழ்காலத்திய செய்திகளில் மட்டுமல்லாமல், யாவருமறிந்த கடந்த காலத்திய வரலாற்றுச் செய்திகளிலும் பக்கச்சார்பும் பார்வைக் குழப்பமும் மிகுந்துள்ளன. எனவே முதலில் நாம் செய்ய வேண்டியது நடந்தது என்ன? என்பதை உண்மையாக அறிந்து, விருப்புவெறுப்பின்றி மதிப்பீடு செய்வதுதான். இந்த நோக்கில் காசுமீரத்தின் வரலாற்று வழித்தடத்தில் ஒரு விரைவுப் பயணம் செய்து பார்ப்போம்.

பிரித்தானியர் ஆட்சியில், அதாவது 1947 ஆகஸ்டு 15க்கு முன், இந்தியாவிலிருந்த பெரிய சமஸ்தானங்களில் சம்மு-காசுமீரும் ஒன்று. மக்கள்தொகையில் 77 விழுக்காடு இசுலாமியர் என்றாலும் மகாராசா அரிசிங் ஓர் இந்து மன்னர்.

நாட்டை இந்தியா என்றும் பாகிஸ்தான் என்றும் இரண்டாகப் பிரித்து பிரித்தானியரிடமிருந்து அதிகாரக் கைமாற்றம் நிகழ்ந்த போது, சமஸ்தானங்கள் இந்தியாவுடனோ பாகிஸ்தானுடனோ இணையலாம், அல்லது எதனோடும் சேராமல் தனித்தும் நீடிக்கலாம் என்று ஒப்புக்கொள்ளப் பட்டிருந்தது. காசுமீரம் இரு நாடுகளுக்கிடையே எல்லையில் அமைந்திருந்தது. அது சிறிது காலம் தனித்தே இருந்து வந்தது. பிரித்தானிய இந்தியாவில் காலனியாதிக்கத்தை எதிர்த்து நடைபெற்ற போராட்டங்கள் சமஸ்தானங்களிலும் எதிரொலித் தன. காலனியா திக்கத்துக்கு எதிராக மட்டுமல்லாமல், மன்னராட்சிக்கு எதிராகவும் சனநாயகம் கோரியும் இந்தப் போராட்டங்கள் வலுத்தன. குறிப்பாக 1942 வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போது சமஸ்தானங்கள் உட்பட இந்தியா வெங்கும் பேரெழுச்சி தோன்றிற்று. காசுமீரத்திலும் இதே நிலைதான்!

சமஸ்தானங்களை இந்தியக் குடையின் கீழ் கொண்டுவர இந்திய அரசு அனைத்து வழிகளையும் கையாண்டது. இந்த முயற்சிகளின் மூலவராக இருந்தவர் அன்றைய உள்துறை அமைச்சரும் துணைப் பிரதமருமான வல்லபாய் பட்டேல். கம்யூனிஸ்டுகள் தலைமையில் நடைபெற்ற வீரத்தெலங்கானா ஆய்தப் போராட்டம்தான் ஐதராபாத் நைஜாம் மன்னனைப் பணிய வைத்தது.

குசராத் ஓரத்தில் ஜுனாகாத் சமஸ்தானத்தை அதன் முஸ்லிம் மன்னர் பாகிஸ்தானுடன் இணைக்க விரும்பிய போதிலும் மக்களில் பெரும்பாலார் இந்துக்கள் என்ற அடிப்படையில் ஜுனாகாத் இந்தியாவுடன் இணைந்தது. இதே அடிப்படையில் இஸ்லாமியரைப் பெரும்பான்மையாகக் கொண்ட எல்லை மாநிலம் என்ற முறையில் ஜம்மு-காசுமீரம் பாகிஸ்தானில் சேர்ந்திருக்கும். ஆனால் அம்மக்களை வழிநடத்திய ஷேக் அப்துல்லா தலைமையிலான தேசிய மாநாட்டுக் கட்சி மதச் சார்பின்மையை வலியுறுத்தியது. காஷ்மீர் மக்களும் மதச் சார்பின்மையில் நாட்டம் கொண்டிருந்தனர்.

பிரித்தானிய வல்லாதிக்கத்துக்கும் முடியாட்சிக்கும் பிரபுத்துவத்துக்கும் எதிரான காசுமீர மக்களின் போராட்டத்தில் முகிழ்த்ததே காசுமீரத் தேசியம். இராசபுத்திர டோக்ரா அரச வம்சத்தைச் சேர்ந்த மன்னர் அரிசிங்கின் ஆட்சி ஒளிவுமறைவற்ற இந்து ஆளுகையாகவே இருந்தது. குறிப்பாக காசுமீர் பள்ளத்தாக்கின் அடித்தட்டு மக்களான இசுலாமியரை அடக்கி ஒடுக்குவதாக இருந்தது.

மன்னராட்சிக்கு எதிரான போராட்டங்களின் உச்சமாக 1931ஆம் ஆண்டு காசுமீரில் ஒரு பேரெழுச்சி உருவாயிற்று. புனித குரானை அவமதித்தது தொடர்பான சிக்கலும், இது குறித்து முறையிட்டவர்களைப் பணி நீக்கம் செய்ததும் இந்த எழுச்சிக்குத் தூண்டுதலாக அமைந்தன. இந்து மகாராஜாவைத் தூக்கி யெறியும் படி மக்களைத் தூண்டியதாக அப்துல் காதர் என்ற இளைஞரைத் தளைப்படுத்தி சிறிநகர் சிறையில் அவர் மீது வழக்கு விசாரணை நடைபெற்றது. இதை எதிர்த்து நடைபெற்ற போராட்டத்தின் போது 1931 ஜுலை 13ஆம் நாள் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டில் 17 பேர் உயிரிழந்தனர். இன்றளவும் காசுமீரப் பள்ளத்தாக்கு எங்கிலும் ஜுலை 13 ஈகியர் நாள் (தியாகிகள் தினம்) என்று கொண்டாடப்படுகிறது.

முஸ்லிம் மாநாட்டுக் கட்சியிலிருந்து 1938ஆம் ஆண்டு ஷேக் அப்துல்லா தலைமையில் பிரிந்து வந்தவர்கள் அனைத்து ஜம்மு-காசுமீர் தேசிய மாநாட்டுக் கட்சியை நிறுவினர். இக்கட்சி 1931 கிளர்ச்சியை அடக்குமுறையாளருக்கு எதிரான அடக்கப் பட்டோரின் போர் என வரையறுத்தது:

நீதியையும் நியாயத்தையும் நிலைநாட்டுவதே இப்போரின் குறிக்கோள். ஆளுவோர் முஸ்லீம்களாக இருந்து ஆளப்படுவோர் இந்துக்களாக இருந்திருந்தாலும் இதே போலத்தான் நிகழ்ந்திருக்கும்.

காசுமீரத் தேசியத்துக்குப் போட்டியாக சாதி மத அரசியல் இயக்கங்களை மன்னர் அரிசிங் வரவேற்று ஊக்கப்படுத்தினார். காசுமீர பண்டித மாநாட்டுக் கட்சி,

ஜம்மு பகுதியில் இந்து சபா, சீக்கியர்களுக்கான சிரோன் மணி கல்சா தர்பார் ஆகிய அமைப்புகள் தொடங்கப் பெற்றன.

ஷேக் அப்துல்லா தலைமையிலான தேசிய மாநாட்டுக் கட்சி இந்திய தேசியக் காங்கிரசால் அமைக் கப்பட்ட அனைத்திந்திய சமஸ்தான மக்கள் மாநாட்டிலும் இணைந்து கொண்டது. காசுமீரப் பள்ளத்தாக்கின் முஸ்லிம்கள் மீதான ஒடுக்குமுறைக்கு இஸ்லாமிய இறையரசைத் தீர்வாக முன்வைத்த அனைத்து சம்மு-காசுமீர் முஸ்லீம் மாநாட்டுக் கட்சிக்கு மாறாக, தேசிய மாநாட்டுக் கட்சியோ ஜாகீர்தார்களின் நிலவுடைமையை ஒழித்து சமூகப் பொருளியல் விடுதலை பெறுவதே குறிக்கோள் என்று அறிவித்தது.

உலக அரங்கில் ஏற்பட்ட நிகழ்ச்சிப்போக்குகளிலும் தேசிய மாநாட்டுக் கட்சி கவனம் செலுத்தி, இரண்டாம் உலகப் போரில் சோவியத்து செஞ்சேனையின் வெற்றிக்கு வாழ்த்துத் தெரிவித்தது.

தேசிய மாநாட்டுக் கட்சி 1944ஆம் ஆண்டு புதிய காசுமீரம் (நயா காஷ்மீர்) என்ற கொள்கை அறிக்கையை வெளியிட்டது. இந்தியப் பிரிவினை நடந்தாலும் நடக்காவிட்டாலும் காசுமீரம் சுதந்திர அரசாகத் திகழும் என்று இந்த அறிக்கை பறைசாற்றியது. கொள்கை அறிக்கைக்கான முன்னுரையில் ஷேக் அப்துல்லா சோசலிச சோவியத்து ஒன்றியத்தைப் போற்றினார்:

சோவியத்து நாட்டில் வெவ்வேறு தேசிய இனங்கள், மக்களினங்கள் அனைத்தும் அடைந்துள்ள மறுமலர்ச் சியைக் காணும் போது ஊக்கம் பிறக்கிறது.

முஸ்லீம் லீக் தலைவர் முகமது அலி ஜின்னாவுடன் ஷேக் அப்துல்லா முரண்பட்டார். பாகிஸ்தான் அமையும் போது காசுமீரத்தை அதில் சேர்ப்பதற்கு ஷேக் அப்துல் லாவே தடையாய் இருப்பதாக ஜின்னா நினைத்தார்.

வல்லாபாய் பட்டேல் இந்துத்துவ நிலைப்பாடு எடுத்து மன்னருடன் நெருக்கமாக இருந்த போது ஷேக் அப்துல்லா ஜவகர்லால் நேருவைப் பெரிதும் நம்பினார்.

அனைத்திந்திய முஸ்லீம் லீக் 1946-47இல் பாகிஸ் தான் அமைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருந்தது. காசுமீரத்தைப் பாகிஸ்தானுடன் இணைப்பதற்காக முஸ்லீம் மாநாட்டுக் கட்சி நடத்திய வரிகொடா இயக்கம் கொடிய முறையில் ஒடுக்கபட்டது. தேசிய மாநாட்டுக் கட்சியோ மன்னராட்சியை எதிர்த்து காசுமீரத்தை விட்டு வெளியேறு! என்று இயக்கம் நடத்தியது.

ஷேக் அப்துல்லா காசுமீரத்தை பாகிஸ்தானுடன் இணைக்கக் கூடாது என்பதில் உறுதியாக இருந்த போதே காசுமீரத்தின் தனித்தன்மை காக்கப்பட வேண்டும் என்று விரும்பினார். தேவையானால் இந்தியக் கூட்டாட்சிக் குடியரசில் இணைந்திருக்கலாம் எனக் கருதினார்.

இந்தியாவுடன் இணைந்தாலும் பாகிஸ்தானுடன் இணைந்தாலும் முடியாட்சி நீடிக்காது என்பது மன்னர் அரிசிங்குக்குத் தெரியும். காசுமீர் மக்களைப் பொறுத்த வரை இந்தியாவுடனோ பாகிஸ்தானுடனோ சேராமல் தனித்திருப்பதே முதல் தேர்வு. அன்று முதல் இன்று வரை அவர்கள் ஆசாதி என்று முழங்குவதன் பொருள் இதுவே. ஷேக் அப்துல்லா 1947 செப்டம்பர் 29ஆம் நாள் சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்ட பின் இவ்வாறு அறிவித்தார்:

ஜம்மு-காசுமீரத்தில் வாழும் நாற்பது இலட்சம் மக்களைப் புறந்தள்ளி பாகிஸ்தானுடனோ இந்தியாவு டனோ இணைவதாக அரசு அறிவிக்குமானல் நான் புரட்சிக் கொடி உயர்த்துவேன். எங்கள் சுதந்திரக் கோரிக்கை எங்கு அறிந்தேற்கப்படுகிறதோ அந்த அரசுடன் நாங்கள் இணைய விரும்புவதே இயல்பு.

இந்தியாவுடன் இணைவதா? வேண்டாமா? என்று மன்னர் அரிசிங் ஊசலாடிக் கொண்டிருந்த போது பிரதமர் நேரு துணைப் பிரதமர் வல்லபாய் பட்டேலை ஆர்எஸ்எஸ் தலைவர் கோல்வால்கரிடம் அனுப்பி வைத்தார். 1947 அக்டோபரில் கோல்வால்கர் மன்னர் அரிசிங்கை சந்தித்துப் பேசி இந்திய இணைப்புக்கு இணங்கச் செய்தார்.

அரிசிங் இந்தியாவுடன் காசுமீரத்தை இணைக்க உடன்படப் போகிறார் என்பதை அறிந்த பாகிஸ்தான் காசுமீரத்தின் வடமேற்குப் பழங்குடிகளின் ஆயுதப் படையெடுப்புக்கு ஆதரவளித்தது. மிரண்டு போன அரிசிங் இந்தியாவிடம் இராணுவ உதவி கேட்டார். உடனடியாக இணைப்பு ஒப்பந்தத்தில் ஒப்பமிட வேண்டும் என்று இந்தியா நிபந்தனை விதித்தது.

1947 அக்டோபர் 26ஆம் நாள் இடைக்கால அரசு அமைக்கும்படி ஷேக் அப்துல்லாவிடம் கேட்டுக்கொள்ளப் பட்டது. அதே நாளில் மன்னர் அரிசிங் இணைப்பு ஒப்பந்தத்தில் ஒப்பமிட்டார். அடுத்த நாளே காசுமீரத்துக்கு இந்தியப் படை அனுப்பப்பட்டது. மூன்று நாள் கழித்து நெருக்கடிக்கால ஆட்சித் தலைவராக ஷேக் அப்துல்லா அமர்த்தப்பட்டார். இந்திய இணைப்புக்கு எதிராக காசுமீர மக்கள் போராட்டம் வெடித்தது. அரிசிங் ஓடிப் போனார். இந்தியாவுடன் காசுமீரத்தை இணைக்கும் ஒப்பந்தத்தை தப்பியோடும் மன்னர் ஒப்பமிட்ட ஒப்பந்தம் என்று வரலாற்று ஆசிரியர்கள் பதிவு செய்துள்ளார்கள். இந்த ஒப்பந்தத்தைக் காட்டித்தான் காசுமீரத்தை இந்தியாவின் பிரிக்கமுடியாத பகுதி என்று உரிமை கோரப்படுகிறது.

இணைப்பை ஒட்டி காசுமீர மக்களை அமைதிப்படுத்த இந்தியா அவர்களுக்கு ஓர் உறுதி கொடுத்தது: "இந்தியா வுடன் காசுமீரத்தின் இணைப்பு இறுதியான தன்று. இந்த இணைப்பு குறித்துப் பொது வாக்கெடுப்பு நடத்தி காசுமீர மக்களின் விருப்பறிந்தே இறுதி முடிவு எடுக்கப்படும். "பொதுவாக்கெடுப்பு நடைபெற்றதா? காசுமீர மக்களின் விருப்பம் அறியப்பட்டதா?

- தொடரும்

(முகநூல் பதிவு)

# இந்திய ஒன்றியம் என்ற கருத்துரு அழிக்கப்படுகிறது

***(நடுத்தரமக்களால் முன்னெடுத்துக் கட்டமைக்கப்பட்ட இந்திய ஒன்றியம் இப்போது தேசியத்தைத் தழுவி பன்முகத் தன்மை இல்லாததாக்கப்படுகிறது)***

**சி.இராம் மனோகர் ரெட்டி**

இந்திய ஒன்றியம் என்ற கருத்துரு பெரும் பெருமைக்குரியதாகப் பேசிக் கொள்ளப்படுகிறதேயன்றி உண்மையில் அதை நிறைவேற்றுவதில் இல்லை. மொழி, சமயம், பண்பாடு எனப் பல்வேறு மாறுபட்ட வேற்றுமைத் தன்மையுடைய மக்களைக் கொண்ட நாட்டில், அரசமைப்புச் சட்டத்தால் உறுதி செய்யப்பட்ட உரிமைகள் சனநாயக வழிகளில் கிடைக்கப்பெற்று சமூகமாகக் கட்டமைக்கப்பட வேண்டுமென்பதுதான் விடுதலைக் கனவாக இருந்தது. அவ்வாறான வேற்றுமைத்தன்மை பெரும் மதிப்பிற்குரியது என்ற உள்ளடக்கத்தை அரசமைப்புச் சட்டம் கொண்டதாக இயற்றப்பட வேண்டும் என்பதுதான் இக்கனவின் சிறப்பியல்பு. இது பல தோல்விகளையும் பல வெற்றிகளையும் கலந்தே கடந்து வந்துள்ளது. சென்ற இரு கிழமைகளில் நிகழ்ந்தவற்றை அடுத்து இந்திய ஒன்றியக் கருத்துரு குலைந்து வருகின்றது என அச்சமூட்டுவதாக உள்ளது. பன்முகத் தன்மை, சகோதரத்துவம், தன்னுரிமை ஆகியவை மதிப்பிழந்தவையாகப்பட்ட ஒரு புதிய இந்தியாவை நாம் விரைவில் ஏற்க வேண்டியவர்களாகலாம்.

ஏன் எதற்காக அரசமைப்புச் சட்ட முறையிலான சம்மு காசுமீர் ஒவ்வொரு நடவடிக்கை வாயிலாகத் தீவிரமாக மாற்றப்பட்டு வருகின்றது ஏன் எதற்காக என்றால் அது இந்திய ஒன்றியம் என்ற கருத்துருவைத் தகர்த்துவதற்காகத்தான் எனத் தெரிகிறது.

### நெருடும் நடவடிக்கை

புனித நூலெனக் கருதப்படும் அரசமைப்புச் சட்டத்தை மாற்றிட மேற்கொள்ளும்முறைகள் எவ்வளவு முக்கியமானதோ அதேபோன்றதாக மேற்கொள்ளப்படும் திருத்தங்களின் உள்ளடக்கமும் இருக்க வேண்டும்.

1950லிருந்து சிலகால இடைவெளிகளில் மாநிலங்கள் பிரிக்கப்பட்டு புதிய மாநிலமாக ஆக்கப்பட்டுள்ளன. இதுபோன்ற நிகழ்வுகளின் போது கலந்துரையாடல் என்பது ஏதோ ஒரு வடிவத்தில் ஒன்றிணைந்த கூறாக இருந்து வந்துள்ளது. சம்மு காசுமீர் திடீரென மறைவுற்றது போன்று இதுவரை நிகழ்ந்ததில்லை. 80 இலக்கம் மக்களைக் கொண்ட மாநிலத்தை எஞ்சிய அனைத்து உலகத்திலிருந்து துண்டித்து விட்டும், அம்மக்களின் கருத்தை வெளியிட அனுமதிக்காமலும் உரிய உயரிய சட்டநெறிகள் எதையும் பின்பற்றாமல் ஒன்றிய அரசு (Federal State) எனச் சொல்லிக் கொண்டு அது அடித்து நொறுக்கப்பட்டு விட்டது. மத்தியில் குவிந்த முற்றிலும் மய்யப்படுத்தப் பட்ட அரசை இந்திரா காந்தி காலத்திற்குப்பின் சென்ற அய்தாண்டுகளிலும் நாம் பெற்றிருக்கிறோம் என்பதில் அய்யம் இல்லை. இன்னும் என்னென்னவெல்லாம் நிகழவுள்ளதோ என்பது பற்றிக் கவலை கொள்வதா? வேண்டாமா? எனத் தோன்றுகிறது. பெரிய கட்சியான திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றைத் தவிர எல்லா மாநிலக்கட்சிகளும் தொலை தூரப் பார்வையில்லாமலோ அச்சத்தினாலோ சம்மு காசுமீர் மாநிலம் இரு ஒன்றியப் பகுதிகளாகத் துண்டாடப்படுவதை ஏற்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டனவோ? என்று தோன்றுகின்றது.

விதி 370 இன் படி சம்மு காசுமீர் துய்த்து வந்த உரிமைகளை நரேந்திர மோடி அரசு திரும்பப் பெறுகிறது. இது அரசமைப்புச் சட்டத்தின் உள்ளார்ந்த உயிர்த் தத்துவத்திற்கு எதிரானது என்றுதான் கொள்ளப்படவேண்டும் என்று பலப்பல வழக்குரைஞர்கள், அரசமைப்புச்சட்ட வல்லுனர்கள் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளனர். இப்போது இந்த வெற்றியைப் பெற்று விட்டோம் எனக் கருதும் இந்த அரசு தன்னுடைய வேலைத் திட்டத்தை இதே போன்ற சூழ்ச்சியுடன் அரசமைப்புச் சட்டத்தை மாற்றிடத் தீவிரமாகத் துணித்திடும். இதற்குக் குறுக்காக அறமன்றங்கள் மட்டும் நிற்கலாம். அதிலும் இந்திய ஒன்றிய அரசு தன் நடவடிக்கைகள் மேலோங்கிடும் என்று எண்ணிக் கொண்டிருக்கிறது.

சம்மு காசுமீர் என்ற ஒரு மாநில அரசு மறைந்து விட்டதாக நமக்குத் தெரிகிறது. தங்களின் மாநிலம் திடீரென ஒருநாள் இரு ஒன்றியப் பகுதியில் கூறுபோடப்பட்டு அவை உண்மையில் தில்லியால் ஆளப்படுகிறது என அவர்களிடம் தெரிவிப்பது அவர்களை வேறெந்த வகையிலும் இவ்வளவு இழிவுபடுத்தமுடியும் என்று எண்ணவே முடியாது.

சிறப்பு உரிமைகளின் பின்னணியிலுள்ள உயிரான மெய்ப் பொருள்:

தலித்துகள், பழங்குடிகள் என்றும் மணிப்பூர், மிசோராம், நாகாலந்து மற்றும் சிக்கிம் (விதி 371 இன் கீழ்) இன்னும் இதுவரை சம்மு காசுமீர் என இவை பல்வேறு மாறுபட்ட தன்மையுடைய சமூகங்களாதலால் இவற்றிற்கு நேர்மையான காரணங்களுக்காகச் சிறப்பு உரிமைகள் அளிக்கும் விதி 370ஐ இந்திய

அரசமைப்புச் சட்டம் தன்னகத்தே கொண்டுள்ளது. நாடு முழுமைக்கும் எல்லா வகுப்புகளுக்கும் ஒரே மாதிரியான உரிமை அளிப்பது ஒரு இணைக்கமான சமூகத்தை உருவாக்காது. உண்மையில் இதற்கு நேர்எதிர்மறை யானதுதான் பல்வேறு மாறுபட்ட தன்மைகளைக் கொண்ட இந்த நாட்டிற்குப் பொருத்தமானதாக இருக்கும். பல்வேறுவகை வேறுபாடுகளைக் கொண்ட இந்தப் பெரிய நாட்டில் குறிப்பிட்ட வகுப்புகளுக்கு, சமயங்களுக் கென சிறப்பு உரிமைகள் அளிப்பது அவர்களை ஓர்மை உணர்வு உள்ளவர்களாக்கும். சம்மு காசுமீர் இந்திய ஒன்றியத்துடன் இணைக்கப்பட்ட சூழலில் அம்மாநிலத் திற்கு உத்திரவாதங்கள் வாக்குறுதியாக அளிக்கப்பட்டது சிறப்பான முக்கியத்துவம் வாய்ந்தது.

விதி 370இன் படி தன்னாட்சி வழங்கப்பட்டது. இரண்டு காரணங்களுக்காக வாதத்திற்குரியது ஒன்று, இந்தியாவும் பாக்கிசுத்தானும் இம்மாநிலத்தைப் பறித்துக் கொண்டபோது சம்மு காசுமீர் தன்னுரிமை கொண்டதாக இருந்தது. இரண்டாவதாக, இந்தியாவில் இசுலாமியரைப் பெரும்பான்மையாகக் கொண்ட இந்த மாநிலத்திற்கென ஒன்றிய அரசமைப்புச் சட்டத்தை அளித்தது. விதி 370 இல் உறுதியளித்துள்ள வாக்குறுதி களைத்தக்க வைக்க இவ்விரு தன்மைகளும் பெரிதும் முக்கியமானவையாகியுள்ளன. இருப்பினும் எப்போதும் ஓர்மையை முதலாவதாக எண்ணும் இராசுட்டிரிய சுயம்சேவச் சங்கத்திற்கும், சனசங்கங்கத்திற்கும் விதி 370ஐ நீக்குவதுதான் முதன்மையாக இருந்து வந்தி ருக்கிறது. விதி 370 எப்போதும் வாதத்திற்குரியதாக இருந்துவந்தாலும் அந்தவாதம் ஒருபோதும் எந்த அளவிலும் எடுத்துக்கொள்ளப்படவில்லை. இதில் புது தில்லிக்கோ சிறீநகருக்கோ புனிதம் இருப்பதாகக் கருதவில்லை ஒன்று குடியரசுத் தலைவரின் தொடர் அறிவிக்கைகளால் 1950 லிருந்தே திட்டமிட்டுத் தன்னாட்சி உரிமைக்கான வாக்குறுதி வெற்று வாக்குறுதியாகக் கப்பட்டது. இன்னொன்று, அதைப் பேரம் பேசும் பொரு ளாக்கி அது தன் வளையை வலுப்படுத்திக் கொண்டது. விதி 370 இன் உள்ளீட்டை வெற்றாக்கிவிட்டபோதிலும் அந்த விதி சம்மு காசுமீரிகளின் தனிச்சிறப்புக்குரிய பண்பு அங்கீரிக்கப்படும் வகையில் ஒரு முக்கியமான அடை யாளமான மதிப்பைத் தக்கவைத்துக் கொண்டது.

மோடி அரசின் நடவடிக்கை எத்தன்மையதாகினும் பழைய காசுமீரின் நிலைமை இனியும் நிலை பெறாது என்று வாதிடப்படுகிறது. 2014லிருந்து அரசு இரும்புக் கரம் கொண்டு ஒவ்வொரு ஆண்டும் நடத்தும் வன் முறை, நிகழ்ச்சிகளால் பாதுகாப்புப் படையினர் பலி யாதல், வெகுளியான மக்கள் கொலை செய்யப்படுதல் என நிலைமை மோசமடைந்து வருவதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். இறுதியில் சம்மு காசுமீர் சிறைப்பட்டதிலிருந்து நீக்கப்பட்டதும் தம்மண் கைப்பற்றப்பட்டுவிட்டது என்ற எண்ணத்தினுடனான துயருற்ற மக்களைத்தான் தில்லி அரசு கையாள வேண்டும். எல்லை தாண்டிய பயங்கரவாதம் பெருகு கிறதோ இல்லையோ வன்முறைகள் பெருகி மாதங் களாகவும், ஏன் ஆண்டுகளாகவும் நிகழக்கூடும் என நாம் அச்சம் கொள்ள வேண்டியுள்ளது.

**பன்மைத்தன்மையைப் புறந்தள்ளல்**

இந்திய ஒன்றியத்தின் பிற பகுதியின் நடுத்தர மற்றும் மேல்தட்டு மக்கள் ஆகசுத்து தொடக்கத்தில் அரசு எடுத்த இந்த முடிவை வரவேற்கின்றனர். இது ஒன்றும் வியப்பிற்குரியதல்ல. சம்மு காசுமீரில் நீண்ட காலமாகத் தொடரும் வன்முறை இவர்களைச் சலிப் படையச் செய்வதுடன் இதைப் பற்றிக் கவலையற்றவர் களாக்கிவிட்டது. எனவே, காசுமீரிகளை அவர்கள் மண்ணில் அடக்கி வைக்கும் அரசின் உறுதியான கடும் நடவடிக்கைகளை அவர்கள் இப்போது ஏற்றுக் கொள்ள லாம். காசுமீரிகள் இந்திய ஒன்றியத்துடன் இணைந் திருக்கவில்லை என நாம் பேசுகிறோம். ஆனால் இந்திய ஒன்றிய அரசு ஒருபோதும் காசுமீரை இணைத்துக் கொண்டிருக்கவில்லை என்ற உண்மையைச் சொல்ல வேண்டும். வன்முறைக்கு முன்பு காசுமீர் இயற்கை எழில் பொங்கும் விடுமுறைக் காலச் சுற்றுலாவுக்கான ஒரு இடமாகத்தான் இருந்தது அல்லது திரை நட்சத் திரங்கள் துள்ளித் திரியும் மலைப் பகுதிகளாக இருந்தது. நம்மை ஒத்த குடிமக்களாகத்தான் காசுமிரிகளும் நாம் கொண்டிருந்த கனவுகளுடன்தான் இருந்தார்கள் என நாம் ஒருநாளும் எண்ணிப் பார்த்ததில்லை. அந்த மாநில மக்கள் நாட்டின் மீது கொண்டிருந்த பற்றுறுதியை நாம் அய்யுற்றும் பயங்கரவாதத்திற்கும், ஆயுதச் சண்டை களுக்கும் அந்த மாநிலந்தான் காரணம் என்றும், அவர்கள் பாக்கிசுத்தான் கட்டுப்பாட்டிலுள்ள மாநிலத்தில் வாழ்பவர்களாகத்தான் நினைத்தோம்.

அதே நடுத்தர வகுப்பு மக்கள் விடுதலை இயக்கத் திற்கு வித்திட்டு நவீன அரசமைப்புச் சட்டத்திற்கு வழிகண்டதுடன் நாட்டைக் கட்டமைக்கும் அனைத்து திட்டங்களையும் முன்னெடுத்தனர். ஆனால் இப்போது இந்தியக் கருத்துரு கொடுந்தன்மை கொண்ட தேசியத் தைத் தழுவிக் கொண்டு நாட்டின் பன்முகத்தன் மையைப் புறந்தள்ளிவிட்டது. இப்போது காசுமீர் மக்கள் என்ன உணர்வுடன் உள்ளனர் என்பதைப் பற்றி கவலையற்றவர்களாக உள்ளோம். சென்ற திங்கள் முதல் இருவாரங்களில் அவர்கள் நாட்டுக்குள் சிறைப்படுத்தப் பட்ட நிலைக்குள்ளாகப்பட்டுள்ளது பற்றி நாம் சிறிதும் கவலை அற்றவர்களாக இருக்கிறோம். காசுமீரில் நிலங்கள் வாங்கிக் கொள்ளும் வாய்ப்பை ஏற்படுத்தப் பட்டதைப் பற்றி நாம் வெளிப்படையாகப் பேசிக்கொள்

கிறோம். அழகிய காசுமீரி பெண்களை நாட்டின் பிற பகுதி ஆண்கள் சட்டத்தின் பிடிக்குள் சிக்காமல் திருமணம் செய்து கொள்ளலாம் என்று சட்டம் இயற்றுவோர் பேசிக் கொள்கின்றனர். மேலும் இந்தப் பள்ளத்தாக்கில் மக்கள் சமூக வடிவத்தை மாற்றி இந்திய ஒன்றிய அரசமைப்புச் சட்டம் வகுக்கப்பட்ட காலத்திலிருந்து எவ்வளவு தூரம் பயணித்துள்ளோம். இந்திய ஒன்றியக் கருத்துரு வேர் வரை உலுக்கப்பட்டு நடுக்கம் கொள்ள வைக்கப்பட்டுள்ளது. இந்திய ஒன்றியக் குடியரசு நாட்டின் வரலாற்றில் மூன்று நிகழ்வுகள். 1975, சூன் 25 இல் அவசர நிலை அறிவிக்கப்பட்டு பெரும்பாலான அடிப்படை உரிமைகள் நிறுத்திவைக்கப்பட்டு மறுக்கப்பட்டது முதல் நிகழ்வு. அப்போது மக்கள் வாக்களித்து இந்தியாவை மீட்டெடுத்தனர். அடுத்தது, பாபர் மசூதி இடித்துத் தகர்க்கப்பட்ட 1992 திசம்பர் 6 ஆம் நாள். எனினும் இதற்கு ஈடுசெய்யாமலும் தண்டனையின்றியும் நாம் பசப்பித் தப்பி விட்டோம். இப்போது 2019 ஆகசுத்து 5இல் அரசமைப்புச் சட்டம் எழுத்தளவில் இல்லாவிட்டாலும் அதன் உயிர்ப்புத் தன்மை அழித்துப் பாழாக்கப்பட்டு, கூட்டாட்சித் தத்துவம் தகர்த்தப்பட்டு ஒழிக்கப்பட்டு ஒன்றியத்தில் உறுப்பான ஒரு மாநில மக்களின் உரிமைகள் பறிக்கப்பட்டுள்ளன. இந்தத் தற்போதைய மரண அடியிலிருந்து இந்திய ஒன்றியக் கருத்துருவை மீட்டெடுப்பது கடினமாகும்.

- 19.9,2019 நாளிட்ட டைம்ஸ் ஆப் இந்தியா
தமிழாக்கம் : **இரா.பச்சமலை**

## பெரம்பலூர் க.கந்தன் முதலாம் ஆண்டு நினைவுநாள்




பெரம்பலூர் க.கந்தன் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவுநாள் 31.08.2019 சென்னை லட்சுமிபுரம் கடப்பா சாலையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றது. மாணவர்களுக்குப் பேச்சுப் போட்டியும் கட்டுரைப் போட்டியும் நடத்தி பரிசளித்தனர். அவருடைய மகன் க.தமிழ்ச்செல்வன் இந்நிகழ்வுக்கு ஏற்பாடு செய்தார்.

## புரட்சிகர இளைஞர் முன்னணி நடத்திய "தேசியக் கல்விக் கொள்கை 2019 வரைவு அறிக்கையைத் திரும்பப் பெறு"

## மாநாடு



தேசியக் கல்விக் கொள்கை : பார்ப்பன - பனியா சாம்ராஜ்ஜிய கல்விக் கொள்கையே!

தேசியக் கல்விக் கொள்கை - 2019 வரைவு அறிக்கையைத் திரும்பப் பெற வலியுறுத்திப் புரட்சிகர இளைஞர் முன்னணி சார்பில் 18.8.2019 ஞாயிறு பிற்பகல் 2 மணிக்குச் சென்னை மேற்கு மாம்பலம் ஆனந்த் சந்திரசேகர் அரங்கத்தில் தென்கனல் தலைமையில் மாநாடு நடைபெற்றது. பேராசிரியர்கள் வீ. அரசு, ப. சிவக்குமார், அ. மார்க்ஸ், ஹாஜாகனி ஆகியோரும் கல்வியாளர்கள் ஆன்ட்ரு சூசைராஜ், சுடரொளி, கிரேஸ் பானு, உமா மகேசுவரி ஆகியோரும் அரசியலாளர்கள் வாலாசா வல்லவன் - மா.பெ.பொ.க., ஆழி செந்தில்நாதன் - தன்னாட்சி தமிழகம் சீராளன் புரட்சிகர இளைஞர் முன்னணி ஆகியோரும் உரை யாற்றினர். நிகழ்ச்சி இரவு 9 மணிக்கு முடிவுற்றது.

## மா.க.கிருட்டிணமூர்த்தி மறைவு



திராவிடர் கழக துணைத் தலைவர் கவிஞர் கலி. பூங்குன்றன், திராவிடர் விடுதலைக் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை க.இராசேந்திரன் ஆகியோரின் தமையன் மா.க. கிருட்டிணமூர்த்தி 19.8.2019 அன்று மயிலாடுதுறையில் தம் இல்லத்தில் மறைந்தார். பெரியாரின் தத்துவங்களை மக்களிடையே பரப்பி அக்கொள்கையின்பால் பலரை ஈர்த்துச் செயல் மறவர்களாக்கிய பெருமைக்குரிய இவரின் மறைவுக்கு மா.பெ.பொ.க. மனம் கசிந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

# ஆதிச்சநல்லூர்

- முனைவர் **விஜய் அசோகன்**

ஆதிச்சநல்லூர் குறித்த செய்திகள் கடந்த வாரம் வந்தபொழுது, தமிழர் நாகரீகத்தின் நிரூபிக்கப்பட்ட காலம் கி.மு 1000 வரையிலும் என பெருமிதப்பட்டுக் கொண்டவர்களைக் காணமுடிந்தது.

சமகாலத்திலேயே நாம் எத்தனைத் தகவல்களை மறந்து கடந்து இருக்கிறோம். தொல்லியல் துறையும் கடலாய்வுத் துறையும் இந்திய ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் விட்டுவைத்திருப்பதால், நம் வரலாற்றை நாம் காணக் கூட, தேடக் கூட, எல்லாவற்றுக்கும் இந்திய நடுவண் அரசிடம் கையேந்தும் நிலையிலேயே நமது காலம் கடந்துவிடுகிறது!

இப்படித்தான், பூம்புகார் குறித்த செய்திகளும் கடந்த 20 ஆண்டுகளுக்குள் படிப்படியாக மறைக்கப்பட்டு நீர்த்துப் போகச் செய்யப்பட்டுள்ளது.

2001 ஆம் ஆண்டில் பெங்களூரில் இருக்கும் இந்திய கடலியல் ஆய்வு மையத்திற்கு வந்த கிரஹாம் ஹன் காக் என்னும் இங்கிலாந்தைச் சேர்ந்த கடலியல் ஆய்வாளர், இரண்டு விதமான கடலியல் ஆய்வில் ஆர்வம் கொண்டி ருந்தார். ஒன்று, துவாரகா இன்னொன்று பூம்புகார். பூம்புகாரில் கடலாய்வு மேற்கொள்ள இந்திய நடுவண் அரசு சம்மதித்தாலும் நிதி ஒதுக்க ஒப்புக்கொள்ளவில்லை, ஆனால், துவாரகாவிற்கான நிதி வழங்கப்பட்டது. தன் சொந்த முயற்சியிலும் சானல்4 தொலைக்காட்சி நிறுவனத்தின் உதவியாலும் பூம்புகார் ஆய்வினை மேற்கொண்டார் கிரஹாம். பூம்புகாரின் இன்றைய கடல் எல்லையில் இருந்து 3 கிலோமீட்டர் ஆழத்தில் புதைந்த நகரத்தையும் வணிக, கப்பல் போக்குவரத்துத் தளம் இருந்ததற்கான அடையாளத்தையும் காட்சிப் படுத்தினார். அப்பகுதியைச் கடந்து இன்னும் இன்னும் நகரக் கட்டமைப்புகள் இருக்க வாய்ப்புண்டு எனினும் ஆழமான கடலுக்குள் சென்று ஆய்வு நடத்த கால அவகாசமும் நிதியும் தேவைப்பட்டதால் அவர் அங்கிருந்து பின் வாங்கினார்.

ஆனாலும், அதுவரை கண்டுப்பிடிக்கப்பட்ட ஆய்வுத் தரவுகளின் படியே அப்பகுதிக்கான வயது இன்றிலிருந்து 10000-11000 ஆண்டுகள் இருக்கலாம் என்று கணக்கிடப்பட்டது.

இதனை டர்ஹாம் பல்கலைக்கழகப் பேராசிரியர் க்ளன் மில்னே கடலியல் ஆய்வுகளின் தரவுகள் அடிப்படையில் உறுதியும்படுத்தினார்.

கிரஹாம் ஹான் காக் தன்னுடைய இணையத் தளத்திலும் இது குறித்த தகவல்களைப் பகிர்ந்துள்ளார்.

என்ன வியப்பென்றால், அன்றைய பாஜக அரசாங்கம் துவாரகாவின் வயது 10000 ஆண்டுகள் இருக்கலாம் எனக் கூறியது, பூம்புகாரைப் பற்றி எங்குமே பேசியதாகத் தெரியவில்லை. செய்திகளும் வடநாட்டு ஆங்கில ஊடகங்கள் எதிலுமே வரவில்லை. தமிழகத்திலும் பிபிசி ஆங்கில இணையச் செய்திகளில் மட்டுமே தென்படு கின்றன.

இப்படித்தான் நம் கண் முன்னே நம் வரலாறுகள் புதைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. தமிழகத்தைப் பொறுத்தவரை கிமு.500-1000 வரை மட்டுமே இருக்கும் கால அளவுகளில் வரும் வரலாறுகளை மட்டுமே இப்பொழுது வெளிவரும்படியும் இந்திய நடுவண் அரசு கவனமாகப் பார்த்துக் கொள்கிறது. ஆதிச்சநல் லூரிலும் கிடைத்த அனைத்து வகையான புதைப் பொருள் களை இன்னும் முழுமையாக ஆய்வு செய்யவில்லை. அதே போன்றுதான் கீழடியிலும். இவ்வளவு ஏன், மதுரையை நாம் இன்னும் முழுமையாக ஆய்வுக்குட் படுத்தவேயில்லை. அதேப் போலத்தான், சிந்துச மவெளிக் கும் தமிழர் நாகரீகத்திற்கும் தொடர்புண்டு என ஆங்கிலே யர் காலத்தில் இருந்தே ஸ்பெயின் நாட்டில் இருந்து வந்து பம்பாய் பல்கலைக்கழகத்தில் பேராசிரிய ராகப் பணியாற்றிய ஃபாதர் ஹென்றி ஹீராஸ் அவர் களும் எடுத்துக் கூறி வந்தார். இன்னும் தன் புத்தகத்தில் விரிவாக எழுதி யுள்ளார்.

ஆனாலும் இந்திய நடுவண் அரசு வட இந்திய அடையாளமாகவே கருதி கூறி வந்தது. சிந்து சமவெளி நாகரீகத்தை வட இந்தியாவின் அடையாளம் என பெருமைபொங்கச் சொல்லிக்கொள்ளும் வாய்ப்பு இருந்தது வரை சிந்து சமவெளி நாகரீகச் செய்தி அடிக்கடித் தென்பட்டதும், நிறைய ஆய்வுகள் அதற்கு நேர்மாறாய் வரத் தொடங்கியதும் அச்செய்திகள் அதோடு காணாமல் போனதையும் நிகழ்காலத்திலேயே பார்க்கிறோம்.


இந்திய வரைப்படத்தில் தமிழ்நாடு இணைக்கப்பட்ட ஒரே காரணத்திற்காக எத்தனை எத்தனை வரலாற்று துரோகங்களை நாம் சுமப்பது..

நாம் இணைந்தது, இப்புவிசார் மண்டலத்தின் கூட்டுப் பலத்திற்காக இருக்க வேண்டுமே தவிர, ஒருவர் மீது ஒருவர் ஆதிக்கம் செலுத்தவோ, ஒருவர் வரலாற்றை இன்னொருவர் அழிக்கவோ, ஒருவர் மொழியை, பண்பாட்டை இன்னொருவர் மீது திணிக்கவோ இருக்கக் கூடாது!

**முத்துச்செல்வன்** பகிரியிலிருந்து



அண்ணா
அறிவுக்கொடை
அண்ணா அறிவுக் கொடை
அடுத்து வர இருப்பவை
நாடக இலக்கியம்
கட்டுரை இலக்கியம்
புனைவு இலக்கியம்
பொங்கல் இலக்கியம்
இரங்கல் இலக்கியம்
இதழ் உரை இலக்கியம்
நேர்காணல்கள்
புகழ் இலக்கியம்
மாநிலங்களவை உரைகள்
ஆங்கிலம் :
Home Land, Home Rule
இதுவரை நூலுருவம் பெறாத அண்ணாவின்
சொற்பொழிவுகள், ஆசிரியவுரைகள்,
மலேசியப் பொழிவுகள்
பலவும் முதன்முதலாய் இத்தொகுப்பின் வழியாய்
உலகின் பார்வைக்கு வருகின்றன.
பதிப்புக் குழுவின் பெருமுயற்சியால் திரட்டப்பட்ட
அண்ணா தொடர்பான அரிய ஆவணங்கள்
ஒவ்வொரு தொகுதியிலும் பின் இணைப்பாய்
தரப்பட்டுள்ளன.
தமிழர் நலத்தின் விளைநிலம்
தமிழ்த்தேசியத்தின் உலைக்களம்
திராவிடரியக்கத்தின் அரசியல்முகம்
திசைகளை இணைக்கும் சிந்தனைவளம்
அறிஞர் அண்ணா
உயர்ந்த கட்டமைப்போடும் அழகிய அச்சமைப்போடும்
நேர்த்தியாக நூல்கள் உருவாக்கப்படுவதால்
முன்பதிவு செய்தோருக்கு மட்டும் நூல் தொகுதிகள் கிடைக்கும்
அழகிய பதிப்பாய் உருவாகியிருப்பவை
மடல் இலக்கியம் உரூ. 10000/-
ஆசிரியவுரை உரூ. 13000/-
மேடை இலக்கியம் உரூ. 7000/-
சட்டமன்ற உரைகள் உரூ. 2500/-
மொத்த விலை உரூ. 32500/-
64 தொகுதிகள்
ஒரே தவணையில் செலுத்துவோருக்குச்
சலுகை விலை
உரூ. 16,250/-
15.9.2019 தேதிக்குள் முன்பதிவு
செய்பவர்களுக்கு மட்டும் நூல்கள் கிடைக்கும்
இரு வழிகளில் பணம் அனுப்பலாம்
வரைவோலை (டிடி) தமிழ்மண் பதிப்பகம்
பெயருக்கு எடுக்கவும். (காசோலை தவிர்க்கவும்)
வங்கி வழி அனுப்ப
Thamizhmann Pathippagam
Oriental Bank of Commerce
T. Nagar, Chennai- 600 017
IFSC : ORBC0100928
Current A/c No. : 09281131000355
தமிழ்மண் பதிப்பகம்
2, சிங்காரவேலர் தெரு, தியாகராயர் நகர்,
சென்னை - 600 017.
தொலைபேசி : 044-24339030
செல்பேசி : 9444410654
மின்னஞ்சல்: elavazhagantm@gmail.com
அறிஞர் அண்ணா
110ஆம் ஆண்டு நிறைவு
மகிழ்ச்சி வெளியீடு!
அண்ணா
அறிவுக்கொடை
எழுத்து, பேச்சு, படைப்பு அடங்கிய
முழுமைத் தொகுப்பு!
110
தொகுதிகள்
வரலாற்றில் எவருக்கும்
வராத பெருஞ்சிறப்பு!
அண்ணாவுக்கு வருகிறது
110 தொகுதிகளின் முழுத்தொகுப்பு!
தமிழ்மண் பதிப்பகம்
2, சிங்காரவேலர் தெரு, தியாகராயர் நகர்,
சென்னை - 600 017.
தொலைபேசி : 044-24339030
செல்பேசி : 9444410654





மடல் இலக்கியம்

8.5.1955 முதல் 12.1.1969 வரை

**20 தொகுதிகள்**
**6400 பக்கங்கள்**

தமிழ்ச் சமூக வரலாற்றுப் பிழிவாக
**அண்ணா தம்பிக்கு எழுதிய**
**அனைத்துக் கடிதங்களின் தொகுப்பு**

விற்பனை விலை
உரூ. 10000/-
முன்பதிவுச் சலுகை விலை
உரூ. 6000/-




ஆசிரியவுரைகள்

8.3.1942 முதல் 23.1.1969 வரை

**26 தொகுதிகள்**
**8300 பக்கங்கள்**

தமிழின வளர்ச்சிப் படிக்கட்டுகளைக்
காட்டும் எழுத்து விளக்காக
**அண்ணா எழுதிய அனைத்து**
**தலையங்கங்களின் தொகுப்பு**

விற்பனை விலை
உரூ. 13000/-
முன்பதிவுச் சலுகை விலை
உரூ. 7800/-




மேடை இலக்கியம்

22.8.1937 முதல் 11.1.1969 வரை

**14 தொகுதிகள்**
**4480 பக்கங்கள்**

முதலாவது மொழிப் போர் தொடங்கிய
22.8.1937 முதல் 11.1.1969 வரை
**அண்ணா ஆற்றிய மேடைச்**
**சொற்பொழிவுகளின் முழுத் தொகுப்பு**

விற்பனை விலை
உரூ. 7000/-
முன்பதிவுச் சலுகை விலை
உரூ. 4200/-




சட்டமன்ற உரைகள்

29.4.1957 முதல் 31.8.1968 வரை

**4 தொகுதிகள்**
**1664 பக்கங்கள்**

29.4.1957 முதல் 31.8.1968 வரை
சட்டமன்றத்தில்
**அண்ணா ஆற்றிய**
**உரைத் தொகுப்பு**

விற்பனை விலை
உரூ. 2500/-
முன்பதிவுச் சலுகை விலை
உரூ. 1600/-

# நீலகிரி நிலச்சரிவும், நியூட்ரினோ திட்டமும்

நம் நாட்டில் கொண்டு வரப்படும் திட்டங்களைப் பொதுவாக மூன்று காரணிகளை வைத்து ஆய்வு செய்து அந்தத் திட்டம் சாதகமா அல்லது பாதகமா என்கிற முடிவிற்கு வரலாம். குறிப்பிட்ட திட்டம் எந்த மாதிரியான திட்டம், அதன் அமைவிடம், அந்த திட்டத்தினால் ஏற்படப்போகும் சமூகப் பொருளாதார நன்மைகள் என்ன? மேற்சொன்ன மூன்று காரணி களின் அடிப்படையில் தான் அந்தத் திட்டத்தை நாம் வரவேற்க வேண்டுமா? அல்லது எதிர்க்க வேண்டுமா? என்கின்ற நிலைப்பாட்டிற்கு வரமுடியும். தேனி மாவட் டத்தில் அமையவுள்ள நியூட்ரினோ ஆய்வுக்கூடம் எந்த மாதிரியான திட்டம்?

தேனி மாவட்டம், பொட்டிப்புரம் அம்பரப்பர் மலையில் அமைய இருக்கிற நியூட்ரினோ ஆய்வகத்தில், நியூட்ரி னோக்களை ஆய்வு செய்யப் போவதாக விஞ்ஞானிகள் சொல்கிறார்கள். இயற்கையாகவே சூரியனில் இருந்தும் அண்டவெளியில் இருந்தும் கோடிக்கணக்கான நியூட்ரி னோக்கள் நம் உடலை ஊடுருவிச் சென்று கொண்டு தான் இருக்கின்றன. இயற்கையில் வரும் இந்த நியூட்ரி னோக்களுக்கு ஆற்றல் மிகவும் குறைவு அல்லது கிடையாது. துல்லியமாக ஒரு இடத்தை நோக்கிக் குறி பார்த்து வராது அவற்றால் எந்தவிதமான பிரச்சினை களும் பெரிதாகக் கிடையாது.

இந்தியா இவ்வகை நியூட்ரினோ ஆய்வுகளில் முன்னணியில் இருந்த நாடு, 60-களில் கோலாரில் இருந்த தங்கச் சுரங்கத்தில் இந்தியா அமைத்த நியூட்ரி னோ ஆய்வகம், இயற்கையில் கிடைக்கக்கூடிய நியூட்ரி னோக்களைப் பதிவு செய்து சாதனை படைத்தது, பொட்டிபுரத்தில் அமையவுள்ள ''நியூட்ரினோ நோக்குக் கூடம்'' இந்தத் திட்டத்தின் இரண்டாம் கட்டமாக, சில ஆண்டுகளுக்குப் பிறகு, செயற்கையாக, தொழிற்கூடங் களில் உருவாக்கப்படுகின்ற நியூட்ரினோ கற்றைகளை ஆய்வு செய்யப் போவதாகக் கூறப்படுகிறது,

இவ்வாறு செயற்கையாக உற்பத்தி செய்யப்படும் நியூட்ரினோ கற்றைகள், அதிக ஆற்றல் கொண்டவை யாக இருக்கும். துல்லியமாக ஒரு இடத்தை நோக்கி அனுப்ப முடியும். இந்தக் கற்றைகள் அமெரிக்காவின் பெர்மி ஆய்வுக்கூடத்தில் இருந்தும், ஐரோப்பா, ஜப்பான் ஆய்வகங்களில் இருந்தும், அண்டார்டிகாவில் இருந்தும் தேனி பொட்டிப்புரத்தை நோக்கி, துல்லியமாக அனுப் பப்படும். ஒளியின் வேகத்தில் பயணிக்கக்கூடிய இந்தக் கற்றைகள் உற்பத்தி செய்யும் இடத்தில் கதிர்வீச்சு இருக்கும் என்று பெர்மி ஆய்வகம் வெளிப்படையாகத் தெரிவித் துள்ளது.

இரண்டாம் கட்டம் மேற்கொள்ளப்படும் நியூட்ரினோ ஆய்வு எதற்காக? எதிரி நாடுகளிடம் எங்கே அணு குண்டுகள் இருக்கின்றன என்பதைக் கண்டு அறிந்து, அவற்றைச் செயல் இழக்கச் செய்வதற்காகத்தான் இந்த ஆய்வு. இது அடிப்படை அறிவியல் திட்டம் அல்ல; பாதுகாப்புத் துறை ஆராய்ச்சிகள் தொடர்பான திட்டம். அமெரிக்காவக்குப் பிடிக்காத, குறிப்பாக சீனா போன்ற நாடுகளிடம் உள்ள அணுகுண்டுகளை ஆராய்ந்து, அதைச் செயல் இழக்கச் செய்வதுதான் இந்திய நியூட்ரினோ ஆய்வுத் திட்டம்.

இந்த ஆய்வகம் அமையவுள்ள இடம் எப்படிப் பட்டது? தேனி மாவட்டம், பொட்டிபுரம் அம்பரப்பர் மலைகள் மேற்குத் தொடர்ச்சி மலைகளின் அங்கம், இம்மலைகளை உலகப் பல்லுயிரிய பாதுகாப்பு மண்டலம் என ஐ.நா. மன்றத்தின் யுனெஸ்கோ அறிவித்து இருக் கிறது. பாதுகாக்க வேண்டிய பல்லுயிர்ப் பாதுகாப்பு மண்டலம் என, மாதவ் காட்கில் குழுவும், அறிவித்து இருக்கின்றது. இத்தகைய அறிவிப்புகள் மூலம் சொல்ல வருவது இரண்டு நாடுகளுக்கு இடையே போர் நடந் தால்கூட, அங்கே குண்டு போடக்கூடாது, தாஜ்மகால், தஞ்சை பெரிய கோவில் போன்றவற்றை எப்படி பாதுகாக் கிறோமோ, அந்த அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்தது மேற்குத் தொடர்ச்சி மலை. தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, கோவா, ஆந்திரா, மராட்டியம் மற்றும் குசராத் மாநிலங் களில் மக்கள் வாழ்வதற்கு, மேற்குத் தொடர்ச்சி மலைகள் உயிர்ப்போடு இருக்க வேண்டும், தென்னிந்தியாவில் உற்பத்தியாகி ஓடும் நதிகள் அனைத்தின் பிறப்பிடமும் இம்மேற்கு மலைகள்தான், சூழல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதியில், வெடிமருந்துகளைப் பயன்படுத்தி, பல இலட்சம் டன் பாறைகளைத் தகர்த்து உடைத்து எடுத்து, இந்த ஆய்வகம் அமையப் போவதாகத் தெரிகிறது. அதுவும் தமிழகம் போராடிப் பெற்ற முல்லைப் பெரியாறு, வைகை, மேகமலை உள்ளிட்ட 18 நீர்த்தேக்கங்கள் இந்தப் பகுதியில் உள்ளன. இரண்டாண்டுகளுக்கு முன்னர், ஹைகுவாக் என்ற ஆய்வு இதழ், ஒரு ஆய்வறிக் கையை வெளியிட்டு இருந்தது.

கடந்த 150 ஆண்டுகளில் ஏற்பட்ட நில நடுக்கங் களில் 746 நில நடுக்கங்கள் மனிதர்களால் தூண்டப் பட்டவை என்று சொல்கிறது இந்த அறிக்கை. அவற்றுள் 37 சதவீத நில நடுக்கங்கள் மிகப் பெரிய சுரங்கங் களைக் குடைந்ததால் தூண்டப்பட்டவை; 24 சதவீத பெரிய அணைகள், நீர்த் தேக்கங்கள் கட்டுமானங்களால் தூண்டப்பட்டவை என்று அந்த அறிக்கை சொல்கிறது. திட்டம் அமையவுள்ள பகுதி, ஏற்கெனவே நீர்த்தேக்

களால் அழுத்தம் உள்ள பகுதி என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

''மேற்குத் தொடர்ச்சி மலைகளில் பாறைகளை வெடிவைத்து தகர்த்து நிறைய சுரங்கங்கள் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ளது, பல்வேறு அணைகள் உள்ளன எனவே எந்தப் பிரச்சினையும் ஏற்படாது'' என்று விஞ்ஞானிகள் தரப்பு தெரிவித்திருந்தது.

நம் கண்முன்னால் நீலகிரியிலும் கேரளாவிலும் நடைபெற்றுள்ள கோரத்தைப் பார்த்தாலே தெரியும், மலைகளைக் குடைந்து சுரங்கங்கள், கேளிக்கை விடுதிகள், அணைகள், எஸ்டேட்டுகள் என அமைத்த தன் விளைவாக நிலச்சரிவுகள் ஏற்பட்டுள்ளதையும், அதனால் இலட்சக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ள தையும் காணலாம்.

நியூட்ரினோ ஆய்வுக்கூடம் அமைக்கப்பட்டால், தமிழ் மக்களுக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்காது. இந்தப் பகுதியும் பொருளாதாரத்தில் வளராது. ஏனென் றால் ஒரு சில விஞ்ஞானிகள் மட்டுமே ஆய்வுகளை மேற்கொள்வார்கள். நமக்குள்ள வேலை வாய்ப்பு என்பது அதிகபட்சமாக சில பேருக்கு காவலாளி பணி கிடைக்கலாம்.

இந்தத் திட்டத்திற்கென வழங்கப்பட்ட சுற்றுச்சூழல் அனுமதியை ரத்து செய்து 2017-ஆம் ஆண்டு தீர்ப்பு வழங்கியது பசுமை தீர்ப்பாயத்தின் சென்னை அமர்வு, தேசியப் பசுமை தீர்ப்பாயத்தின் தீர்ப்பை மதிக்காமல், தமிழக அரசின் நிலைப்பாட்டை கணக்கில் கொள்ளா மல், மாநில அரசுகள் மட்டுமே தரக்கூடிய பிரிவின்கீழ் ''சிறப்புத் திட்டம்'' என்று அறிவித்து மாநில அரசின் உரிமைகளை மீறி கடந்தாண்டு மீண்டும் சுற்றுச் சூழல் அனுமதி வழங்கியது மத்திய அரசு.

இந்திய அனுமதியை எதிர்த்த வழக்கு உச்சநீதி மன்றத்தில் நிலுவையில் உள்ளது. ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ இந்தத் திட்டத்தை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் வழக்குத் தொடுத்து, 2015-ஆம் ஆண்டு தடை ஆணை பெற்றுள்ளார். தென் தமிழகத்தின் ஐந்து மாவட்டங்களுக்குக் குடிநீர் மற்றும் விவாசயத்திற்கான நீர் ஆதாரமாக விளங்கக் கூடிய அணைகள், பல்லுயிரியம் தழைத்து இருக்கும் மேற்குத் தொடர்ச்சி மலைகளைப் பாதுகாக்க வேண்டிய காலகட்டத்தில் இப்படிப்பட்ட ஒரு திட்டத்தை செயல் படுத்த முனைவது அறிவில் சிறந்த செயலாகாது. காலநிலை மாற்றத்தில் இருந்து மனித சமூகம் தப்பித்துக் கொள்ள இயற்கை அரணக்களைப் பாதுகாக்க வேண்டியது காலத்தின் கட்டாயம்.

- **கோ. சுந்தர்ராஜன்,** பூவுலகின் நண்பர்கள்
தினத்தந்தி : 20.8.2019

# வரலாறு நாளை மாறும்

**- நா.மதனகவி**

தொல்காப்பியமும்
வள்ளுவமும்
நெறியாய்க் கொண்ட
தமிழர் வாழ்வில்



வகையாய் வருணத்தைத்
திணித்து
சாதிச் சாக்கடையில்
நீந்த வைத்த
பார்ப்பனியத்தை
உடைத்து

சமூகநீதி, சமத்துவத்திற்கு
இவரே உரியர் தமிழர்
மண்டையில்
உரைத்த சூடு
தந்தை பெரியார்

சூத்திர இழிவுச் சடங்கு,
சாத்திரப் பிதற்று; பசு
மூத்திரப் பழக்கம்; குல
கோத்திர வழக்கம் –
இடித்தவர் பெரியார்

சாதி நஞ்சைச்
சுவாசித்த மூடர்களுக்கு
உயிர்வளி தந்த
தனிக் காடு
தந்தை பெரியார்

பெண் கல்வி
உரிமையை மறுத்து
கல்விக்குக் கடவுள்
பெண்ணாய்ப் கொண்டமதத்தில்
பெண் விடுதலையைச்
சமூகத்தின்
விடுதலை யாக்கியவர்
தந்தை பெரியார்
பகுத்தறிந்த வாழ்வுக்கும்
பொதுமைச் சமூகம்
தழைக்கவும்
புதுமை அறிவியல்
நோக்கிற்குக்

கதவைத் திறந்த
திறவு கோல்
தந்தை பெரியார்

இந்தியா ஒரு நாடா?
இல்லை பல நாடுகள்
என்றுரைத்தார்
இந்தியை எதிர்த்து
சமற்கிருதத்தின் வாலறுத்த
கூர்வாள்
தந்தை பெரியார்

இந்தியாவின் உறவறுக்க
உயிர் கொடுக்கும்
தன்னுரிமைத் தேசம்
காசுமீரின் உரிமையைக்
குலைத்த
பாசிச மோதியின் கொடுஞ்
செயலைக்
குழியில் மூடும் வரலாறு
நாளை
உன் இறுதி முழக்கத்தை
இறுகப் பற்றுகிறோம்

# சென்னையில் திருக்குறள் மாநாடு



**செ**ன்னையில் பெரியாரிய உணர்வாளர்கள் கூட்ட மைப்பின் சார்பில் திருக்குறள் மாநாடு ஆகஸ்ட் 12, 2019 திங்கள் அன்று தேனாம்பேட்டை காமராசர் அரங்கத்தில் நடைபெற்றது.

அறிஞர்கள், அடிகளார், படைப்பாளிகள், ஆய்வாளர் கள், பேராசிரியர்கள் எனப் பலரும் இம்மாநாட்டில் பங்கேற்றனர். மாநாடு நான்கு அமர்வுகளாக நடை பெற்றது. காலை 10 மணியளவில் தமிழ்த்தாய் வாழ்த்துடன் மாநாடு துவங்கியது. பறையிசைக் கலை நிகழ்வு நடைபெற்றது. பின்னர் மாநாடு அறச்சுடர் ஏற்றி துவங்கப்பட்டது. பொழிலன், கோவை கு.ராமகிருட்டி ணன், விடுதலை க.ராசேந்திரன், திருமுருகன் காந்தி, குடந்தை அரசன், நாகை திருவள்ளுவன், வாலாசா வல்லவன், டைசன் ஆகியோர் அறச்சுடரை ஏற்றினர்.

தந்தை பெரியார் திராவிடர் கழகத்தின் பொதுச் செயலாளர் கோவை கு.இராமகிருட்டிணன் மாநாட்டு வரவேற்புரை ஆற்றினார். மாநாட்டில் திருக்குறள் 2050 ஆய்வு நூல் வெளியீடு நடைபெற்றது. அதனை முனைவர் இளங்குமரனார் வெளியிட, தந்தை பெரியார் திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் கோவை கு.இராமகிருட்டிணன் மற்றும் திராவிடர் விடுதலைக் கழகத்தின் பொதுச்செய லாளர் விடுதலை க.இராசேந்திரன் ஆகியோர் பெற்றுக் கொண்டனர். திருக்குறள் மாநாட்டிற்கான பாடல் வெளியிடப்பட்டது. அது குறித்தான சிறு அறிமுகத்தினை மே பதினேழு இயக்க ஒருங்கிணைப்பாளர் லெனாகுமார் வழங்கினார்.

மாநாட்டு அரங்கத்தின் வளாகத்தில் திருக்குறளின் அதிகாரங்களைக் காட்சிப்படுத்தும் விதமாகத் தோழர் மாதவன் உழைப்பில் உருவாக்கிய சிற்பக் கண்காட்சி பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது.

முதல் அரங்கமாக வாழ்த்தரங்கம் நடைபெற்றது. திராவிடர் ஒன்றிய சமத்துவப் பேரவையின் தோழர் தகடூர் சம்பத் வரவேற்புரை வழங்கினார். மாணவர் களம் அமைப்பின் கி.குணத்தொகை தலைமை தாங்கினார். முனைவர் இளங்குமரனார் தொடக்கவுரை யாற்றினார். பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப் பின் ஒருங்கிணைப்பாளர் தோழர் பொழிலன் நோக்க வுரை ஆற்றினார். வழக்கறிஞர் பாவேந்தன் நெறியா ளுகை செய்தார்.

பேரூர் ஆதீனம் மருதாசல அடிகளார், நல்லூர் சரவணன், ருக்குமணி பன்னீர்செல்வம், கண்ணன் செயபாலன், குடந்தை இறைநெறி இமயவன், பேரா சிரியர் ஹாஜாகனி ஆகியோர் உரையாற்றினர்.

இரண்டாம் அமர்வாக மாணவர் மற்றும் இளைஞர் களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

திருவள்ளுவர் தமிழ்வழிப் பள்ளி மாணவர்கள், மார்க்சு கலைக்குழு தோழர்கள், மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியப் பள்ளி மாணவர்கள் திருக்குறள் நிகழ்வுகளை நடத்தினர். தமிழ்நாட்டுக் கல்வி இயகக்த்தின் மாணவர் கள் கவினுதல், ஆனந்தி, தமிழ்சமரன் (எ) தர்மசாஸ்தா, கலைச்செல்வி, ஆதிரை, பாடகர் குரு அய்யாதுரை ஆகியோர் உரை, பாடல், கலை நிகழ்வுகளை நிகழ்த்தி னர். தோழர் ஒப்புரவாளன் அவர்களுக்கு மரியாதை செய்யப்பட்டது.



திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன் நெறியாளுகை செய்தார். மே பதினேழு இயக்க ஒருங்கிணைப்பாளர் லெனாகுமார் நன்றியுரை ஆற்றினார். மாநாட்டின் நிறைவரங்காக மாலையில் அரசியல் தலைவர்கள் பங்கேற்ற அரசியல் அரங்கு நடைபெற்றது. பறை இசையுடன் இந்த அரங்கு துவங்கியது.

இந்த அமர்வுக்குப் பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் பொழிலன் தலைமை தாங்கினார். திராவிடர் கழகத்தின் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச்செயலாளர் நாடாளு மன்ற உறுப்பினர் வைகோ, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் தொல். திருமாவளவன், திராவிடர் இயக்கத் தமிழர் பேரவைத் தலைவர் சுப.வீரபாண்டியன், மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா, இந்திய சமூக சனநாயகக் கட்சி தேசிய துணைத் தலைவர் தெகலான் பாகவி, திரைப்பட நடிகர் சத்தியராசு, மலேசியாவைச் சேர்ந்த பேராசிரியர் திருமாவளவன், தமிழக மக்கள் புரட்சிக் கழகத்தின் தலைவர் அரங்க குணசேகரன், தமிழக மக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைவர் கே.எம்.செரிப், காஞ்சி மக்கள் மன்றத்தின் தோழர் மகேசு, திராவிடத் தமிழர் கட்சியின் தோழர் சங்கர், நீரோடை அமைப்பின் தோழர் நிலவன், இனங்களின் இறையாண்மைக் கான இளைஞர் மாணவர் இயக்கத்தின் தோழர் பாவெல், தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கத்தின் தோழர் நிலவழகன், தமிழ்நாடு திராவிடர் கழகத்தின் தோழர் கா.சு.நாகராசன் ஆகியோர் திருக்குறள் குறித்து சிறப்புரை ஆற்றினர்.

புத்தர் கலைக் குழுவின் தோழர்கள் பறை இசை நிகழ்த்தி தோழர் மணிமாறன் மற்றும் மகிழினி மணிமாறன் ஆகியோர் திருக்குறள் குறித்த பாடலைப் பாடினர்.

மாநாட்டில் மூன்றாவதாக பிற்பகலில் கருத் தரங்க அமர்வு நடைபெற்றது. இந்த அமர்வுக்கு மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் தோழர் முகிலன் தலைமை தாங்கினார்.



தமிழ்ப்புலிகள் கட்சியின் பேரறிவாளன், தமிழர் விடுதலைக் கழகத்தின் ஒருங்கிணை ப்பாளர் செள.சுந்தர மூர்த்தி, கணியன் பாலன், தழல் தேன்மொழி ஆகியோர் முன்னிலை வகித்தனர். தமிழர் விடியல் கட்சியின் ஒருங்கிணைப் பாளர் இளமாறன் வரவேற்புரை வழங்கினார்.

கருத்தரங்கில் திராவிடர் விடுதலைக் கழகத்தின் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், சொல்லாய் வறிஞர் அருளியார், பேராசிரியர் வீ.அரசு, சூலூர் பாவேந்தர் பேரவையின் செந்தலை ந.கௌதமன், திராவிடர் கழகத்தின் பிரச்சாரச் செயலாளர் வழக்கறிஞர் அருள்மொழி, எழுத்தாளர் பா.செயப்பிரகாசம், டிசம்பர் 3 இயக்கத்தின் தலைவர் தீபக், அரங்கையா முருகன் ஆகியோர் கருத்துரை ஆற்றினர்.

மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடமைக் கட்சியின் தோழர் வாலாசா வல்லவன் வரவேற்புரை வழங்கினார்.

தமிழ்ப்புலிகள் கட்சியின் தலைவர் நாகை திருவள்ளு வன் மற்றும் தமிழர் விடியல் கட்சியின் ஒருங்கிணைப் பாளர் டைசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். விடுதலைத் தமிழ்ப் புலிகள் கட்சியின் தலைவர் குடந்தை அரசன் தொடக்க உரையாற்றினார். மே பதினேழு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் திருமுருகன் காந்தி மாநாட்டுத் தீர்மானங்களை முன்மொழிந்தார்.

தந்தை பெரியார் திராவிடர் கழகத்தின் தோழர் சீனி.விடுதலை அரசு நெறியாளுகை செய்தார். பெரும் திரளான மக்கள் கலந்து கொண்ட இம்மாநாடு நாள் முழுதும் சிறப்புற நடைபெற்று; இரவு நிறைவுற்றது.

**- மே 17இயக்கம் முகநூல் பதிவு**

## "திராவிடர் கழகம் என்றால் என்ன?"

**- தந்தை பெரியார்**

திராவிடர் கழகம் ஓர் எதிர்ப்பு உணர்ச்சி ஸ்தாபனம் அதன் வேலைகள் பின்வருமாறு;

1 இந்து சமுதாயத் துறையில்:

பார்ப்பன எதிர்ப்பு,வைதீக எதிர்ப்பு, மூடநம்பிக்கை எதிர்ப்பு,சாஸ்திர புராண,இதிகாச எதிர்ப்பு, ஜோசியம், சகுனம், சடங்கு,யாகம் எதிர்ப்பு.

2 மதத் துறையில்:

கடவுள்கள் எதிர்ப்பு,கோவில்,பூசை,உற்சவங்கள் எதிர்ப்பு,ஆன்மா மேல் உலகம் எதிர்ப்பு,மோட்சம்-நரகம் எதிர்ப்பு.

3 அரசியல் துறையில் :

காங்கிரஸ் எதிர்ப்பு,பார்ப்பன ஆதிக்கம் எதிர்ப்பு, மத்திய அரசாங்க எதிர்ப்பு,ஹிந்தி எதிர்ப்பு.

4 கல்வி-கலை-இலக்கியத் துறையில்: ஆரிய கலாச்சார, அனுஷ்டான, வர்ணஸ்ரம, மத கருத்துக் களை புகுத்தும் கல்வி கலை இலக்கியம் எதிர்ப்பு.

5 பொருளாதாரத் துறையில் : சுரண்டப்படுதல், குவிக்கப்படுதல் எதிர்ப்பு.

இந்த தன்மைகள் கொண்டதுதான் திராவிடர் கழகம். இந்த உணர்ச்சி கொண்ட வேறு எந்த ஸ்தாபனங்களுடனும் கழகம் ஒத்துழைக்கும். மேலும் கழகம் எதிர்ப்பில்தான் உற்சாகமுள்ளதாக இருக்குமே தவிர ஆதரிப்பை அவ்வளவாக விரும்பாது.

- விடுதலை.
7.4.1952

## சிந்தனையாளன் வளர்ச்சி நிதி - செப்டம்பர்-2019

| | | |
|---|---|---|
| **துரை சித்தார்த்தன்** | காட்டுமன்னார்கோயில் | 1000/- |
| முனைவர் **அ. ஆறுமுகம்** | திருமழபாடி | 500/- |
| **பாவேந்தன்** | அரக்கோணம் | 500/- |
| **இரா.பச்சமலை** | சென்னை | 500/- |
| பாவலர் **வையவன்** | திருவண்ணாமலை | 500/- |
| **தமிழ்நாடன்** | குவைத் | 500/- |
| **மதனகவி** | வாணியம்பாடி | 500/- |
| **சோ.அண்ணாதுரை** | பெங்களூரு | 500/- |
| **மோ.சி. சங்கர்** | வேலூர் | 200/- |
| **கி. இராமச்சந்திரன்-மேகலா** | வாலாசாபேட்டை | 200/- |
| **ப.வெங்கடேசன்-அரங்கமணிமொழி** | வாலாசாபேட்டை | 200/- |
| **வசந்தா மதியழகன்** | அரியலூர் | 200/- |
| **இளவரசன்,** தமிழ்க்களம் | அரியலூர் | 200/- |
| **சி. இலக்கியா** | சென்னை | 100/- |
| **அ. லயா** | கிழக்கு லண்டன் | 100/- |
| **சி. அகிலா** | சென்னை | 100/- |
| திருமதி. **சகுந்தலா குப்புசாமி** | சிறுநாத்தூர் | 100/- |
| **மா. சுப்பிரமணி - கஸ்தூரி** | தாம்பரம் | 100/- |
| **மு.செயபால்** வழக்குரைஞர் | திருவண்ணாமலை | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | 100/- |
| **கோ.நக்கீரன்** | சோளிங்கபுரம் | 100/- |
| **க.பிரபாகரன்** | தஞ்சாவூர் | 100/- |
| **இரா.காந்தி** | வடக்கு மாங்குடி | 100/- |

## மா.பெ.பொ.க. வளர்ச்சி நிதி - செப்டம்பர்-2019

| | | |
|---|---|---|
| புலவர் **இரா.கலியமூர்த்தி** | சிறுகடம்பூர் | .... 100/- |
| **பொ.சுப்பிரமணியன்** | கீழ்பென்னாத்தூர் | .... 100/- |
| **முத்து அன்பழகன்** | சீர்காழி | .... 100/- |
| **அழகு அன்பழகன்** | சீர்காழி | .... 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | .... 100/- |

**மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிக்காக** வெளியிடுவர், ஆசிரியர் **வே.ஆனைமுத்து,**
மனை எண்.277/2, சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை, அம்பத்தூர், சென்னை - 600 050.
அச்சிட்டோர் : **பெரியார் அச்சிடுவோர் வெளியிடுவோர் குழுமம்,** சென்னை-50. ☎ : 9597526990

Printed by **V. ANAIMUTHU** and Published by V. Anaimuthu on behalf of Marxist Periyarist Communist Party, and printed at Periyar Printers & Publishers Place of Printing No.277/2, Chennai-Tiruvallur High Road, Ambattur, Chennai-50. Editor : **V. ANAIMUTHU**